கல்கி

திருவாரூர் சிறப்பிதழ்

29.5.94

KALKI ரூ. 3.00



உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.




அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சத்துகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்ல மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.



பெட்டியில் குறிப்பிட்டுள்ள தயாரிக்கும் விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25,
புதுடில்லி-110016

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனபின் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.

வீட்டிலே சீனர்; வெளியே தமிழர்!



பார்த்தாலே சீனாக்காரர் என்று தெரியவில்லையோ? பெயர் வென் ஹூ-வா நூங். திருவாரூரில், பிரசித்தமான பல் வைத்தியர். தயக்கமாக, ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்ததும், "தமிழிலேயே பேசுவோமே?" என்று துல்லியமான இன்ப அதிர்ச்சி தந்தார்!

"இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்பு, என் பெற்றோர், விடுமுறையைக் கழிக்க இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர். திரும்பிப் போக இருந்த சமயம், போர் ஆரம்பமாகி விட்டது. இங்கே தஞ்சை மாவட்டத்தில் என் அப்பாவுக்குத் தெரிந்த நண்பர் ஒருவரின் உதவியால் இங்கேயே தங்கிவிட்டார்கள். போர் முடிந்து, திரும்பிப் போவதாகத்தான் திட்டம். ஆனால் ஏனோ, அவர்களுக்கு மறுபடி சீனா போக விருப்பமில்லை. இந்த நாடு பிடித்து விட்டது!" என்கிறார் நூங்.

"எனில், நீங்கள் பிறந்தது இந்தியாவில் தானா?"

"ஆமாம். இதே திருவாரூர்தான்! அதனால் எனது கலாசாரம் என்றால் வீட்டில் சீனம், வெளியே தமிழ்!"

"பேச்சு மொழி?"

"அதுவும் அப்படியே. வீட்டில் மட்டும் சீனம். படித்ததெல்லாம் தமிழ் மீடியம்தான்."

"ஆரம்பத்திலிருந்தே இருவித கலாசாரத் திணிப்பு ஒரே சமயத்தில் ஏற்பட்டதனால் சிரமமாக இல்லையா - ஏற்றுக் கொள்வதில், நடைமுறையில் பிரச்னை ஏதும்...?"

"கஷ்டம்தான். சொல்லப் போனால் தமிழ் கலாசாரம் எனக்குச் சுலபமாகப் பிடிபட்டு விட்டது. ஏனெனில் அதிகம் புழங்குவது தமிழர்கள் மத்தியில்தானே? வீட்டில் என் அம்மாதான் எனக்கு சீனக் கலாசாரம் சொல்லிக் கொடுத்தது. அது வீட்டோடு சரி."

"உங்கள் படிப்பு?"

"நாகப்பட்டினம் - திருவாரூரில்தான். மற்ற பாடங்களை விட தமிழில் ஈடுபாடு கொஞ்சம் கூடுதலாக இருந்தது. காரணம், இதன் வார்த்தை அமைப்புகள் மற்றும் 'ழ' போன்ற விநோதம். சின்ன வயதில் மனப்பாடப் பகுதியில் வந்த செய்யுள்களில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினேன். அது போல நாமும் எழுத வேண்டும் என்று ஆர்வம் வந்தது. கவிதையா, இல்லையா என்பதெல்லாம் தெரியாது - ஏதோ கொஞ்சம் எழுதியிருக்கிறேன்."

"தமிழ் மக்கள் உங்களை எப்படி ஏற்றுக் கொண்டார்கள்?"

"பள்ளி நாட்களில் இதர பையன்கள் 'சப்பை மூக்கு' என்று கிண்டல் பண்ணுவார்கள். வெளியே வந்தாலே விநோதமாகப் பார்ப்பார்கள். குசுகுசுவென்று தமக்குள், என்னைப் பற்றிப் பேசிக் கொள்வார்கள்."

"ரொம்ப வருத்தமாயிருக்கும் இல்லை?"

"வருத்தமா! தமாஷாயிருக்கும். முகம் தவிர வேறு எந்த ஸ்பெஷல் தகுதியும் இல்லாமல், ஒரு கலவை ஏற்படுத்த முடிகிறதல்லவா!" என்று சிரிக்கிறார் நூங்.

இந்தப் பல் வைத்தியரின் வேறு சில சிறப்புத் தகுதிகள் படம் வரையும் ஆற்றலும், படம் எடுக்கும் ஆசையும்!

"என்னுடைய ஓரிரு படங்கள் குமுதத்தில் வந்திருக்கின்றன" என்கிறார். திருவாரூரில் உட்கார்ந்து கொண்டு, சென்னையில் இயங்கும் பத்திரிகைகளோடு தொடர்ந்து தொடர்பு கொள்வதில் உள்ள சிக்கல்களால்தான் தன்னால் ஒரு பிரபல ஓவியராக ஆக முடியாமல் போய்விட்டது என்கிறார்.


அப்புறம் இவரது சினிமா இயக்கும் ஆசை. யாரிடமும் சான்ஸ் கேட்டு அலையாமல் முப்பதாயிரம் ரூபாயில் தாமே ஒரு வீடியோ ஃபிலிம் எடுத்திருக்கிறார்.

அதுசரி; பல் வைத்தியருக்குப் படம் எடுக்கும் ஆசை வரக்கூடாதென்று யாரும் சொல்லியிருக்கிறார்களா என்ன!

வாழ்த்து சொல்லிக் கிளம்பியபோது வணக்கம் சொல்லி வழியனுப்பினார் அந்த சீனத் தமிழர் - ஸாரி - தமிழ்ச்சீனர்(?)

– பா.ரா.

தலங்கள்... தகவல்கள்...



* தியாகராஜர்

முத்து முத்தாக மூன்று வீடுகள்!

'சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த ஊர்- அவர்களின் வீடுகளைப் பார்க்க இங்கு இறங்கவும்' என்று திருவாரூர் ஸ்டேஷனிலேயே எழுதி வைத்திருக்கிறார்கள்.

'நினைவுச் சின்னங்கள் அமைத்து விட்டால் மட்டும் போதுமா? அவற்றை நல்ல முறையில் பாதுகாத்து, பராமரிக்க வேண்டாமா?' என்ற ஆதங்கம் பல சமயங்களில் நமக்கு எழுவதுண்டு. அந்த கைய மனக்கஷ்டத்துக்கே இடமின்றி மிக நேர்த்தியான பராமரிப்பில் இருக்கின்றன, திருவாரூரில் மும்மூர்த்திகள் அவதரித்த இல்லங்கள்.


சியாமா சாஸ்திரியின் வீட்டில் செம்பருத்தி மாலை கட்டி அவர் படத்துக்குச் சார்த்திக் கொண்டிருந்தார்கள். வெயில் விழும் முற்றத்தையொட்டிய தாழ்வாரத்தில் சுவரில் சாஸ்திரிகள் படம்; பக்கத்தில் வெண்கலச் சிலை. தீப ஆராதனை காட்டி பிரசாதம். ''பாடறேளா?'' என்று மென்மையாக வேண்டுகோள் விடுக்க, நாம் யாருக்கும் 'கஷ்டம்' கொடுக்க விரும்பவில்லை!

தியாகய்யர் வீட்டில் பெரிய கூடம். அதையொட்டிய தவிலறையில் படமும் சிலையும் தவிர பழைய மிருதங்கம் ஒன்று. அந்த வீட்டை இடித்துக் கட்டிய போது கிடைத்ததாம். தியாகையர் காலத்ததாக இருக்கும் என்று நம்ப இடமிருக்கிறது என்கிறார்கள்.

வீணை வகுப்புகள் நடக்கின்றன, தீக்ஷிதர் பிறந்த இடத்தில்... பின்னணியில் தியாகராஜர் முதலான தெய்வங்களின் உருவங்கள். அவர்கள் காலடியில் தீக்ஷிதரின் வெண்கலச் சிலை; சிவப்புப் பட்டு குடை அடியில் அமர்ந்து தீக்ஷிதர் 'சீதம்ம மாயம்ம' கேட்டுக் கொண்டிருக்கிறார்.

திருவாரூக்குப் பெருமை சேர்ப்பவர்கள் சங்கீத மும்மூர்த்திகள் மட்டுமல்ல.....அவர்களின் இல்லங்களை சிறப்பாகப் பராமரிக்க ஏற்பாடுகள் செய்த அமைப்பும் அப்பணியைச் சிரத்தையுடன் செய்து வரும் உள்ளூர் வாசிகளும் கூடத்தான்.

* இங்க் பிள்ளையார்



பவித்ரமாணிக்கம் : வாசகர் கோட்டை!

பவித்திரமாணிக்கம் பாஸ்கர், பவித்திரமாணிக்கம் முருகேசன், பவித்திர மாணிக்கம் தென்றல் இளங்கோ, பவித்திர மாணிக்கம் கதிரேசன்...

வானொலி நேயர் விருப்பமோ, பத்திரிகையில் வாசகர் கடிதம், கேள்வி பதில் பகுதிகளோ - பவித்திர மாணிக்கத்தின் ஆக்கிரமிப்பு இல்லாமல் போகாது.

திருவாரூரை அடுத்த பவித்ரமாணிக்கம் கிராமத்தில் இந்த ரசிக நேயர்களைச் சந்திக்கும் ஆவலில் சென்றபோது, வாசகர் கடிதம் எழுதுவதென்பதை இவர்கள் ஒரு யாகம் மாதிரி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது புரிந்தது.

காரணம் கேட்டால் ஆர்வம், தங்கள் பெயரைப் பத்திரிகையில் பார்க்கும் சந்தோஷம், இதன்மூலம் தனது 'இருப்பை' வெளிக்காட்டிக் கொள்வது என்பது போல வேறு வேறு காரணங்கள் சொல்கிறார்கள். பழைய ரெக்கார்டுகளை பிரேக் பண்ணும் போட்டி மனப்பான்மையும் நிலவுகிறது!

மளிகைக் கடை வைத்திருக்கும் பாஸ்கர் சொன்னார்: ''முன்னெல்லாம் ஒரு வாரம் டைம் இருக்குதேன்னு இருப்

பேன். ஒரு கடிதமும் பிரசுரம் ஆகாது. அப்புறம்தான் 'டெக்னிக்' புரிஞ்சுது. இப்பல்லாம் கடைவாசல்லயே, படிச்சிப் பார்த்துவிட்டு லெட்டர் எழுதிப் போட்டப்புறம்தான் பத்திரிகை வாங்கினதுக்குண்டான காசையே குடுக்கறது!''

லெண்டிங் லைப்ரரி வைத்து நடத்தும் தென்றல் இளங்கோ, வாசகர் கடிதத்தை விட கேள்வி - பதில் பகுதிகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார். அவரது 'தொழில் ரகசியம்': ''முன்னெல்லாம் 'ஒப்பிடுக' கேள்வி கேக்கறது ரொம்ப பாப்புலர். இப்ப அதெல்லாம் அவுட் - ஆஃப் ஃபேஷன் சார்! கேள்விகள் ரொம்ப ஷார்ப்பா இருக்கணும்னு எதிர் பார்க்க றாங்க.


● தமிழ்மணர்



● முருகேசன்

'குமுதத்துல' கூட சீரியஸான கேள்வியெல்லாம் வருது. கல்கி பத்தி கேக்கவே வேணாம். 90% அரசியல் சம்பந்தமான கேள்விக்குத்தான் உங்க 'தராசு' பதில் சொல்றாரு. அந்த மாதிரி கேள்விங்க கேட்கணும்னா நிறைய படிக்க வேண்டியிருக்குது. நியூஸ் பேப்பரை ஒரு வரி விடக் கூடாதுங்க. அப்புறம் ஒரு தடவை, ரெண்டு தடவை எழுதிட்டு பதில் வரலைன்னு சோர்ந்துடக் கூடாதுங்க. நான் எழுத ஆரம்பிச்சி ஆறேழு மாசம் கழிச்சிதான் நீங்க முதல் தடவையா என் கேள்விக்கு பதில் எழுதினீங்க'' என்று நம்மையே மடக்கினார் தென்றல் இளங்கோ.

முற்றிலும் வானொலி நேயராகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் முருகேசனின் தொழில் ரகசியம் ரொம்ப சிம்பிள். 'பழைய பாட்டு கேட்டா பிரச்னையே இல்லீங்க. எப்படியாவது போட்டுருவாங்க. அதுவும், ரொம்ப ஹிட் ஆகாத பாட்டுன்னா, நம்ம பேரை மட்டும் 'விரும்பிக் கேட்ட நேயர்'ல படிப்பாங்க. அதுல ஒரு தனி ஜாலி!''


● தென்றல் இளங்கோ


● பாலகர்


● கோவர்த்தன நாயுடு


உள்ளூரில் ஒரு இளைஞர் சங்கம் அமைத்து பொது நலக் காரியங்களும் செய்து வருகிறார்கள் இந்த இளைஞர்கள்!

தலைவர்களின் டாக்ஸி டிரைவர்

கோவர்த்தன நாயுடு டாக்ஸி ஓட்டுவது பெரிய விஷயமில்லை. திருவாரூருக்கு வரும் (பெரும்பாலும் தேர்தல் சமயங்களில்) தலைவர்களுக்கெல்லாம் இவர்தான் ஆஸ்தான டிரைவர். க.சந்தானம்,சர்தார் வேதரத்தினம் பிள்ளை, நாடிமுத்துப் பிள்ளை, பெரியார், அண்ணா, காமராஜர், கலைஞர் என்று இவர் வண்டியில் ஏறாத தலைவர்களே இல்லை!


● சியாமா சாஸ்திரிகள் இல்லம்

''1952ல் குடவாசலில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடப் பெரியார் வந்தபோது அவரோடு இருந்த அந்த தினங்களை மறக்க முடியாது'' என்கிறார் இந்த



பிரேசில் நாட்டின் ரியோ-டி-ஜனிரோவில், கட்டடப் பணி நடக்குமிடத்திலிருந்த டிராக்டர் மோட்டாரை இயக்க, அந்த சத்தத்தினால் பக்கத்தில் உள்ள தேனடையில், இருந்த சுமார் 50,000 தேனீக்கள் எரிச்சலடைந்து அருகிலிருந்த சப்வே ரயில் ஸ்டேஷனில் புகுந்து, பயணிகளைக் கொட்டி, பதம் பார்த்துவிட்டன. திடீரென ஏற்பட்ட பதற்ற நிலைமையில் மக்கள் தப்பிப் போக இடமில்லாமல் தவித்தார்கள். இதில் படுகாயம் அடைந்தவர்கள் 100 பேர். தேனீ கொட்டியதால் ஒரு பெண்மணி இறந்தார் .

தகவல் : சீவ

ஆதாரம் : தி டைம்ஸ் ஆஃப் இந்தியா

முன்னாள் ராணுவர். ''மதம், ஜாதி, வர்க்கம் எல்லாம் தாண்டிய மனித நேயம்னா என் னன்னு அன்னிக்கு அவருகிட்டேருந்து தெரிஞ்சிக்கிட்டேன்.''

இத்தனை தலைவர்களோடும் இவரது 'பயண அனுபவம்' வெகு ரசமானதுதா னெனினும் அவர்கள் தேர்தல் சமயத்தில் வந்திருந்ததால், அப்போது அவர்கள் தங்களுக்குள் பேசிய விஷயங்கள் - 'என்னதான் சுவாரஸ்யமானதென்றாலும் - வெளியே சொல்வது என் தொழில் தர்மம் ஆகாது!' என்று அன்போடு மறுக்கும் கோவர்த்தன நாயுடு, இன்று திருவாரூரில் ஒரு கார் டிரைவிங் -ஸ்கூலில் பயிற்சியாளராகப் பணியாற்றுகிறார்.

இங்க் பிள்ளையார்!

கமலாலய மேல் கரையை ஒட்டி உட்கார்ந்திருக்கும் இங்க் பிள்ளையாரின் 'அருளை' ஒட்டு மொத்தமாகக் குத்தகை எடுத்திருப்பவர்கள் பள்ளி மாணவர்கள்.

ஒவ்வொரு பரீட்சைக்குப் போகு முன்பும் - பரீட்சை முடிந்த பின்பும் பேனாவில் மிச்சமிருக்கும் இங்க்கை, இந்தப் பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்தால் 'கண்டிப்பாக பாஸ்' என்று நம்பிக்கை! (இன்று நேற்றல்ல; காலம் காலமாக!)

பின்னாளில் சில குறும்புக்காரப் பிள்ளைகள் இந்த 'லிஸ்டத்'தை இன்னும் கொஞ்சம் 'டெவலப்'பண்ணி, பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்தது போக துளி இங்க் பாக்கி வைத்து, வாத்தியார் முதுகிலும் உதறினால் 'பாஸ்' 100% உத்திரவாதம் என்று புதிய முறையை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்!

இங்க் பிள்ளையார் தவிர இன்கம் டாக்ஸ் பிள்ளையார், பெருங்காயப் பிள்ளையார் என்பதான அதிசயப் பெயர்களோடும் விநோத நம்பிக்கைகளோடும் திருவாரூரில் இன்னும் ஏராளப் பிள்ளையார்கள்.

'குஷ்பு'வுக்குப் புதுப்பெயர் சூட்டியவர்

பழைய பெயர் சரவணன்; புதுப் பெயர் தமிழனார். மனைவி கலாவின் பெயரைத் தமிழச்சி என்றும் மாற்றியிருக்கிறார். மகனின் பெயர் குறளேந்தி. இந்தத் தமிழ் ஆர்வலர் திருவாரூர் நகரின் பெயர்ப் பலகைகளையெல்லாம் தூய தமிழ்ப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். ஆயிரம் கடைப் பலகைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்களை இவர் தர, பத்து பேர் மட்டுமே மாற்றி எழுதிக் கொண்டார்கள்.

தளரவில்லை தமிழனார். ''இயற்றமிழ் பயிற்றகம்'' என்ற அமைப்பின் மூலம் தமிழ்ப் பற்றுக் கொள்கையையும் ''இயற்றமிழ் இருத்திலக்கிய திங்களிதழ்'' மூலம் பேய் மறுப்பு, கடவுள் மறுப்பு, கணிய (ஜோதிட) மறுப்பு கொள்கைகளையும் பரப்பி வருகிறார். பத்து இலக்கண நூல்கள் எழுதியிருக்கிறார். திருவாரூரில் திரு.வி.க. வுக்குச் சிலை வைக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டவரும் இவரே. சிறந்த கவிஞர்கள், எழுத்தாளர்களைப் பாராட்டி, கௌரவித்து வருகின்றது இவர்கள் அமைப்பு.

'தமிழாகவே மாறிவிட்ட பல வேற்று மொழிச் சொற்களைத் திருத்தவும் மாற்றவும் வேண்டுமா? வேற்றுமொழிச் சொற்களைத் தனதாக்கிக் கொண்டால் ஒரு மொழி வளர்ந்ததாகாதா?' என்று கேட்டால் தமிழனார் ஒப்புக் கொள்வதில்லை.

''நம் மொழியில் இல்லாதது என்று பிறமொழியில் தேடிப் போவதில் அர்த்தமே இல்லை. நல்ல சொற்கள் நம்மிடமே இருக்க, ஏன் வேற்று மொழியை நாடிப் போக வேண்டும்?'' என்கிறார்.

இவரது தமிழ் வேகம்- தாகம் எந்த அளவுக்கு வீரியம் வாய்ந்தது என்பதற்கு மற்றொரு சான்று, ரஜினிகாந்தை 'இரவு விரும்பி' என்றும் விஜய காந்தை 'வெற்றி விரும்பி' என்றும் குஷ்புவை 'செம்பூ' என்றும் இவர் மறத்தமிழ்ப் படுத்தியிருப்பதே!

வாசகர் தகவல்: வி.பன்னீர்செல்வன், மாங்குடி ஜெய்சங்கர், பாஸ்கர், ஜி.ஜி. கிருஷ்ணன், ஆர். சிவராமகிருஷ்ணன், சுதன்ராஜ்.



என்ன நடக்கிறது ஏமனில்?

இந்திய விமானப்படையின் விமானங்களிலும், ஏர் இந்தியா விமானங்களிலும், ஏராளமான இந்தியர்கள் ஏமன் நாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள், பத்து நாட்களாக. காரணம் -

ஏமனில் நடக்கும் உள்நாட்டுப் போர்.

சரியாக நாலு வருடங்களுக்கு முன்னால்தான் தெற்கு ஏமனும் வடக்கு ஏமனும் ஒரே நாடாக இணைந்தது. சென்ற வருடம், ரொம்ப ஒழுங்காகத் தேர்தலும் நடந்தது. வடக்கு ஏமன் அதிபர், அலி அப்துல்லா சலே முழு ஏமனுக்கும் அதிபராகவும், தெற்கு ஏமன் அதிபர், அலி சலேம் அல் பெய்த் துணை அதிபராகவும் பதவி ஏற்றனர். என்றாலும், இரு பகுதிகளைச் சேர்ந்த ராணுவ வீரர்களிடையே மனத்தளவிலான இணைப்பு, ஏனோ இதுவரை உருவாகவே இல்லை.

சென்ற அக்டோபரில் மெல்ல இரு பகுதிகளைச் சேர்ந்த அமைச்சர்களுக்கு இடையேயும் புகைச்சல் ஆரம்பித்தது. 'வடக்கு வாழ்கிறது-தெற்கு தேய்கிறது' என்று தெற்கு ஏமன் மக்கள் புகார் செய்ய, இந்த பிப்ரவரி மாதம்தான் அம்மானில் ஒரு சமரச ஒப்பந்தம் கூடக் கையெழுத்தாகிற்று.

வடக்கு ஏமன், பழங்குடி மக்கள் நிறைந்தது என்றால், தெற்கு கொஞ்சம் முற்போக்கானது. வடக்கு ஏமன் அதிபர், பொது ஜன காங்கிரஸ் கட்சிக்காரர். தெற்கு ஏமன் அதிபராயிருந்த, இப்போதை துணை அதிபர், ஏமன் சோஷலிஸ்ட் கட்சிக்காரர். மார்க்ஸீய கொள்கைகள் உடையவர். வடக்கு, இஸ்லாமிய - பழைமை வாதத்தில் பழகிப் போன பகுதி.

''இது சின்னச் சச்சரவுதான். வெளியார் சமாதான முயற்சி எதுவும் தேவை இல்லை!'' என்று அதிபர் சலே சொல்லுகிறார்.

அதிபர் சலேயின் குற்றச்சாட்டுக்கள் சற்றுக் கடுமையானவை: பெட்ரோலிய வளத்துறை அமைச்சர் (ஏமன் சோஷலிசக் கட்சிக்காரர்)தான் 300 மிலியன் டாலர் பெறுமான எண்ணெய் திருடுபோகக் காரணம் என்கிறார். இந்தப் பணத்தை எல்லாம் எங்கேயோ ரகசியமாக வைத்திருக்கிறார் என்கிறார் சலே. இவரையும், இவருக்கு உடந்தையாக இருந்ததாக, பாதுகாப்பு அமைச்சரையும் (இவரும் தெற்கு ஏமன்காரர்) வீட்டுக்கு அனுப்பி விட்டார்!

அமெரிக்காவுக்கு வைத்தியம் பார்த்துக் கொள்ளப் போன பிரதமர் ஹைதர் அபு பக்கர் அல் அட்டாஸையும், தெற்கு ஏமன் தலைநகர் ஏடன் ஆளுநரையும், பதவியிலிருந்து விலக்கி விட்டார். இருவருமே தெற்கு ஏமன்காரர்கள்.

ஏடன் நகரம், இன்னும் வடக்கு ஏமன் ராணுவ வீரர்களிடம் சிக்கவில்லை. தெற்கு ஏமன்காரர்கள் மிகத் துணிச்சலாகப் போராடி வருகிறார்கள். வடக்கின் தலைநகர் சனா அருகேயே ஸ்கட் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்! அதிபர் சலே வீண் வீம்புக்கு, சமரச முயற்சி தேவை இல்லை என்று வெளியிலே சொன்னாலும், உள்ளூர மத்தியஸ்தத்தை விரும்புகிறார் என்கிறார்கள்.

ஏமன் நாட்டு மக்கள், ஒருவருக்கொருவரே எமன்களாகி விட்டதுதான் பரிதாபம்.

– சாருகேசி

நடிக்க வருகிறார் இளையராஜா!



வாலி எழுதிய 'ஸ்ரீராமஜெயம்' மேடை நாடகத்தில் கதாநாயகனாக நடித்தவர் சார்லி. ராமகாதைக்கும் இந்த நாடகத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இது ஒரு அரசியல் நையாண்டி நாடகம். இந்த நாடகத்தை ரசித்த இளையராஜா, சார்லிக்குப் பதிலாக வடிவேலுவை கதாநாயகனாகப் போட்டுப் படமாக்கலாமே என்று அபிப்ராயப்பட, ஒரே இரவில் வடிவேலு ஹீரோவானார். எஸ்.பி.முத்துராமன் இயக்க, 'இளையராஜாவின் மோதிரம்' என்ற பெயரும் சூட்டப்பட்டது.

திடீரென்று இரண்டு வதந்தி.

1. வடிவேலு கால்ஷீட் தகராறு. அதனால் படத் தயாரிப்பே கைவிடப்பட்டது.

2. வடிவேலுவே முழுக்க முழுக்க ஹீரோ என்றால், படம் எடுபடுமா என்று தயாரிப்பாளர் விவேக் சித்ரா சுந்தரம் தயங்குகிறார்.

விசாரித்ததில் கிடைத்த உண்மை: வடிவேலு கதாநாயகனாக நடிப்பதில் எந்த மாற்றமுமில்லை. மூலக்கதையில் அரசியல் நெடி அதிகமிருப்பதால், குடும்பம், நகைச்சுவை, செண்டிமெண்ட் என்று கலந்து புதிதாகத் திரைக்கதை எழுதுகிறார் வாலி. அதனால் படப்பிடிப்பு தேதி தள்ளிப் போகின்றது.

* டி.ஆர்: என்னைப் புகழ என்னதடை?



✱ இளையராஜா: நடிக்கிறார்!



✱ வசந்த்: 'லவ்' படத்தை ஆரம்பிக்கிறார்.



✱ சிவாஜி: டி.வி.யில் சுயசரிதம்.

இளையராஜாவின் மோதிரம் பற்றி ஒரு வால் செய்தி:- இ.ராஜா, இசையமைப்பாளராகவே சில காட்சிகளில் நடிக்கிறார். அவர் வடிவேலுவுக்குக் கொடுக்கும் மோதிரம் கடைசியில் திருப்பதி வெங்கடாசலபதிக்கு எப்படிப் போய்ச் சேருகிறது என்பதுதான் கதை!

“வசந்தமான கண்மணி இயக்குநரின் முயற்சியால், முறைத்துக் கொண்டிருந்த ரத்ன இயக்குநரும், இளைய அரசரும் மீண்டும் ஜோடி சேர்ந்திருக்கிறார்கள்...” என்று கிசுகிசு எழுவதை விட, நேரடியாக விஷயத்திற்கு வருவது நல்லது. ஏற்கனவே சென்னையில் வெயில் நாலு பத்தி செய்தியாகக் காய்கிறது.

வசந்த், மணிரத்னத்தின் 'ஆலயம்' நிறுவனத்திற்காக ஒரு படம் இயக்குகிறார். அரவிந்த்சாமி கதாநாயகனாக நடிக்கும் காதல் திரை ஓவியத்தின் பெயர் 'லவ்'. இளையராஜாவுக்காக, தன்னுடைய குருநாதரையே பகைத்துக் கொண்டு, ரஜினியை இயக்கும் வாய்ப்பையே கூட உதறித் தள்ளியவர் அல்லவா வசந்த்? அதனால் 'லவ்' படத்திற்கு இளையராஜா இசை அமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அப்ப, ராஜா-மணி டூ டாய்? போயே போச்சு, போயிந்தே, இட்ஸ்கான்!

சீறிக் குதித்தார் டி.ராஜேந்தர். “ஆபாசமான, வக்கிர எண்ணங்கள் கொண்ட குப்பைப் படங்களை யாரும் வன்மையாகக் கண்டிப்பதே இல்லை. ஆரோக்கியமான விமர்சனமும் செய்வதில்லை. அது போகட்டும்... என்னையும் என் மகனையும் பாராட்டுவதில் கூட சிக்கனம் காட்டுகிறார்கள். குடும்பத்தோடு பார்க்கக் கூடிய கதையும், நல்ல கருத்துள்ள பாடல்களும் கொண்டவை என் படங்கள் மட்டுமே. இந்திய, ஏன் உலகத் திரையிலேயே, கதாநாயகியைத் தொடாமலே நடிக்கும் ஒரே ஹீரோ நான்தான். இதையெல்லாம் ஏனோ யாரும் பாராட்டுவதே இல்லை”என்று ரொம்பவும் வருத்தப்பட்டார். பாராட்ட விரும்புகிறவர்கள் அவருக்கு ரெண்டுவரி எழுதிப்போடுங்கள். மனுஷன் கொஞ்சம் சந்தோஷப் பட்டுக் கொள்ளட்டும்.

சி.வி. ராஜேந்திரன் சிவாஜியை வைத்து ஒரு தொலைக் காட்சித் தொடர் இயக்குகிறார். 'சிவாஜி, ஒரு சரித்திரம்' என்ற பெயரில் எடுக்கப்படும் இந்தத் தொடரில், சிவாஜி தன்னுடைய இளமைப் பருவம், பலம், பலவீனம், ஆசை, ஏமாற்றம், குடும்ப விஷயங்கள், சிந்தனைகள் என்று பிட்டுத்தட்ட ஒரு சுயசரிதம் போல மனம் திறந்து பேசியிருக்கிறாராம்.

இந்தத் தொடருக்கு முன்னுரை தரப் போகிறவர், மாண்புமிகு புரட்சித் தலைவியாக இருக்கலாம் என்பது லேட்டஸ்ட் ஹாட் நியூஸ்!

– ஹர்ஷராஜ்



* ஒ.என். இ.வி. - இறைப்பணைப் பணிகள்...

கடவுளுக்குக் கடன்

"கடன் பட்டார் நெஞ்சம்போல்" என்று ராவணனின் மன உளைச்சலுக்கு உவமை சொன்னார் கம்பர். கடவுளிடமே கடன்பட்டவர்கள் நெஞ்சில் எத்தகைய சூறாவளி வீசும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அப்படி ஆண்டவனிடம் கடன்பட்டவர்கள் யார் என்கிறீர்களா? திருவாரூர் சுற்று வட்டாரத்தில் இருக்கும் ஏராளமான சிறு விவசாயிகள்தான். சாட்சாத் தியாகராஜ சுவாமியிடமே கடன்பட்டவர்கள் இவர்கள்!

தியாகராஜ சுவாமி கோயில் நிர்வாகத்துக்குத் தேவையான கணிசமான தொகையை வசூலித்துத் தரும் பொறுப்பு தருமை ஆதீனத்தின் ராஜாங்க கட்டளையிடம் உள்ளது. திருவாரூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பெருமளவு நிலப்பகுதி இக் கட்டளைக்குச் சொந்தமானது. குத்தகைக்கு விட்டு, அதன் மூலம் கிடைக்கும் தொகையை, கோயில் நிர்வாகத்துக்கு அளித்து வருகிறது ராஜாங்கக் கட்டளை.

நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலமிருந்தும் சுவாமிக்கு வருமானம் இல்லையே என்று நாம் வருத்தப்படுகிறோம்.

குத்தகை செலுத்தாமல் இருப்பது விவசாயிகளுக்குச் சந்தோஷமான விஷயமல்ல என்பதும் கிடாரங்கொண்டான் கிராமத்து விவசாயிகளிடம் பேசிப் பார்த்த போது புரிந்தது.

"நான் இருபது வருஷமா குத்தகை கட்டலைங்க" என்றார் மரகதவல்லி. இவர் இரண்டு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்து வருபவர். புயல், வெள்ளம், வறட்சி என்று ஒவ்வொரு வருடமும் இயற்கையின் சீற்றம் ஒரு புது வடிவம் எடுத்து இவர்கள் பிழைப்பில் மண்ணடிக்கிறது என்றார்.

"கடனை, உடனை வாங்கி விவசாயம் பண்றோம். விளைச்சல் ஒரேயடியா குறைஞ்சு, செலவெல்லாம் போக, விதைக்கு மட்டுமே நெல்லு மிஞ்சுது...." என்றார்.

"இங்கே ஆட்கள் கேட்கற கூலியைக் குடுத்து விவசாயம் பண்ணா வயித்துல ஈரத் துணியைத்தான் போட்டுக்கணும்..." என்றவர் பரமசிவம். ஒரு நாளைக்கு அம்பது ரூபாய் வரைக்கும் கூலி கேட்கறாங்க. அதுலயும் பத்து ரூபாய் அட்வான்ஸா குடுத்துடணும்... போதாக் குறைக்கு உர விலையெல்லாம் எக்கச் சக்கமா ஏறிப்போச்சு. இத்தனை கஷ்டத்துலயும் கூட்டுறவுக் கடனை ஒழுங்காச் செலுத்தி பச்சை கார்டு வாங்கியிருக்கேன். அதைக் காட்டி அரசாங்க விவசாய மையத்துல உரம் வாங்கலாம்னா, நமக்குத் தேவையான பருவத்துல கிடைக்கறதில்ல... காலந்தாழ்த்தி கிடைச்சு என்ன பயன் சொல்லுங்க?" என்று வருத்தப்பட்டார் பரமசிவம். வழக்கமான விளைச்சலில் மூன்றில் ஒரு பங்குதான் இவ்வாண்டு கண்டிருக்கிறார் இவர்.

இப்பகுதி விவசாயிகளுக்கு இன்னொரு பெரிய பிரச்னையும் இருக்கிறது. இந்த வட்டாரத்தின் பாசனத்துக்கென்று வெட்டப்பட்ட கொரங்கொண்டான் வாய்க்காலில் சிலர் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதால் தண்ணீர் வரத்து அடியோடு நின்று போய்விட்டது.

''இதுக்காக நாங்க தொடர் உண்ணாவிரதம்கூட இருந்து பார்த்துட்டோம். அதிகாரிங்க வந்து எங்களைச் சமாதானப் படுத்தி நடவடிக்கை எடுக்கறதாச் சொன்னாங்களேயொழிய காரியம் நடக்கலை'' என்றார் பரமசிவம்.

''பிரச்னைக்கு நாங்களே மாற்று வழி சொன்னோம். பக்கத்துல இருக்கற அடியக்கமங்கலம் வாய்க்கால் தண்ணிய எங்க ஊருக்குக் கிடைக்கச் செய்யலாம். இடிஞ்சு போயிருக்கிற ஒரு பெட்டாமை (கோண மதகு) சரி செய்து கொடுத்தாலே போதும், எங்களுக்குத் தண்ணி கிடைச்சுடும்'' என்றார்.

தண்ணீர் பிரச்னை தாளாமல்
ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கி
'போர் வெல்' போட்ட

பட்டவர்கள்!

நாகச் சொன்னார் மரகதவல்லி.


''விளைச்சலைக் கொண்டு கடனையும் அடைக்க முடியலை; குத்தகையும் அளக்க முடியலை...'' என்று அவர் ஆதங்கப்பட்டபோது பரிதாபமாய் இருந்தது.

''ஒழுங்கா நெல்லு அளந்துக்கிட்டிருந்தவன்தாங்க நான்...'' என்ற காத்தமுத்து, சில பழைய ரசீதுகளையும் நம்மிடம் காட்டினார். 'தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் ராஜாங்க கட்டளைக்குச் செலுத்தப்படும் நெல் வகையறாக்களுக்குக் கொடுக்கப்படும் ரசீது' என்று அச்சிட்டிருந்தது. ''இப்பல்லாம் ஒழுங்கா அளக்க முடியலையே என்கிற வருத்தம் இருக்கு... இத்தனைக்கும் குத்தகை அளவைக் குறைச்சுட்டாங்க. அப்படியும் அவங்க கேக்கற ஏக்கருக்கு அஞ்சு மூட்டையைக் கூட நாங்க தர முடியறதில்லை...'' மெய்யாகவே வருத்தப்பட்டார்.

''நன்றாக விளைஞ்ச காலத்துல மட்டும் குத்தகையச் சரியாக் கட்டினாங்களா?'' என்று கோபப்பட்டார் ராமலிங்கம். இவர் ராஜாங்கக் கட்டளை அலுவலகத்தில் சூப்பரின்டென்டென்ட்.

''ராஜேந்திர சோழன் காலத்துலயிருந்து அமுலில் இருக்கிற ஏற்பாடு இது. அப்போ சுமார் இரண்டாயிரம் ஏக்கர் நிலத்தை, கோயிலுக்குக் கட்டளையாக எழுதி வைச்சாரு அந்த ராஜா. இது தான் பிற்காலத்துல ராஜாங்கக் கட்டளையுடைய மேற்பார்வையின் கீழ் வந்தது. இன்னிக்குத் திருவாரூர் கோயிலுக்கு 55 கிராமத்துச் சொத்து இருக்கு... நஞ்சையில் 586 குத்தகைக்காரர்களும் புஞ்சையில் 315 பேரும் இருக்காங்க. இத்தனை பேர் கிட்டயும் ஒழுங்கா குத்தகை வாங்க நாங்க படற பாடு எங்களுக்கே வெளிச்சம். நீதிமன்ற ஆணைப்படி பதினஞ்சு வருஷ குத்தகை தள்ளுபடி ஆயிடுச்சி. கடந்த நாலு வருஷத்துக் குத்தகைதான் நாங்க கட்டச் சொல்றோம் - அதுவும் ஏக்கருக்கு 450 கிலோ


✱ மரகதவல்லி


✱ கோவிந்தராஜ்


✱ பரமசிவம்


✱ காத்தமுத்து



✱ ராமலிங்கம்

என்று குறைச்சி நிர்ணயிச்சிருக்கோம். ஒவ்வொரு வருஷமும் இதைச் செலுத்தறது கஷ்டமாயிருக்கு என்கிறதை எப்படி ஏத்க முடியும்...?'' என்றார் ராமலிங்கம்.

கிடாரங்கொண்டான் கிராமத்தில் நாம் சந்தித்த சில விவசாயிகளோ, ''இந்தப் பகுதியில் எவ்வளவு பிரச்னை இருக்கு...? வாய்க்கால் பிரச்னை தீர்ந்து தண்ணீர் வர்றதுக்குக் கட்டளைக்காரங்க கொஞ்சம் முயற்சி எடுத்தால்தான் என்ன...?'' என்றார்கள்!

நாளுக்கு நாள் கடன் சுமை ஏறிக் கொண்டிருக்கும் நிலையில் இன்னும் ஒரு பிரச்னையும் இப் பகுதி விவசாயிகளைத் துரத்துகிறது.

''எட்டு மாசத்துக்கு முந்தி ஓஎன்ஜிஸி காரங்க (ONGC) என் நிலத்துல ஒரு பகுதியை எடுத்துக்கிட்டாங்க'' என்றார் காத்தமுத்து. இவர் இரண்டு ஏக்கர் நிலத்தில் குத்தகை செய்து வந்தவர். அதில் ஒரு பகுதியைத்தான் இப்போது ஓ. என். ஜி. ஸி. எடுத்துக் கொண்டிருக்கிறது.

''ஓஎன்ஜிஸில நிலத்தை எடுத்துக்கிட்டா கட்டளைக்குத்தாங்க நஷ்ட ஈடு குடுப்பாங்க.. எங்களுக்கு எதுவும் கிடைக்காது'' என்றும் சொன்னார் காத்தமுத்து.

''கிடாரங்கொண்டான் பகுதியில் இப்போ சுமார் 35 இடங்களை ஓஎன்ஜிஸிக்காரங்க எடுத்துக்கிட்டு எண்ணெய் எடுக்க முயற்சி பண்ணிக்கிட்டிருக்காங்க... இதனால இந்தப் பகுதியில நிலம் ரொம்ப துண்டாடப்பட்டுக் கிடக்கு...'' என்றார் கோவிந்தராஜ் என்கிற பெரியவர்.

சிறு விவசாயிகளின் குத்தகையில் உள்ள ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கரில் பகுதியளவினை, உழக்கிலே கிழக்கு மேற்கு போல் பிரிக்கும்போது ஏற்கெனவே கைக்கும் வாய்க்குமாக இருக்கும் அவர்களின் பிழைப்பு என்னவாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. போதாக்குறைக்கு நஷ்டஈடும் தரப்படுவதில்லை என்னும் போது, தலைமுறை தலைமுறையாக அந்த நிலத்தை நம்பி வாழ்ந்து வருபவரின் கதி என்ன ஆவது?

சென்னை ஓ.என்.ஜி.ஸி. நிறுவனத்தில் விசாரித்தபோது இதுகுறித்து காரைக்காலில் உள்ள தலைமையகத்தில்தான் கேட்க வேண்டும் என்றார்கள். காரைக்காலுக்கு நாம் அனுப்பிய கேள்விகளுக்கு இதழ் அச்சேறும் வரை பதில்கள் வரவில்லை.

ஓ.என்.ஜி.ஸி. நிறுவனம், எண்ணெய்த் தேடலுக்கு உட்படும் நிலத்தை முதலில் குத்தகைக்குத்தான் எடுக்கிறது. எண்ணெய் வளம் இருப்பின் அதனைக் கிரயம் செய்து வாங்கிக் கொள்கிறது. எண்ணெய் கிடைக்காத நிலப் பகுதிகளை குத்தகை காலத்துக்குப் பின் கைவிட்டு விடுகிறது. இவ்வாறு கைவிடப்படும் நிலத்தில் மீண்டும் சாகுபடி செய்யவே முடியாது என்பதும் கவனத்துக்குரிய தகவல்.

இன்னும் சில ஆண்டுகள் சென்றால் இப்படி கைவிடப்பட்ட நிலங்களின் பரப்பளவு எவ்வளவு இருக்கும்; அதை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற கேள்விகள் எழுகின்றன.

படித்தவர்களும் விவரமறிந்தவர்களும் புதிய வேலை வாய்ப்புகளால் பயனடைகிறார்கள். ஆனால் விவசாயத்தைத் தவிர வேறெதுவும் தெரியாதவர்களின்பாடு திண்டாட்டம்தான்.

இந்தப் பிரச்னைகள் குறித்து திருவாரூர் எம். எல். ஏ. தம்புசாமியிடம் (சி.பி.எம்) விசாரித்தோம். ''ஓ.என்.ஜி.ஸி. கையகப்படுத்திய குத்தகை நிலத்துக்கு 75சதம் வரை நஷ்ட ஈட்டினைப் போராடிப் பெற்றுள்ள விவசாயிகளும் உண்டு'' என்றார் அவர். ஆக, ரெவன்யூ டிபார்ட்மெண்டிலோ நீதி மன்றத்திலோ முறையிட்டு, போராடித்தான் குத்தகைதாரர் நஷ்ட ஈடு பெற முடியும் என்ற நிலை. அப்படிப் போராடுவதற்கு அந்த அளவு பண பலமும் மற்ற 'சௌகரியங்களும்' தேவை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். கடன் சுமையால் முதுகு வளைந்து போய்க் கிடக்கும் சிறு விவசாயிகள் நிமிர்வதாவது, போராடுவதாவது? ஏன், அரசே நியாய உணர்வுடன் நடந்து கொள்ளக் கூடாதா?


– சீதா ரவி

வாசகர் தகவல்: லெனின், முரளிதரன்

Kalki Shopping Page

Kalki Shopping Page

Kalki Shopping Page


என்னுடைய கதையில கில்லு முல்லு கிடையாது.. வன்முறை இல்லை... ஆபாசம் கிடையாது... கிளீன் பிக்சர்...
விருதுகளைப் புலிகளுக்குத் தடை நீடிப்பு
நீங்களே எழுதிப்பீங்கன்னு நினைச்சோம்... இந்தாங்க நாங்க எழுதி-னது. இதை வச்சுக்கிட்டு சமாளிங்க...
டொம்மிக்குப்பம் தீ விபத்து
தேர்தல் வந்தவேளை அந்த மனுஷங்க தொகுதிகளையும் இந்த அளவு செஞ்சு-ட்டாரு... இல்லேன்னா இந்நேரம் வேட்டி, சேலை, அரிசி பருப்பு, காசு, பணம் எல்லாம் கிடைச்சிருக்கும்
வேட்பாளர்



கல்கி



1994
மே 29
மலர் : 52
இதழ் : 44
பவ
வைகாசி 15

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

எம்.ஜி.ஆர். கோப்பை:
ஜெயலலிதா படுதோல்வி!

இடைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. அநேகமாக வெற்றி பெற்று விடலாம். எதிர்க்கட்சிகள் எல்லாமே சிதறுண்டும் பிளவுபட்டும் கிடக்கும்போது ஜெ.வெற்றி உறுதி என்றுதான் தோன்றுகிறது.

ஆனால் ஈரோட்டில் நடந்த எம்.ஜி.ஆர். கோப்பைக்கான சிலைப் பந்தாட்டப் போட்டியில் ஜெ.அணியை 4-0 என்ற கோல் எண்ணிக்கையில் திருநாவுக்கரசு அணி தோற்கடித்து வெற்றிவாகை சூடியிருக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே இதில் 'ஜெ' கோட்டை விட்டிருக்கிறார். மூப்பனாரை அழைத்து வந்து, 'எம்.ஜி.ஆர். சிலை திறக்கச் செய்கிறேன்' என்று திருநாவுக்கரசு கூறியதும் கண்ணியமாக அதற்கு இடம் ஒதுக்கி, "போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத இங்கு சிலை நிறுவுங்கள்; அரசு ஒத்துழைக்கும்; நானும் மகிழ்ச்சி அடைவேன்" என்று கூறியிருந்தால், ஜெ.யின் புகழும் கௌரவமும் உயர்ந்திருக்கும்.

அதைவிட்டு, எம்.ஜி.ஆர். என்னமோ தமக்கு மட்டுமேதான் காப்பிரைட் உரிமை போலவும் அவர் சிலையைத் திறந்து வைப்பதும், வைக்காததும் தமது சொந்த விருப்பு-வெறுப்புக்கு உட்பட்டதே என்பது போலவும் நடந்து கொண்ட 'ஜெ', விழா நடக்க முடியாமல் தடுத்து, சிலையைச் சிறைப் படுத்தவும் செய்தார். திருநாவுக்கரசு தரப்புக்கு முதல் கோல் விழுந்தது!

ஈரோடு மக்கள் இதனால் ரொம்பவும் அதிர்ந்து போயிருக்கிறார்கள் என்றும் சிலை வைக்காமல் பெருந்துறைத் தேர்தலைச் சந்திக்க முடியாது என்றும் உணர்ந்த 'ஜெ', கடைசியில் விட்டுக் கொடுத்துத் தாமே சிலை திறந்து வைக்கத் தீர்மானித்தார். இந்தக் கட்டத்தில் மின்னல் வேகத் தாக்குதல் நடத்தி, 'லைட் கிக்' கொடுத்த திருநாவுக்கரசு, ஜெ. எந்த இடத்தில் சிலை திறக்க உத்தேசித்திருந்தாரோ, அதே இடத்தில் தமது சிலையை இரவோடு இரவாக நிறுவிவிட, அவர் அணிக்கு லபோய்பரசுக இரண்டாவது கோல் விழுந்தது!

இதனால் ஆத்திரமடைந்து காவல் துறை மீது முதல்வர் பாய, சிலை மறுபடி அப்புறப்படுத்தப்பட, திருநாவுக்கரசு அணிக்கு மூன்றாவது கோல்!

பின்னர் தாமே தமது கையால் சிலை திறந்து வைத்த ஜெ., ஒரு நொண்டிச் சமாதானம் போல, 'திருநாவுக்கரசு அணி சிலை வைக்க உரிய இடம் தேர்வு செய்யவில்லை' என்றும் 'அவரது எம். ஜி. ஆர். சிலை, கைச் சின்னம் காட்டியது' என்றும் பழிசுமத்தி, ஒரு குரல் அழுதிருக்கிறார். இது ஸேம்ஸைட் கோலாக முடிந்தது! 'கையை உயர்த்தியது ஆசி கூறும் பாவனையில்தானேயன்றி, கைச்சின்னமாகி விடாது' என்று திருநாவுக்கரசு பதிலடி தந்துவிட்டார். 4- 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றும் விட்டார்.

எம். ஜி. ஆர். என்பவர் தமக்கோ அல்லது தமது கட்சிக்கோ உரிய தனிப்பட்ட சொத்து அல்ல என்பதை ஜெயலலிதா இனியேனும் புரிந்து கொள்ள வேண்டும். சரித்திரமாகிவிட்ட அவர், 'ஜெ'க்கு எவ்வளவு சொந்தமோ அவ்வளவுக்குத் தமிழகத்துக்கே சொந்தம். திருநாவுக்கரசு கட்சிக்கு மட்டுமின்றி, ஒரு கால கட்டத்தில் காங்கிரஸுடன் உடன்பாடு கொண்டிருந்ததால் அந்தக் கட்சியும் உரிமை கொண்டாடலாம். ஏன், தி. மு. க. வை விட்டு வெளியேறுமுன் அவரால் எவ்வளவோ நன்மை அடைந்த அந்தக் கட்சியும் இன்று அவரைச் சொந்தம் கொண்டாடலாம். இன்னும் கேட்டால் கோடிக்கணக்கில் உதவி பெற்றவர்கள் என்ற அளவில் விடுதலைப் புலிகள் கூட இன்று அவருக்கு நன்றி தெரிவிக்க எண்ணலாம்!

இப்படி எல்லோருக்கும் சொந்தமான ஒரு சரித்திர புருஷர், இரட்டை இலைச் சின்னம் மட்டுமேதான் காட்ட வேண்டும் என்றும், தான் மட்டுமே தான் அவர் சிலையைத் திறக்க விரும்பினால் திறக்கலாம் என்றும் முதல்வர் கருதும்போது, புதுப்பிக்கப்பட்ட நேரு ஸ்டேடியத்தில் கண்ணியமாக ஆடப்பட வேண்டிய உலகக் கோப்பைக் கால்பந்தாட்டத்தை நாற்றமடிக்கும் நாற்சந்தியில் நடத்துபவராகிறார்.

இதெல்லாம் பகல் கனவு தான்!



◆ 'அரசியலில் அடிதடிகளுக்கும்; ஆர வாரச் செயல்களுக்கும்தான் மதிப்பு. நேர்மை, நியாயம் என்று புலம்பு பவர்கள் அங்கு 'இன்னுக் கீரை'தான் என்பதை உணர்த்தியது 'பெரியவர் சோமு' பாத்திரம். 'காளை' சிறுகதையில் சுப. புண்ணியவனராசனின் அழுத்தமான வரிகள் ஆழ்ந்த சலனத்தை மனத்தில் உண்டு பண்ணின.
அ.சோ. விஸ்வநாதன்.
காட்பாடி.

◆ திருமாமகளின் 'அம்மா வருகிறாள்' சிறுகதை பி.வாசு படம் மாதிரி இருந்தது! (நல்ல அர்த்தத்துல தாங்க!)
எம். கணேசன்.
திருச்சி - 21.

◆ 'காது குடையுங்கள் - முழங்கையால்' ஜோக்கான தலைப்பு. ஜோரான கட் டுரை!
வைத்யா.
டி.வி. நல்லூர்.

◆ 'மாறிய மனமா? மாறுவேடமா?' என்ற தலைப்பில் சிரோமணி அகாலி தளத்தை நம்முடைய அரசாங்கம் அணுக வேண்டிய முறை பற்றித் தெளிவாகக் கூறியிருக்கின்றீர்கள். சிரோமணி அகாலி தளம் காலிஸ்தான் கோரிக்கையை முன் வைக்காது என்று நம்புவோம். அதே சம யத்தில் அவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் கொடுப்பது பற்றி அரசாங்கம் நல்ல முடிவு எடுக்க வேண்டும். பஞ்சாப் மாநிலத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு எடுக்கும் முடிவு மற்ற மாநிலங் களுக்கும் முன்னுதாரணமாக அமைய வேண்டும். இதனால் மற்ற மாநிலங் களில் இருக்கும் பிரிவினைவாதிகளும் மனம் மாறுவார்கள்.
சுந்தர் அழகேசன்.
இருக்கூழி.

◆ தங்களுடைய காரியத்தை லஞ்சம் கொடுத்தாவது முடித்து விட வேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் வேரூன்றிப் போய்விட்ட காலத்தில், எம்.எல்.ஏ.க்களின் சம்பளத்தையும், அமைச்சர்களின் சம்பளத்தையும் யார் சிந்திக்கப் போகிறார்கள்? அப்படியே சிந்தித்தாலும் உங்களுக்கெல்லாம் 'லஞ்சம் ஒரு கேடா' என தைரியத்துடன் வினா எழுப்புவார்களா? இதெல்லாம் பகல் கனவுதான்.
ஆர்.ஏ. வளர்மதி.
கொடுமங்கலம்,

◆ தென் ஆப்பிரிக்கத் தேர்தல் பற்றிய கட்டுரையில், நெல்சன் மண்டேலாவின் வயது 65 என்று தவறாகக் குறிப்பிட் டுள்ளது. அவர் வயது 75.
எஸ். கார்த்திக்.
சென்னை - 5,

◆ மிஸ்டர் ஆர்.பி.ஆர்; "ஊ" ஒரு பாவ மும் செய்யவில்லை, நாம்தான் பாவம் செய்திருக்கிறோம். (படம் பார்க்க நேர்ந் ததைத்தான் சொல்கிறேன்.)
என்.எம். திருஞானம்.
சிதம்பரம்,

■ ஒரு நாய்க்குட்டிக்காக பாடுதாய் ஒன் றரை லட்ச ரூபாய் செலவழித்தார், என்ற செய்தியைப் படித்ததும் வியந்தேன்.
கோயமுத்தூர், கோ. கல்யாணசுந்தரம்.

■ தங்கள் கவலைப்படக்காகத் தன்மான எந்தப் பட்டமுமில்லை, நாட்டையே அடகு வைக்கத் துணிந்தவர்கள் நம் அரசியல் வாதிகள். அப்படியிருக்கையில் ஒரு கோடி ரூபாய் சம்பளம் கொடுத்து அதே காசு கட்ட அவர்கள் லஞ்சம் வாங்கு வதைத் தடுக்க முடியாது.
ஆர். ஸ்ரீகாந்தன்.
சென்னை - 53.

◆ 'இதுவும் எனக்குக் குழந்தைதான்' கவர் ஸ்டோரி, இதயத்தைத் தொட்டது! வாஉலக் குழைந்து வரும் நாய்தான்; அது மனிதருக்குத் தோழனடி பாப்பா என்ற பாரதியின் பாடல் வரிக்கு விளக்கமே இந்தக் கட்டுரை!
அமிர்தவல்லி.
சென்னை - 75,

◆ 'அவசரம் - மிக அவசரம்' கற்பனை என்றே தோன்றவில்லை. நடைமுறை. இதை ஒரு செய்தியாகவே வெளியிட் டிருக்கலாம்.
பெரியகுளம்,
பி.டி. சிதம்பர சூரிய நாராயணன்.

வட்டமேஜை


OKAY!...
SMILE
PLEASE...
CLICK...
CLICK...

''நீ அவசியமா போய்த்தான் ஆகணுமாய்யா...?''

கமலா கவலையாய் கணவனைப் பார்த்துக் கேட்டாள். செவத்தான் வேஷ்டியால் முகத்தை நிதானமாய் துடைத்துவிட்டு, கைலி எடுத்து கட்டிக் கொண்டு அவளைப் பார்த்து சிரித்தான்.

''என்ன இப்படி ஒரு கேள்வி...?''

''இதெல்லாம் பழக்கமானவங்க செய்யற வேலை... தேருக்கு முட்டு போடறது சாதாரண காரியமா...? நான் நேத்தி ஜோடிச்சி வச்சிருக்கிற தேரப் போய்ப் பார்த்தேன். சக்கரம் மட்டும் ரெண்டாளு உசரத்துக்கு இருக்கு... எனக்கு என்னவோ பயமா இருக்குய்யா...'' என்றாள் கவலை தோய்ந்த குரலில்.

செவத்தான் படபடத்தான்.

''பண்ணை வீட்டு ஐயா சொல்றப்ப தட்ட முடியுதா...? ஐயா பேச்சுக்கு எதிர் பேச்சு பேச முடியுமா? வருஷா வருஷம் முட்டு போடற ஆளுங்கல்ல ரெண்டு பேருக்கு உடம்பு முடியலையாம். அதான் என்னை வரச் சொன்னாங்க. எல்லாத்துக்கும் காரணம் இந்த உடம்புதான்'' என்றான். இரண்டு கைகளையும் உயரத் தூக்கி நெஞ்சு நிமிர்த்திக் காட்டினான்.

கமலா ஓரிருவினாடிகள் எல்லாவற்றையும் மறந்து, பொங்கி நின்ற கணவனின் உடம்பைப் பூரிப்பாய்ப் பார்த்தாள்.

''எதையாச்சும் சொல்லி தட்டிக் கழிக்க முடியாதா...?'' மறுபடியும் முகம் சுருங்கிக் கேட்டாள்.


''பைத்தியம் மாதிரி பேசாத. வரேன்னு சொல்லிட்டு மறுபடி மாட்டேன்னு சொல்லச் சொல்றியா? அசடு. அசடு. பெரிய ஐயாகிட்ட ஒரு காரியத்துக்கு அடி போட்டிருக்கேன். அவுங்ககிட்ட எத்தினி மில்லு, ஃபேக்டரிங்க இருக்கு? அதுல ஏதாச்சும் ஒரு வேலை கேட்கப் போறேன். இப்பப் போயி மாட்டேன்னு சொன்னா நல்லாயிருக்குமா? அதுவுமில்லாம தேர் நிலைக்கு வந்தோன்ன முட்டு போட்டவங்களுக்கு வேஷ்டி, துண்டு கொடுத்து மரியாதை செய்வாங்களாம். நீ ஒண்ணும் கவலைப்படாத. எல்லாத்தையும் அந்த தியாகேசன் பார்த்துப்பான்...''

''முட்டுப் போடத்தானுங்களே, வரேங்க....'' என்று சொல்லிவிட்டானே தவிர பிரம்மாண்டமாய் நின்ற தேரையும், நிமிர்ந்து பார்க்க வைத்த அதன் சக்கரத்தையும் இரும்புக் கம்பிகளால் வடத்துக்காக வளைக்கப்பட்ட முறுக்கு கம்பியையும் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த குதிரைகளையும் அருகே நின்று பார்க்கக் கொஞ்சம் பிரமிப்பு கலந்த பயமாகத்தான் இருந்தது.

கூட்டம் வீதி முழுதும் அடைத்துக் கொண்டு நிற்க, தேரைச் சுற்றி போலீஸ்காரர்களாய் நின்றார்கள். இரண்டு சின்னத் தேர்களும் நகர்த்தப்பட்டிருக்க, வீதி இன்னும் விசாலமாய், மனிதத் தலைகளாய் இருந்தது.

''என்ன செவத்தான்.. இதுக்கு முன்னாடி தேருக்கு முட்டுப் போட்டிருக்கியா?'' என்றான் பழனி.

''போட்டிருக்கேன். ரெண்டு வருஷத்துக்கு முந்தி... எங்க ஊர் வாமனர் தேருக்கு போட்டிருக்கேன். அது சாதாரண தேரு. இவ்வளவு பெரிசு கிடையாது. முட்டும்



இத்தினி பெரிசா இருக்காது'' என்றான் பக்கத்தில் வரிசையாக அடுக்கி வைக்கப் படிருந்த பெரிது பெரிதான முட்டுகளைப் பார்த்துக் கொண்டே.

''நேத்தி நான் சொன்ன மாதிரிதான். உடம்பு வலுதான் முக்கியம். ஐயா அத வச்சிதான் ஒன்ன கூப்பிட்டிருக்காங்க. எல்லாராலும் முடியாது. வலு இருந்தாலும் நேக்கா செய்யணும். புல்டோசர் தள்ளும். சக்கரம் அலை பாயும். ரோட்டை வுட்டு எறங்கிடாம, ரொம்ப வேகமா சக்கரம் சுத்த விடாம, ஐயா கைய ஆட்றப்ப முட்ட சக்கரத்து நடுவுல கொடுக்கணும்.''

''புரியுது....'' என்ற செவத்தான் மேலே தொங்கிய சணல் முறுக்கைப் பார்த்தான்.

பக்கத்தில் கிடந்த முட்டுக் கட்டையைத் தூக்கிப் பார்த்தான். கொஞ்சம் பலம் கூட்டி தூக்க முடிந்தது. ஒரு கையால், தொங்குகின்ற கயிற்றைப் பற்றித் தொங்கிக் கொண்டே இன்னொரு கையால் முட்டுக் கட்டையை இழுத்துக் கொண்டே செல்ல வேண்டும். தேர் சற்று வேகமாக ஓடினாலோ அல்லது சாலையை விட்டு விலகுகிற மாதிரி தெரிந்தாலோ சரக்கென்று சக்கரத்தினூடே முட்டை செருக வேண்டும்.

தோளில் மெத்தென்று அடி விழ, செவத்தான் திரும்பினான்.

திருவாரூர் பாபு

பெரிய ஐயா நின்றிருந்தார். ''என்னடா.. ரெடியா இருக்கியா?''

''இருக்கங்க..'' என்று சிரித்தான் கும்பிட்டபடி.

தேருக்குப் பின் இரண்டு சக்கரங்களையும் கிட்டத்தட்ட அணைத்தபடி இரண்டு புல்டோசர்கள் நின்று கொண்டிருந்தது. நான்கு சக்கரங்களுக்கும் ஹைட்ராலிக் பிரேக். சிங்கத் தோல் சுற்றப்பட்ட பிரேக்கின் கம்பிகளைப் பிடித்துத் தொங்கினால் சரக் என்று தேர் நிற்கும். கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இழுக்க.... பின்னால் புல்டோசர்கள் தள்ள.. கடகட வென ஓடும் தேரை கட்டுப்படுத்தி ஓட்ட வேண்டும். தேருக்கு முன்னே கூட்டம் நகர... நகர... பத்தடி பத்தடியாக தேரை நகர்த்த வேண்டும். ஒரேடியாக கிடுகிடு வென தேரை ஓட விடக்கூடாது. கூட்டம் நெருக்கும்.

தேருக்குப் பின்னால் டிராக்டர்களில் முட்டுக் கட்டைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டு வாரி நிறைய - தேர் உட்காரும் என்று கருதப்படுகின்ற இடங்களில் போடுவதற்கு - பெரிய பெரிய மர வார்ப்புகள் தயாராய் இருந்தன.

உயிர்த் தேர்



அறங்காவலர் மணி பார்த்து கையை ஆட்ட... சடார் சடார் என்று சிதறு காய்கள் சாலையில் நொறுங்கின. திடீர் என ஒரு பரபரப்பு ஏற்பட்டது. தீபாராதனை காட்டப்பட்டு, சில ஊர் முக்கிய பிரமுகர்களும் நாலுக்காய்த் தேர் வடத்தை பற்றிக் கொள்ள, அறங்காவலர் கையை உயரத் தூக்கி தேருக்குப் பின்னால் சைகை காட்ட, படபடவென புல்டோசர்கள், இன்ஜின்கள் உதறத் தொடங்கின.

முட்டுப்போட நின்ற அனைவரும் நெடுஞ்சாண் கிடையாக சாலையில் விழுந்து தியாகராஜரை வணங்கினார்கள்.

முன்வால் நின்றவர் பச்சைக் கொடியைத் தூக்கி ஆட்ட.... உற்சாக மக்கள் கூட்டம், ''தியாகேசா...'' என்றபடி வடம் தூக்கி இழுக்க... புல்டோசர்கள் எத்தி விட, தேர் அழகாய், மிக அழகாய்... மெதுவாய் நிலையடியில் இருந்து வழுக்கியது. தேரில் கட்டப்பட்டிருந்த மணிகள் சன்னமாய் சத்தம் போட்டது. தொம்பைகள் அசைந்தன. குதிரைகள் இடதும் வலதுமாய் லேசாக ஆடி, கட்டியிருந்த கயிறுகளை கர கரக்க வைத்தன.

அறங்காவலர் போதும் என்பது போல் கைகாட்ட.... புல்டோசர் நின்றது. சிவப்புக் கொடி மேல் ஏறியது. தேர் நின்றது. விடுபட்ட வடம் இழுவிசையால் படார்படார் என சாலையைத் தேய்த்தது.

தேரோட்டத்தை துவக்கி வைக்க வந்தவர்களும், தியாகராஜருக்கு முகம் காட்ட வந்தவர்களும் நகர்ந்து கொள்ள...

தேர் அழகாய் ஓடத் தொடங்கியது.

தெற்கு வீதியில் அந்த இடம் கொஞ்சம் குறுகலான இடம். இரண்டு பக்கமும் வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அடைத்துக் கொண்டு நின்றாலும், தேரைச் சுற்றி காவலர்கள் கை கோத்து நின்றாலும் கூட.... சக்கரத்திற்கு அருகே மக்கள்.

புல்டோசர்கள் ஆவேசமாய் உறுமிக் கொண்டு சக்கரத்தை நோக்கி வந்தன. செவத்தான் கயிற்றில் தொங்கிக் கொண்டே முட்டுக்கட்டையை ஒற்றைக் கையால் சாலையில் இழுத்துக் கொண்டே வர... தேர் கிடுகிடுவென ஓடி வர....

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

சாலையின் ஓரத்தில் வீட்டோடு வீடாய் ஒண்டிக் கொண்டிருந்த கூட்டத்திலிருந்த அந்த சின்னஞ் சிறுவன் எப்படியோ நழுவி... கைகோர்த்து நின்ற காவலர்களுக்கிடையே புகுந்து தேரை மிக அருகே பார்க்கும் ஆசையில், கரகரவென நகர்ந்து கொண்டிருந்த தேர் சக்கரத்திற்கு வெகு அருகே வந்து விட.....

செவத்தான் அந்தச் சிறுவனை மிக அருகே பார்த்தான். அந்த சிறுவன் நிற்காமல் மேலும் மேலும் சக்கரத்தை நோக்கி வர... தூரப்பார்வை பார்த்துக் கொண்டிருந்த போலீஸ்காரர்கள் அந்தச் சிறுவனை கவனிக்கவில்லை. அந்த சிறுவனுக்குரிய பெண் மட்டும் கை நீட்டிக் கத்த... வேட்டுச் சத்தத்தில் அவள் சத்தம் அடங்கிப் போயிற்று.


என்றாலும், செவத்தான் செயல்பட்டான். கட்டையைக் கீழே விட்டுவிட்டு கயிற்றில் தொங்கியபடி காலால் அந்தச் சிறுவனை எட்டி உதைத்தான். சிறுவன் பறந்து தூரமாய் விழ... நிலைமை உணர்ந்து காவலர்கள் உஷாராகி லட்டியை வீச.... கயிற்



''நீங்க மாசாமாசம் ஆயிரம் ரூபாய் வீதம் எங்க கம்பெனியில் கட்டிட்டு வந்தா நாற்பது மாசம் முடிஞ்சதும்...''
''ஓடிடுவீங்களா?''
- வேதபுரி எஸ்.ரமேஷ்.



''உங்க கம்பெனி தயாரிக்கும் கோந்து சூப்பரா இருக்கலாம்; அதுக்காக, 'உடைந்து போன கட்சிகளைக் கூட ஒட்டவைக்கும் வல்லமை வாய்ந்தது'ன்னு விளம்பரம் பண்றது அவ்வளவா நல்லால்லீங்க...!
- எஸ்.மாலா.



''அந்த புதுப்படத்தை ரிலீஸ் பண்றதுக்கு முந்தி, டீ.வி. ஸ்டேஷன்ல உள்ளவங்களுக்கு போட்டுக் காட்டினீங்களாமே...?''
''ஆமா...அவங்க பார்த்துட்டு நல்லா இருக்குன்னு சொன்னா ரிலீஸ் பண்ணாமலே இருந்துடலாம்னுதான்!''
- சீர்காழி வி.ரேவதி.

தில் தொங்கிய செவத்தான் கயிற்றை விட்டால் பாலன்ஸ் இழக்கலாம்... சக்கரத்தில் மாட்டலாம் என்பதால் தொங்கிக் கொண்டே, உருண்டு கொண்டிருந்த சக்கரத்தில் இரண்டு முறை மோதினான். திடும் திடும் என்று உடம்பு அடிபட...

நிலைமை புரிந்து தேரின் நான்கு பிரேக்குகளும் ஏககாலத்தில் அழுத்தப்பட..... தேர் நின்றது. செவத்தான் கீழே விழுந்தான். யாரோ பிடித்துத் தூக்கினார்கள். எங்கோ தூக்கிக் கொண்டு ஓடினார்கள். பின்னால் வந்து கொண்டிருந்த ஆம்பு லன்ஸில் படுக்க வைக்கப்பட்டு புஜத்தில் சுருக் என்று ஊசி குத்தப்பட்டதை செவத்தான் உணர்ந்தான்.

“என்னய்யா இது....?” என்றாள் கமலா பதறி, உடம்பில் ஆங்காங்கே கட்டோடு வந்த கணவனைப் பார்த்து.

செவத்தான் வலியைக் காண்பித்துக் கொள்ளாமல் சிரித்தான்.

“ஒண்ணுமில்ல புள்ள... முட்டுக் கட்டை உடைஞ்சு சிதறி மேல பட்டுட்சி அவ்வளவுதான்...” என்றான்.

“நான் சொன்னேன்ல... இந்த வேலை வேணாம்னு...” என்றவள் பதறியபடி அவசரமாய் அவன் உடம்பைப் பற்றி, காயத்தை பார்த்தாள்.

“அ தா ன் ஒண்ணுமில்லேங்கி றேன்ல?” என்றவன் அவளைப் பற்றி, கட்டிலில் உட்கார வைத்தான். மனைவியையே உற்றுப் பார்த்தான். அவன் பார்வை புரிந்து, “என்னய்யா அப்படிப் பார்க்கிற...?” என்றாள் கிறக்கமாய்.

தலையை ஆட்டினான்.

“நீ போன பிறவு நான் ஒரு எடத்துக்குப் போனேனே...” என்றாள் சிணுங்கலாய்.

‘எங்கே’ என்பது போல் பார்த்தான்.

“டாக்டரம்மாகிட்ட....”

“ஏன்... உடம்புக்கு என்ன செய்யுது...?” என்றான் பதட்டமாய்.

“உடம்புக்கெல்லாம் ஒண்ணுமில்ல... காலையில நானு தேர் பார்க்க வரலேன்னு சொன்னேனே, ஒனக்குப் புரியலியாய்யா... கர்ப்பஸ்திரிங்க தேர் பார்க்கக் கூடாதுய்யா...”

“என்னடி சொல்ற... தெளிவாச் சொல்லு!”

“இந்த தடவ தங்கிட்டுய்யா... அம்பது நாளு... ரெண்டு தடவ சரியா வரலியேன்னு பயந்துக்கிட்டே, உங்கிட்ட கூடச் சொல்லாம நான் மட்டும் டாக்டரம்மாகிட்ட போனேன். இந்த தடவ உறுதியாம்... டாக்டரம்மா சொல்லிட்டாங்க...”

செவத்தான் மகிழ்ச்சி பொங்க அவளை அணைத்துக் கொண்டான்.

கலைஞரின் சொந்த ஊர் திருக்குவளை என்பதும், அது திருவாரூருக்கு வெகு அருகில் உள்ளது என்பதும் தெரியாதவர்கள் இல்லை. திருக்குவளை போல் கலைஞரின் பால்யத் தோழர்கள் - இளமை நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடியவர்கள் யாரும் இருக்கிறார்களா என விசாரிக்கக் கிளம்பினால் திருவாரூரிலேயே ஒருவர் அகப்பட்டார்.

தென்னன்.

விவரம் சொன்னதும், வெகு உற்சாகமாகப் பேச ஆரம்பித்தார்:

''பள்ளிப்படிப்புக்காக, மிகவும் சிறு வயதிலேயே கலைஞர் திருவாரூர் வந்து விட்டார். எங்கள் இருவரின் தந்தையும் நண்பர்கள். எனவே, குடும்பங்களுக்குள் நெருக்கம். தவிரவும் சுயமரியாதை இயக்க ஈடுபாடு என்பதும் இருவருக்கும் பொதுவாக இருந்தது.

''பெரியவர்களின் பாதிப்புதானே சிறுவர்களுக்கும்? இயற்கையாகவே கலைஞருக்குச் சிறு வயது முதலே சமூகம் சார்ந்த பார்வை இருந்தது. அவரும் நானும் 'சிறுவர் சீர்திருத்தச் சங்கம்' என்றொரு சங்கம் ஆரம்பித்தோம். அப்போது எங்களுக்கு, 13-14 வயது இருக்கும் என்று நினைக்கிறேன். ஏழெட்டு பையன்களைக் கூட்டிக் கொண்டு சேரிப் பகுதிகளுக்குச் சென்று சுற்றுப்புறச் சூழல், சுகாதாரம் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்வோம். குறிப்பாக, திருவாரூரில் அழகிரி தெரு என்றொரு இடம். அரிஜனங்கள் வாழும் பகுதி. எங்கள் 'சேவை' அங்கேதான் பெரும்பாலும் இருக்கும். சில சமயம், வேறு பையன்கள் உடன் வருவார்கள். பெரும்பாலும் வீட்டுக்குப் பதில் சொல்ல முடியாதென்பதால் (அந்தக் காலத்தில் அரிஜன குடியிருப்புக்கெல்லாம் போனது தெரிந்தால் அவ்வளவுதான்!) மெதுவாக நழுவி விடுவார்கள். நாங்கள் இருவர் மட்டும் செல்வோம். வீட்டில் கேட்டால்? இருக்கவே இருக்கிறது, ஏதாவது கப்ஸா!


''எங்கள் பணி தடங்கலின்றி நடைபெற வேண்டுமென்றால் இதர பையன்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று தோன்றியது. அதனால் சங்கத்தினர் கூட்டம் நடத்துவார், கலைஞர். எப்படியாவது பேசி, தாஜா பண்ணிவிடலாமே என்று. ஆனால் கூட்டத்துக்கு ஆள் வர வேண்டுமே? 'கூட்ட முடிவில் மிட்டாய் வழங்கப்படும்' என்று பிட் நோட்டீஸ் அச்சடித்துக் கொடுத்து விடுவார். அந்நாளில் நாலணாவுக்கு அரைக் கிலோ மிட்டாய்- தரமான மிட்டாய் கிடைக்கும்! பையன்கள் அதற்காகவே வருவார்கள்! வருபவர்களைப் பேசி மயக்கி தம் சொற்படி நடக்க வைத்து விடும் சாமர்த்தியம் அவருக்கு இருந்தது.

''பின்னாளில் இதே சங்கத்தை, 'மாணவர் நேசக் கழக'மாக மாற்றினோம். உறுப்பினரிடையே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி தலைவர், செயலர், முதலானோர் தேர்ந்தெடுக்கப்படுவர். அப்போதும் சமூகப் பணி மட்டும்தான் அவர் குறிக்கோளாக இருந்தது. 1942ல் முரசொலி வெளியீட்டுக் கழகம் ஆரம்பித்தோம். முதன் முதலில் துண்டுப் பிரசுரமாகத்தான் முரசொலி வெளிவந்தது. நான் 'பப்ளிஷர்'; அவர் 'ரைட்டர்'. 'சேரன்' என்ற பெயரில் - அந்த வயதிலேயே - மிகவும் வீரியத்தோடு எழுத ஆரம்பித்தார்.



● கலைஞர்

"கூட்டம் முடிவில் மிட்டாய் வழங்கப்படும்!"



● வெளியூருக்குப் போயிருந்தாலும் நண்பருக்கு மறக்காமல் கடிதம் எழுதுவாராம் கலைஞர். சாம்பிளுக்கு ஒன்று!

''அப்போது பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் உச்சத்தில் இருந்தது. பெரியாரின் கருத்துக்கள்பால் நாங்கள் ஈர்க்கப்பட்டதில் வியப்பில்லை. முற்றிலும் பகுத்தறிவு சார்ந்த சிந்தனைக் கட்டுரைகளையே கலைஞர் அன்று எழுதினார். மூடப்பழக்கங்களை எதிர்ப்பதே அவர் எழுத்துக்களின் முதன்மையான நோக்கமாகயிருந்தது!

''இந்த துண்டுப் பிரசுரத்தால் அதிகம் பேரைக் கவர முடியவில்லை என்று கருதினார் கலைஞர். வேறென்ன வழி? நாடகம்! 'பழனியப்பன்' என்றொரு நாடகம் எழுதி, 'நாகை திராவிட நடிகர் கழகம்' என்று ஆரம்பித்து, அதன் மூலம் அரங்கேற்றினோம். வசூலில் படு தோல்வி!



* தென்னன்

அதில், துணிவாகச் சொல்லப்பட்டிருந்த சில சீர் திருத்தக் கருத்துக்களுக்காக அவர், ஓரிரு முறை அடிபட்டதுதான் பலன்!

"இப்படியாக எங்கள் நடவடிக்கை இருந்து வந்ததால் பள்ளிப் படிப்பில் அத்தனை ஆர்வம் இல்லை. S.S.L.C. பரீட்சையில் கலைஞர் வெற்றி கரமாக ஃபெயில் ஆனார்! சர்ட்டிஃபிகேட்டை என் னிடம் கொடுத்து, வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டு, வீட்டில் (உதைக்கு பயந்து!) பாஸ் என்று சொல்லி விட்டார். அப்புறம் சமாளித்ததெல்லாம் வேறு கதை!" என்று நினைவுகளில் மூழ்கி முத்தெ டுக்கிறார் தென்னன்.

அவர் சொன்ன ஒரு சம்பவம் வெகு சுவா ரஸ்யமாக இருந்தது:

திருவாரூரில், தினசரி மாலை வேளை இரு வரும் கடைத் தெருவிற்குப் போவார்களாம். அங்கே பி. வி. ஓ. ராசகோபாலன் என்ற நகைக் கடைக்காரர் இவர்களின் நண்பர். பகுத்தறிவுச் சிந்தனைகளில் ஈடுபாடு உடையவர். 'திராவிட நாடு' பத்திரிகையின் விற்பனையாளரும் கூட. அண்ணா-பெரியார் பேச்சுக்களின் ஆழ்ந்த ரசிகர். மூவரும் பேச ஆரம்பித்தால் மணிக் கணக்கில் பேசுவார்களாம்.

ஆனால், கடையில் வியாபாரம் பாதிக்கப் பட்டது. இதைப் பார்த்த அக்கம் பக்கத்துக் கடைக்காரர்கள், அவருக்கு புத்திமதி சொல்லி, 'இனிமேல் அந்தப் பையன்கள் வந்தால் பேசக்கூடாது' என்ற கட்டளை போட்டு, தலைக்கு மேல் 'வியா பாரம் தவிர வேறெதுவும் பேசா தீர்!' என்று ஒரு போர்டு வேறு எழுதி மாட்டி விட்டார்கள்.

மறுநாள் கலைஞர், தென்ன னுடன் வழக்கம் போல் ராஜ கோபாலனைப் பார்க்கப் போக, அவர் வாயைத் திறக்கவில்லை. கலைஞர் 'போர்டை'ப் பார்த்தார். ஒருவாறு விஷயத்தை ஊகித்துக் கொண்டு, தென்னனிடம் "என்ன தென்னன், இன்றைய பெரியார் பேச்சைப் படித்தாயா? என்ன தைரிய மாகப் பேசியிருக்கிறார் பார்த்தாயா?" என்று 'கொக்கி' போடவும் ராஜகோபாலன் தாங்க முடி யாதவராய் "அப்படியா? என்ன பேசினார்? விடு தலை அதற்குள் வந்து விட்டதா?" என்று இயற் கையான சுபாவப்படி துள்ளி எழுந்து விட்டார். தொடர்ந்து வழக்கம்போல் பேச்சு.

பார்த்துக் கொண்டேயிருந்த பக்கத்துக் கடைக்காரர்கள், "உனக்கெதற்கு போர்டும் வைராக்கியமும்?" என்று கேட்டிருக்கிறார்கள்.

"நம்மால் முடியாதுப்பா. என் இயல்புபடி இருக்க விடுங்கள்" என்று சொல்லிவிட்டாராம் ராஜகோபாலன்.

தென்னன் கழகப் போராட்டங்களில் கலந்து கொண்டு, சிலமுறை சிறை சென்றிருக் கிறார். கட்சியில் சில பொறுப்புகளிலும் இருந் திருக்கிறார். ஆனால் கலைஞர் முதல்வராக இருந்தபோது கூட - பதவிக்கு எதும் வந்ததில்லை. அதில் தனக்கு விருப்பமில்லை என்கிறார்.

"கலைஞரின் பால்ய நண்பன் என்கிற ஒரு பதவி போதும் எனக்கு!"

சந்திப்பு: கிச்சா
வாசகர் தகவல்:
பாபு, மானா.பாஸ்கரன்

61. கர்வ பங்கம்

பாரத் விலாஸ் ஹோட்டலின் அறையொன்றில் ஸ்ரீதரன் முன்னும் பின்னுமாக உலாத்திக் கொண்டிருந்தான். அவனுடைய மனம் பெரிதும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது என்பது நன்றாய்த் தெரிய வந்தது. அவனுடைய தலைமயிர் எப்போதும் போல் படிந்து அழகாக வாரி விடப்பட்டிருக்கவில்லை. முகத்திலும் கவலைக் குறிகாணப்பட்டது. அடிக்கடி வாய்க்குள்ளாக, "என்ன முட்டாள்தனம்! என்ன முட்டாள்தனம்?" என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் மேஜையருகில் நின்று மேஜைமீது கிடந்த ஒரு பத்திரிகையை எடுத்துப் பார்த்தான். அதில், சம்பு சாஸ்திரி, சாரு இவர்களுடைய படங்கள் வெளியாகியிருந்தன. படங்களுக்குக் கீழே பின்வருமாறு எழுதியிருந்தது.

"நேற்று உமாராணி-ஸ்ரீதரன் வழக்கில் ஒரு முக்கியமான விஷயம் வெளியாயிற்று. சம்பு சாஸ்திரியின் வளர்ப்புக் குழந்தையான சாரு உண்மையில் அவருடைய பேத்தி, அதாவது உமாராணியின் குழந்தை என்று தெரிய வந்தது. விசாரணையின் போது, உமாராணி மேல் குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட சமயத்தில், குழந்தை சாருவே மேற்படி இரகசியத்தை வெளிப்படுத்தியதும் கோர்ட்டில் பெரிய கலகலப்பு ஏற்பட்டது..."

ஸ்ரீதரன் இதைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு மறுபடி நடக்கத் தொடங்கினான். சுவரில் இருந்த கண்ணாடியில் தன்னுடைய பிரதிபிம்பத்தைப் பார்த்துவிட்டு, "ஸ்ரீதரா! நீ மகா கெட்டிக்காரன்! உன்னைப் போன்ற கெட்டிக்காரன் உலகத்திலேயே கிடையாது. உன் குழந்தையேதான் உனக்கு சர்டிஃபிகேட் கொடுத்துவிட்டாளே? இனிமேல் உனக்கு என்ன குறை?"



என்றான்.

நேற்று கோர்ட்டில் சாரு, ''நானும் எத்தனையோ அப்பா பார்த்திருக்கேன். ஆனா, உங்களைப் போலே, அம்மா மேலே கேஸ் போட்ட அப்பாவைப் பார்த்ததேயில்லை'' என்று சொன்னது அவன் மனத்தை அப்படி உறுத்திக் கொண்டிருந்தது.

இதே சமயத்தில், உமாராணியின் வீட்டு டிராயிங் ரூமில் இதே விஷயத்தைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. உமாவும், சம்பு சாஸ்திரியும் ஸோபாவில் உட்கார்ந்திருந்தார்கள். நல்லானும், அவனுடைய மனைவியும் கீழே தரையில் உட்கார்ந்திருந்தார்கள்.

நல்லான், உமாவைப் பார்த்து, ''குழந்தையைக் கொன்னுட்டேன்னு ஒரே புளுகாய்ப் புளுகினீங்களே! எப்படி அம்மா உங்களுக்கு மனஸு வந்தது?'' என்று கேட்டான்.

''இருக்கட்டும், நல்லான்! நான் ஊரை விட்டுக் கிளம்பறபோது, இனிமேல் நீதான் ஐயாவைக் கவனிச்சுக்கணும்னு சொன்னேன். நீயும் சரி இன்னயே, அந்த வாக்கை நீ காப்பாத்தினையா?'' என்றாள் உமா.

''அது எம்மேலே தப்புதான். எஜமான் நிலத்தை வித்துட்டாங்க என்கிற கோபத்திலே புறப்பட்டு வந்துட்டேங்க. ஆனா, நீங்க மட்டும் இத்தனை நாளாய் அப்பாவை அடியோடு மறந்துட்டு இருந்தீங்களே? அது மாத்திரம் சரியா?'' என்றான் நல்லான்.

அப்போது சம்பு சாஸ்திரி குறுக்கிட்டு, ''சரியாப் போச்சு! மறுபடியும் பழைய கதையையே எடுத்துட்டேளா? சந்தோஷமாயிருக்கிற சமயத்திலே போனதையெல்லாம் பத்தி ஏன் பேசறே, நல்லான்?'' என்றார்.


''எல்லாம் சந்தோஷந்தாங்க. ஆனா, கோர்ட்டு, கிர்ட்டு, கேஸு, கீஸுன்னு சொல்லிக்கிட்டிருக்காங்களே, அதுதான் நல்லா இல்லைங்க. மாப்பிள்ளை ஐயா முன்னப் பின்னே ஏதுவாச்சும் செய்திருந்தாலும், அதையெல்லாம் கொழந்தை பொறுத்துக்கிட்டுதானே போகணுங்க?'' என்றான் நல்லான்.

அப்போது நல்லான் மனைவி, ''சரிதான், சும்மா இரு. அவங்களுக்குத் தெரியாததுக்கு நீதான் யோசனை சொல்லவந்துட்டே!'' என்றாள்.

''இந்தா! உன்னை யாரு கேட்டா? நீ வாயை மூடிக்கிட்டிரு'' என்றான் நல்லான்.

''அடாடா! எனக்காக பாவம், நீங்கள் சண்டை போட்டுக்காதேங்கோ'' என்றாள் உமா.

அப்போது சாரு, ''இதையா சண்டைன்னு சொல்றே அம்மா! ஒவ்வொரு சமயம் இவா ரெண்டு பேரும் சண்டை போடற



அருள்வாக்கு

Action and reaction are equal and opposite (செயலும் பிரதிச் செயலும் ஸமசக்தி வாய்ந்ததாகவும் எதிரிடையானதாகவுமிருக்கும்) என்ற "ந்யூடன் லா" எல்லாக் கார்யங்களையும் பற்றின 'கர்மா தியரி'யை அடிப்படையாகக் கொண்டது என்பது மட்டுமில்லை; எண்ணத்தின் பிரதி பலனையும், மன நெறியின் சக்தி மற்ற மனங்களின் மீது மட்டுமின்றி 'நேச்சுரல் ஃபோர்ஸஸ்' மீதும் பிரதி விளைவுகளை உண்டாக்குவதையும் அடிப்படையாகக் கொண்டதுதான். Mental plane, metaphysical plane, Physical plane (மன மட்டம், பௌதிகாதீதமான ஆத்மிய மட்டம், பௌதிக மட்டம்) மூன்றையும் கோத்து நம் மதத்தில் சொன்னதை physical plane-ல் (பௌதிக மட்டத்தில்) மட்டும் சொல்வதே ந்யூடன் லா. 'ரியாக்ஷன் அப்போஸிட்டானது' (பிரதிச் செயல் எதிரிடையானது) என்று அவர் சொன்னது நல்லதற்கு எதிர் விளைவாகக்



தைப் பார்த்தா, பயமாயிருக்கும். மறுபடியும் உடனே சிநேகமாய்ப் போயிடுவா'' என்றாள்.

''ஆமாம், குழந்தை! எங்களைப் போலே ஏழை ஜனங்கள்ளாம் அப்படித்தான் சண்டை போட்டுக்குவோம்; உடனே சிநேகமாய்ப் போய்டுவோம்'' என்றான் நல்லான்.

பிறகு எழுந்து நின்று, உமாவைப் பார்த்து, ''நான் போய்ட்டு வர்றேன், அம்மா! எங்க சாவடிக் குப்பத்தை மறந்துடக் கூடாதுங்க. அடிக்கடி வந்து போய்க்கிட்டு இருக்கணும்'' என்றான்.

''கட்டாயம் வர்றேன், நல்லான்! நீயும் என்னை மறந்துடக்கூடாது. அடிக்கடி இங்கே வரணும்.''

நல்லானும் அவனுடைய மனைவியும் வெளியே செல்ல, அவர்களைப் பின் தொடர்ந்து சாருவும் போனாள்.

சற்று நேரம் சாவித்திரியும் சம்பு சாஸ்திரியும் மௌனமாயிருந்தார்கள். சம்பு சாஸ்திரி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஏதோ பேசுவதற்கு இரண்டு மூன்று தடவை வாயெடுத்தார். ஆனால் தொண்டையை அடைத்துக் கொண்டபடியால், பேச்சு வரவில்லை.

சாவித்திரி, ''என் பேரில் உங்களுக்கு ரொம்பக் கோபமா, அப்பா?'' என்று கேட்டாள்.

''எனக்கு உன்பேரில் கோபமா? இல்லை, அம்மா! எனக்குக் கோபமில்லை. ஆனா, நீதான் பழைய கோபத்தையெல்லாம் விட்டுடணும். நல்லான் சொன்னதைக் கேட்டியோ, இல்லையோ? ஏழை ஜனங்கள் எல்லாம் சண்டை போட்டுண்டா உடனே சமாதானமாப் போயிடுவா என்று சொன்னானே! எவ்வளவு பணம், எவ்வளவு ஐசுவரியம் இருந்தால்தான் என்ன? - மனத்திலே கருணை, தயாளம் இல்லாமற் போனா, இந்தப் பணத்தினாலே எல்லாம் என்ன பிரயோஜனம்..?''

சாவித்திரிக்கு இந்த உபதேசம் பிடிக்கவில்லையென்று அவளுடைய முக பாவத்திலிருந்து நன்றாய்த் தெரிந்தது. அவள் குறுக்கிட்டு, ''அப்பா! கருணையும், தயாளமும் யாருக்கு வேணுமோ அவாளுக்கு இந்த உபதேசமெல்லாம் பண்ணுங்கோ! - பணம், பணம் என்று கரிக்காதேங்கோ! குழந்தைக்குக் கார்டியனாயிருந்து நீங்கதான் இந்தச் சொத்தையெல்லாம் வச்சுக் காப்பாத்தணும்'' என்றாள்.

''இதுதான் எனக்குப் பிடிக்கவேயில்லை. குழந்தைக்கு நான் கார்டியனாவது, நீ உயில் எழுதுவதாவது! எதுக்காக அம்மா இந்த ஏற்பாடெல்லாம்?''

சாவித்திரி ஒரு நிமிஷம் சும்மா இருந்தாள். மறுபடியும் பேசிய போது சாஸ்திரியின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.

''ஆமாம், அப்பா! இந்த ஐசுவரியமெல்லாம் எனக்கு எப்படி வந்தது என்று நீங்க கேட்கவே இல்லையே, ஏன்?'' என்றாள்.

''நான் என்னத்துக்கு அம்மா கேட்கணும்? கேட்க எனக்கு என்ன பாத்தியதை?'' என்றார் சாஸ்திரி.

''உங்களுக்குப் பாத்தியதை உண்டு, அப்பா! இந்தப் பணமெல்லாம் எனக்குக் கொடுத்தவா, உங்களுக்குத் தெரிஞ்சவா தான்.''

சாஸ்திரி வியப்புடன், ''எனக்குத் தெரிஞ்சவாளா?'' என்றார்.

''ஆமாம், அப்பா! உங்களுக்குத்

கெட்டதும், புண்யத்துக்குப் பிரதியாகப் பாபமும் உண்டாகும் என்று அர்த்தம் கொடுக்காது. 'ஆப்போஸிட்' என்று ஏன் சொன்னாரென்றால், ஒரு பந்தைச் சுவர் மேல் எறிந்தால், அது அதே விசையுடன் 'ஆப்போஸிட் டைரக்ஷ'னில் (எதிர்த் திசையில்) திரும்பி வருகிறாற்போலத் தான் physical plane ல் எல்லா ரியாக்ஷனும் இருப்பதாலேயே. நாம் செய்த நல்லது (புண்யம்) எப்படி வெளியிலே பரவுகிறதோ அப்படியே வெளியிலிருந்து நமக்கு நல்லது (புண்யம்) திரும்புகிறது; கெட்டதும் (பாபமும்) இப்படியே என்றுதான் அர்த்தம்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தெரிஞ்சவாதான்.''

''எனக்குத் தெரிஞ்சவா, யார் அம்மா! எனக்குப் பணக்காராள் ஒத்தரையுமே தெரியாதே! சாவடிக் குப்பத்து ஏழைகளைத் தானே எனக்குத் தெரியும்?''

''அடியே பிடிச்சு எல்லாம் சொல்றேன், கேக்கறேளா அப்பா?''

''பேஷாய்ச் சொல்லம்மா, கேட்கிறேன். நீயே சொல்லாமப் போனா நான் ஒண்ணுமே உன்னைக் கேட்க வேண்டாம்னு நினைச்சுண்டிருந்தேன். நாங்க எல்லாருமாச் சேர்ந்து உன்னைச் சந்நிதியிலே விட்டுட்டோம். அப்படி விட்டுட்ட எங்களுக்கு உன்னைப் பத்திக் கேக்க என்ன பாத்தியதைன்னு பேசாமே இருந்தேன்.''

''ஐயோ! அப்பா! உங்க மாதிரி மனசு எல்லாருக்கும் இருக்கப்படாதா?'' என்று சாவித்திரி சொல்லிப் பெருமூச்சு விட்டாள். பிறகு சொன்னாள் :

''ஆமாம்; எல்லாருமாச் சேர்ந்து என்னைச் சந்நிதியிலேதான் நிறுத்தினேள். இந்தச் சென்னைப் பட்டணத்துத் தெருக்களிலே இரண்டு தடவை நான் அநாதையாய் அலைஞ்சேன். ஒரு தடவை, 'பாட்டு வாத்தியார் சம்பு சாஸ்திரி விலாசம் தெரியுமான்னு கேட்டுண்டு அலைஞ்சேன். இன்னொரு தடவை, கையிலே குழந்தையையும் எடுத்துண்டு, எங்கேயாவது வேலை கிடைக்குமான்னு தேடி அலைஞ்சேன். கடைசியிலே, குழந்தையும் நானுமா ஜலத்திலே மூழ்கிச் செத்துப் போறதுன்னு தண்ணியிலே இறங்கினேன். அப்போ, எங்களைக் காப்பாத்தறதற்கு நீங்க வந்து சேர்ந்தேள். உங்களுடைய குரலைக் கேட்டுக் கரையேறினேன். குரல் வந்த திக்கைப் பிடிச்சுண்டு வந்தேன். புத்தர் கோவில் கிட்ட அப்பத்தான் நீங்க மேடையிலே படுத்துண்டேள். கொஞ்ச நேரம் மறைவா இருந்துட்டு, நீங்க தூங்கின அப்புறம் குழந்தையை உங்க பக்கத்திலே கொண்டு போட்டுட்டு, தூரத்திலே போய் ஒளிஞ்சுண்டு பார்த்தேன்....''

''சாவித்திரி! என்னைப் பார்த்துட்டுப் பேசாமே போக உனக்கு எப்படி மனசு வந்தது? குழந்தையை விட்டுட்டுப் போறதுக்குத்தான் எப்படி உன் மனசு துணிஞ்சது?''

''அதுக்கு முன்னாலே மூணு மாதம் நான் பட்ட கஷ்டம் உங்களுக்குத் தெரிஞ்சிருந்தா, இப்படிக் கேட்க மாட்டேள், அப்பா! என் மனசு அப்போ கல்லாய்ப் போயிருந்தது. நீங்க முழிச்சுண்டு எழுந்திருந்து, அழற குழந்தையை எடுத்துண்டு தவியாய்த் தவிச்சேளே, அதைப் பார்த்தா, எனக்குச் சிரிப்புக்கூட வந்தது. 'அப்பாவாலேதானே நமக்கு இவ்வளவு கஷ்டமும் வந்தது? குழந்தையை வச்சிண்டு அவரே திண்டாடட்டும்' என்று விட்டுட்டுப் போயிட்டேன். உங்க மனசும் உங்க தயாள குணமும் எனக்கு நன்னாத் தெரியுமோல்லியோ, அப்பா! அதனாலே, நீங்க குழந்தையைக் கைவிடமாட்டேள், காப்பாத்துவேள் என்று நிச்சயமாய் நம்பினேன். அது நிஜமாப் போச்சு, அப்பா!''

''சாவித்திரி, குழந்தை சாரு என் பேத்தின்னு தெரிஞ்சதிலே எனக்கு ஒரு கர்வ பங்கம் ஆச்சுன்னு உனக்குத் தெரியுமோ? சாரு அநாதைக் குழந்தை, அவளை எடுத்து வளர்த்துக் காப்பாத்தினோம் என்று கொஞ்சம் கர்வப்பட்டிண்டிருந்தேன். 'நமக்கு என்னத்துக்குத் தொந்தரவு? போலீஸிலே கொண்டு போய்க் கொடுத்துடுவோம்' என்று கொடுக்காமே, பராசக்தி ஆக்ஞைன்னு நினைச்சுக் குழந்தையை வளர்த்தேன். இப்போ தெரியறது, இரத்த பாசத்தினாலேதான் அப்படி எனக்கு எண்ணம் உண்டாச்சுன்னு. இன்னொருத்தர் குழந்தையாயிருந்தா, அந்த மாதிரி எனக்குத் தோணியிருக்குமோ, என்னமோ?''

''இரத்த பாசம் விடாது என்று நம்பிண்டுதான் குழந்தையை விட்டுட்டுப் போனேன் அப்பா!''

''ஆனால், நீ என்னத்துக்குப் போனே, அதுதானே எனக்குத் தெரியலை, சாவித்திரி?''

''சொல்றேன், அப்பா! கல்கத்தாவிலேயும், பட்டணத்திலேயும் பட்ட கஷ்டத்தினாலே என் மனசு ரொம்ப வெறுத்துப் போயிருந்தது. ஆஸ்பத்திரிலே நான் கிடந்த போது, லேடி டாக்டர்களையும், நர்ஸ்களையும் பார்க்கப் பார்க்க, அவாளைப் போலே நாமும் ஏன் சுதந்திரமாய் ஜீவனம் பண்ணப்படாது, எதுக்காகப் புருஷாளையே நம்பிண்டு இருக்கணும்னு தோண ஆரம்பிச்சது. எங்கிட்ட ரொம்பப்

பிரியமாயிருந்த நர்ஸ்கிட்ட அதைச் சொன்னேன். அவள் ஒரு நாள் ஒரு பத்திரிகை கொண்டு வந்து காட்டினாள். அதிலே ஒரு விளம்பரம் போட்டிருந்தது. பம்பாயிலே யாரோ ஒரு பணக்காரி இருக்காள், அவளுக்குத் தோழியாயிருக்க நம்ப பக்கத்துப் பெண் வேணும்; ஆனால் குழந்தை கிழந்தையிருக்கக் கூடாது என்று விளம்பரத்திலேயிருந்தது. ஆஸ்பத்திரியிலேயிருந்து வெளியே வந்ததும், எத்தனையோ பணக்கார வீடுகளிலே வேலைக்கு அலைஞ்சேன். எல்லாரும் குழந்தைக்காரி வேண்டாம், குழந்தைக்காரி வேண்டாம்னு சொன்னா. அது மேலேதான் செத்துப் போயிடலாம்னு தீர்மானிச்சேன். அப்போ, உங்களைப் பார்த்ததும், குழந்தையை உங்ககிட்ட விட்டுட்டுப் போயிட்டா எங்கேயாவது வேலை சம்பாதிக்கலாம்னு தோணித்து. இந்த ஊரிலேயே இருந்தா, எப்படியும் உங்களைப் பார்க்கும்படியா ஆயிடும் என்று, பம்பாயிலே விளம்பரம் பண்ணியிருந்தவாளின் விலாசத்தைத் தெரிஞ்சுண்டு பம்பாய்க்குப் போனேன்.''

''என்ன துணிச்சல் சாவித்திரி, உனக்கு? யாரோ முன்னப் பின்னே தெரியாதவாளின் விளம்பரத்தை நம்பிண்டா பம்பாய்க்குப் போனே?''

''அப்படி நான் நம்பிண்டு போனது வீணாப் போகலை, அப்பா! தாலி கட்டிய புருஷன் கைவிட்டுவிட்டார், பெற்ற அப்பா கைவிட்டு விட்டார், கடவுளும் கைவிட்டு விட்டார்னு நினைச்சண்டிருந்த எனக்கு அந்தப் பெரிய மனுஷி அடைக்கலம் கொடுத்து ஆதரித்தாள்....''

''ஆமாம்; பம்பாயிலிருக்கிறவா எதுக்காக மெனக்கெட்டுத் தமிழ்நாட்டுப் பெண் வேணும்னு விளம்பரம் பண்ணினா?''

''அந்த அம்மாள் பம்பாயிலே இருந்த போதிலும், உண்மையிலே அவாள் நம்ம பக்கத்து மனுஷ்யாள்தான். அவாளுக்குக் குழந்தை குட்டிகள் இல்லை. அந்த அம்மாவின் புருஷருக்கு உடம்பு சரியாயில்லாத படியால், கப்பல் பிரயாணம் செய்தால் நல்லது என்று வைத்தியர்கள் சொன்னார்கள். அதன்மேல் அவர்கள் ஐரோப்பாவுக்குப் பிரயாணம் புறப்பட இருந்தார்கள். போகிறபோது, அந்த அம்மாவுக்குப் பேச்சுத் துணைக்குத் தமிழ் பேசற பெண்ணாய் ஒருத்தியை அழைச்சண்டு போகணும்னு நினைச்சாளாம். அதனாலே தான் குழந்தை உதவாதுன்னு விளம்பரத்திலே எழுதியிருந்தாளாம்.''

''சரி, அப்புறம்?''

''அவர்களுடனே நான் சீமைக்கெல்லாம் போய்விட்டு வந்தேன், அப்பா! அந்த அம்மாள் நான் போனது முதலே என்பேரில் ரொம்பப் பிரியமாயிருந்தாள். தன் வயத்திலே பிறந்த குழந்தை மாதிரி என்னை வச்சுக் காப்பாத்தினாள். அவர்கள் வெகு காலமாக இங்கிலீஷ்காரா தோரணையிலே வாழ்ந்தவர்கள். எனக்கு இந்த நாகரிகமெல்லாம் அவர்கள் தான் சொல்லிக் கொடுத்தார்கள். அந்த அம்மாளின் புருஷன் உடம்பு தேறாமல் இறந்து போனார். அந்த அம்மாளும் அது முதல் நாளுக்கு நாள் மெலிந்து, போன வருஷத்தில் இறந்து போனாள். அவர்கள்தானப்பா எனக்கு இந்தச் சொத்தையெல்லாம் கொடுத்தது.''

''ஆனால், யாரோ எனக்குத் தெரிஞ்சவான்னு சொன்னயே, அம்மா?''

''ஆமா; உங்களுக்குத் தெரிஞ்சவா தான். உறவுகூட.''

''உறவா? எனக்கா? குழந்தை! நீ என்ன சொல்றே? எனக்கு ஒண்ணும் புரியலையே?''


''ரொம்ப நாள்வரையில் நான் யாரு, இன்னார்னு ஒண்ணும் அவாளுக்குச் சொல்லலேயில்லை. புருஷன் கைவிட்டு விட்டு எங்கேயோ போய்ட்டார்னு மட்டும் சொல்லியிருந்தேன். இரண்டு வருஷத்துக்கு முன்னால், அந்த அம்மாள் ஒரு நாளைக்கு என்னை ரொம்ப வற்புறுத்திக் கேட்டாள். அதுக்கு மேலே, ஊரு, பேரு எல்லாம் விவரமாய்ச் சொன்னேன். உங்க பேரைச் சொல்லி, நான் உங்க பொண்ணு என்றதும் அந்த அம்மாள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பிச்சுட்டா.... அந்த அம்மாள் யார் தெரியுமா, அப்பா?''

''சாவித்திரி! சாவித்திரி! நீ என்ன சொல்லப் போறே? என் உடம்பெல்லாம் நடுங்கறதே!'' என்றார் சாஸ்திரி.

''ஆமாம், அப்பா! அந்த அம்மாள் என் அத்தை மீனாதான்!'' என்றாள் சாவித்திரி.

(தொடரும்)

டெபாசிட் திட்டங்கள் அதிக வருமானம் அளிப்பது உங்களுக்குத் தெரியும். கூடவே நிம்மதியையும் அளிக்கும் ஒரு திட்டம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?



நிம்மதி – RPS பெனிஃபிட் ஃபண்ட் அளிக்கும் உயர்வளர்ச்சித் திட்டம். இத்திட்டத்தின்கீழ் **ரூ. 25,000/-** (அல்லது அதன் மடங்குகளில்) 60 மாத காலத்திற்கு டெபாசிட் செய்யுங்கள். **21%** விகிதத்தில் நீங்கள் பிரதி மாதம் வட்டி பெற முடியும். மாறாக குமுலேட்டிவ் திட்டத்தை விரும்பினால் முதிர்வடையும் போது உங்களுக்குக் கிடைப்பது **ரூ. 71,000/-** நிம்மதி பற்றி மேலும் விவரங்களைத் தெரிந்து கொள்ள எங்களை அணுகுங்கள்.

THE HIGH RETURN SECURITY BOND
NIMMADI

எக்ஸிக்யூடிவ் பிரசிடெண்ட் : **P.G. சரண்யன்**
முன்னாள் தலைவர், கரூர் வைஸ்யா பாங்க் லிட்.

RPS BENEFIT FUND LTD

(Declared as "NIDHI" by the Central Government)

உறுப்பினர்களுக்கு மட்டும்

தலைமை அலுவலகம் : No. 16, இராமநாதன் தெரு, தி.நகர், சென்னை-17. போன் : 441554, 441346.

கிளைகள்: இராயபுரம் (சென்னை-13) — போன்: 556164, கோயம்புத்தூர் — போன்: 43576, பெங்களூர் — போன்: 366433, பாண்டிச்சேரி — போன்: 31859

பாதுகாப்பான வழியில் விரைவான வளர்ச்சி

AKSHAR RPS/94 36

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி-1994

முதல் பரிசு ரூ.1,500

இரண்டாவது பரிசு ரூ.1,000

மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ.500 விதம்) ரூ.1,000

ஆக மொத்தம் ரூ.3,500 பரிசுகளாக வழங்கப் பெறும். தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.



- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: ஜூன் 15.

- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற,போதிய அளவு தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

- ஆசிரியர், கல்கி,47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

தேர், திருவிழா, விவசாயம், சங்கீதம், வெற்றிலை, புகையிலை என்பதாக நூற்றாண்டுகள் கடந்த தஞ்சை மாவட்டத்தில் - லாரி, நாகை காய்தே - அறிவியல் சாதனை ஆகாயமளவுக்கு வளர்ந்து விட்டது. நரிமணத்தில் எண்ணெய்க் கிணறுகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிந்து, அதற்கான முஸ்தீபுகள் ஆரம்பமானதும் திருவாரூர் - சுற்று வட்டாரப் பகுதிகளில் சுறுசுறுப்பாய் மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. எண்ணெய், ஜோராகச் சுரக்க ஆரம்பித்ததும் இப்பகுதி துபாயாகா விட்டாலும்- வளர்ச்சி கண்கூடு.


சென்ற வருடம் வரை நரிமணத்து எண்ணெய், டாங்குகள் மூலம் மணலிக்குக் கொண்டு வரப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு வந்தது. பின்னர், இது ஆபுத்திரன் கை அமுதசுரபி எனத் தெரிந்ததும் திருவாரூர் - நாகப்பட்டினம் சாலையில் பனங்காடு என்ற பிரதேசத்தில் சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டது. வானுயர்ந்த சுத்திகரிப்புக் கட்டுமானங்களும், அதி நவீன அலுவலக மாளிகைகளும் டி.ராஜேந்தர் செட்டுகளுக்குச் சவால் விடுபவை. எண்ணெய் கிடைக்கிறது கிடக்கட்டும்; இளைஞர் ஏராளமானோருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதை நினைத்து சோளா பூரிக்கலாம்!



எம். ஆர்.எல்லின் செயல்பாடு குறித்துத் தெரிந்து கொள்ள விழைந்த போது நமக்குக் கிடைத்த விவரங்களில் தொழில்நுட்ப சமாசாரங்களைச் சற்றே விலக்கி வைத்து இப்படி எளிமைப்படுத்தலாம்:

நரிமணம் பகுதியில் கிடைக்கும் கச்சா எண்ணெயை

(க்ரூட்) பைப்லைன் மூலம் இங்கே
கரிக்கிறார்கள். டீசல், கிரஸின், நா
(சமையல்கேஸ்), ஃபர்னஸ் ஆயில்
எண்ணெய் என்று தமிழாக்கினால்
எனப் பிரிக்கிறார்கள். தனித்தனியே
காக்கிறார்கள். பிறகு தேவைப்படு
காப்பாக அனுப்பிவைக்கிறார்கள்.
சொல்லியாகி விட்டது. இதனைச்
என்ன பாடுபடுகிறார்கள் என்று சுப
சொல்லிப் போக முடியாது. கச்சா
உபயோகமில்லாத உப்பு வகையறா



● விண்ணளாவிய உலை: ஸல்ஃபர் பிரிக்கப்படுகிறது.

இன்னபிற) நீக்குவதும்,
கு டேற்றி, அந்தந்த வெ
அந்தந்த எரிபொருளை
கழிவுகளை சர்வ ஜாக்கி
வதும் - தொடர்வதான
யில்லாச் சுற்றுக்களைத்
தாது கவனித்து நிர்வகி
னவோ அத்தனை சாதா
வில்லை. தவிரவும், இ
ராட்சஸப் பணியை ஒ
வைத்துக் கொண்டு A to

கொண்டுவந்து சுத்தி
ட்டுதா, எல்.பி.ஜி.
உலை உயவு
டிக்க வருவீர்கள்)
டாங்குகளில் பாது
இடங்களுக்குப் பாது
ளு வரியில்
யல் வடிவமாக்க
ா ரெண்டு பக்கத்தில்
ண்ணெயிலிருந்து
களை (ஸல்ஃபர்



★ நாகராஜன்

பண்ணுவதைப் பார்க்கையில் பிரமிப்பின் உச்சகட்டம்.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் கம்ப்யூட்டர் கச்சிதத்தில் செய்யப்பட்டுள்ளன. ஆட்டோமாடிக் எச்சரிக்கை சமிக்ஞைகள்; தீயணைப்பு வசதி என்று ஆங்கில சினிமாக்களில் பார்க்கக் கூடிய அனைத்தும் உண்டு.

1991ம் வருஷ ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது இந்த 170 கோடி திட்டம். 500 ஏக்கர் நிலத்தை இதற்கென ஆர்ஜிதம் செய்துள்ளார்கள் அவ்வளவும் விவசாய நிலம்! இவ்வாண்டு இறுதிக்குள் இந்நிறுவனம் ஐ.எஸ்.ஓ.9000 உலகத் தரச் சான்றிதழ் பெறுவதுடன் கணிசமான லாபத்தையும் சம்பாதித்துத் தரும் என்கிறார்.



★ கம்ப்யூட்டர்
மூலம் கட்டளைகள்...

லையில் இட்டு,
ப நிலையில்
பிரித்தெடுப்பதும்,
தையாக அகற்று
ந்த முடிவே
டங்களுக்கு வருந்
துதும் - நமக்கென்
மாசாரமாகத் தெரிய
னாம்பெரிய ஒரு
ன்ன கம்ப்யூட்டரை
அ 10 ஃ கண்ட்ரோல்

என்ன செய்கிறது எம்.ஆர்.எல்?



* லாரி டாங்க்களில் சமையல் கேஸ் நிரப்பப்படுகிறது.


கள்.

எம்.ஆர்.எல்.லுக்கு சரி; இந்தப் பகுதிக்கு என்னலாபம் என்று கேட்டால், ''எம்.ஆர்.எல். வந்த பிறகுதான் இப்பகுதி வீடுகள் அட்டாச்ட் பாத்ரூம்களோடு கட்டப்பட ஆரம்பித்திருக்கின்றன'' என்றார் பொதுமேலாளர் நாகராஜன். அதாவது நாகரிக வளர்ச்சி. நகர்மயமாதல்.

''இத்திட்டம் ஆரம்பித்தபோது ஏதோ 'பூச்சாண்டி' மாதிரிதான் முதலில் பார்த்தார்கள். (வாஸ்தவம்தான். என்னைப் பாதுகாப்பு டாங்க்கின் மேல்மூடி, என்னைப் அளவு உயர உயரத் தானும் உயர்ந்து, தாழத் தாழ, தானும் தாழும் 'அண்டாகாகஸ' ஸிஸ்டத்தைப் பார்க்கையில் நமக்கே அப்படித்தான் தோன்றியது!)



* தென்னை நார் தொழில் பயிற்சி வகுப்புகள்...



* என்னைப் பாதுகாப்பு டாங்க்: 'அண்டாகாகஸ' மேல் மூடி.

மழை பெய்யவில்லையா, எம். ஆர். எல்.தான் காரணம்; வெயில் ஓவரா- எம்.ஆர்.எல்.சதி என்பதாகத்தான் புரளி பண்ணிக் கொண்டிருந்தார்கள். போகப் போக வேலைவாய்ப்பு, சாலை வசதி, கோவில் புனருத்தாரணம், சத்துணவுக் கூடங்கள் சீரமைப்பு என்று அவ்வப்போது நாங்கள் செய்யும் சில சமூகப் பணிகளால்தான் நம்பிக்கை வர ஆரம்பித்தது அவர்களுக்கு!'' என்கிறார் நாகராஜன்.

நாமே நேரில் பார்த்ததில், கிராமப் பெண்களுக்குத் தென்னை நார் தொழில் பயிற்சி (டாவிடா உதவியுடன்), சுகாதார நிலையம் என்று ஆங்காங்கே கண்ணில் பட்டது.

முற்றிலும் ஒரு மகத்தான தொழில் சார்ந்த நகரமாக இந்தப்பகுதி மாற்றப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பது புரிந்தது. அதற்கான பிள்ளையார் சுழியை எம்.ஆர்.எல். போட்டிருக்கிறது.

- பா.ராகவன்

மேலட்டை வண்ணப்படம், திருவாரூர் தொடர்பான இதர படங்கள் :

கோபிநாத்

வண்ணத்துப்பூச்சி

21

சுஜாதா

அர்ஜுன் பணம் பண்ணிவிட்டதில் எனக்கு எந்தவித உற்சாகமும் இல்லை. மாறாக அவர் கடைசியில் சொன்னது கவலை தந்தது. அப்போதுதான் எனக்கு மெல்லப் புரிந்தது. பணம் பண்ணுவது என்பது இவருக்கு ஒரு பழக்கம். சிகரெட், குடிப் பழக்கம் போல. இதனால் இதை விடுவதற்கு அவர் மற்ற கெட்ட பழக்கங்கள் போல ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். என்ன சிகிச்சை என்று யாரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை.

அர்ஜுன் இன்னும் வெற்றுப் பார்வை பார்க்க ஆரம்பித்து விட்டார். ஆபீசுக்கு போய், திரும்பிவர இப்போதெல்லாம் ராத்திரி பத்தரை ஆகிவிடுகிறது. எத்தனை நேரம்தான் எம்டிவியையும் தூர்தர்ஷனில் சாரங்கி வாசிப்பதையும் பார்த்துக் கொண்டிருப்பது? பெரும்பாலும் இரவு சாப்பிட்டாச்சு என்றுதான் சொல்வார்.

''எங்க சாப்ட்டீங்க?''

''ஆபீஸ்லயே! பக்கத்ல சோனாவிலிருந்து பேக் பண்ணி வாங்கி வரச் சொன்னேன்.''

''நான், நீங்க வருவீங்க, வருவீங்கன்னு பைத்தியம் மாதிரி காத்துக் கொண்டு இருக்கிறேன்.''

''உன்னை யார் அப்படி காத்திருக்கச் சொன்னார்கள்? இந்த நவீன கால கண்ணகி பிஸினஸ் வேண்டாம் என்று தானே சொல்கிறேன்? எனக்காக உன் உடம்பை வருத்திக் கொள்ளாதே! நீ உன் உலகில் சந்தோஷத்துடன் இரு. நான் என் உலகில்.''

''இதுதான் சந்தோஷமா?''

''எனக்கு இதுதான் சந்தோஷம்.''

அவர் மேற்கொண்டு விவரித்தது எனக்குப் பயமாக இருந்தது.

''சந்தோஷமில்லாம பின்ன என்ன? கம்ப்யூட்டர் திரையில் ஆன்லைன் கனெக்‌ஷன் டேட்டா சர்விஸ் வெச்சிருக்கேன். பளிச்சுன்னு ஸ்டாக் இன்டெக்ஸ் முதல்ல வரும். அப்புறம் ஒவ்வொரு ஸ்டாக்கும் எப்படி ஏறுது விழுதுன்னு பார்சார்ட்டும் பை சார்ட்டுமா வரும் பாரு. த்ரில்லிங்! என் விரல் நுனிகளிலே அப்படியே பணத்தின் மொர மொரப்பை உணர முடியும்...''

''கல்யாணத்துக்கு முந்தி என்ன சொன்னீங்க?''

''என்ன சொன்னேன்?''

''முப்பதைந்து லட்சம் பண்ணினப்புறம் நிறுத்திடு வேன்னுதானே?''

வேட்டை

''சொல்லேன்! ஆனா நிறுத்த முடிய லையே?''

''அப்ப எத்தனை பண்ணனும்?''

''பயப்படாதே! ஒன் க்ரோர்! அது சாத்தியம். இவ்வி ஃபைவ் இயர்ஸ்.''

''இத்தனை பணத்தை என்ன பண்ணப் போறீங்க?''

''பணம் எதுக்கு?''

''நிம்மதி தர.''

''தப்பு. பணம் எதுக்குன்னா மேற்கொண்டு பணம் பண்ணறதுக்கு. இப்ப முப்பத்தைந்து லட்சத்தை நான் என்ன, கேவலம் ஃபிக்ஸட் டெபாஸிட்லயும் லாங்டெர்ம் பாண்டிலயும் போடுவேன்னு நெனைச்சியா? இல்லை! இல்லை! இதையும் ஸ்பெகுலேட் பண்ணுவேன்! எத்தனை சதவிகிதம் ஸ்பெகுலேட் பண்ணலாம்ங்கறதுக்கு சரியான விதிகள் இருக்கு.''

''ஒரு எழவும் புரியலை.''

''நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே?''

''கோவிச்சுப்பேன். ஆனா சொல்லுங்க.''

''லெட்ஸ் ஹேவ் எ சைல்டு.''

நான் உடனே அந்த இடத்தை விட்டுப் புறப்பட, முதுகை சிரிப்பால் தாக்கினார். அந்த சிரிப்பு

''உனக்கு சம்பிரதாயமான தமிழ் சினிமா சந்தேகங்களெல்லாம் வருது இல்லையா? உன் புருஷன் வேற 'சிநேகிதம்' வெச்சிருக்காப்பலயும், அதுக்குப் போய் நிறைய செலவழிக்கறாப்பலயும். அப்படித்தானே?''


பயமாகவே இருந்தது.

வைஸ் ப்ரஸிடெண்ட் என்று அழைத்தார்களே தவிர ஒரு நாள் கூட ஆபீஸ் பக்கமே போக வில்லை. ஒரு தடவை அர்ஜுன் பம்பாய் போயிருந்தபோது எனக்கு என ஒரு அறை இருக்கிறதாமே, அது என்ன, பார்த்து விட்டு வரலாமே என்று போனேன்.

அங்கே மூன்று ஆச்சரியங்கள் காத்திருந்தன.

ரேகா அர்ஜுன் என்று பெயர்ப் பலகையுடன் நிசமாகவே ஒரு அறை இருந்தது. ஏஸி வைத்து மேசையில் இருந்த மலர்கள் கூடப் புதிதாக இருந்தன! இரண்டாவது, இதோ அங்கே உட்கார்ந்திருந்தாள்!

என்னைப் பார்த்ததும் சற்றே திடுக்கிட்டு, ''ரேகா நீங்க வறதில்லைன்னுட்டுத்தான் இந்த ரூமை ஆக்குபை பண்ணிக்கிட்டேன். கொஞ்சம் வெய்ட் பண்ணா க்ளியர் பண்ணிடறேன்'' என்றாள்.



''வேண்டாம்! சும்மா பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்.''

''உக்காரு. இது உன் நாற்காலி!''

உட்கார்ந்தேன். சன்னல்கள் சாத்தி, நீலக் கண்ணாடி பேப்பர் ஒட்டியிருந்தது. வெளியே அமைதியாகக் கார்கள் கடந்து கொண்டிருந்தன. ஒரு மேசை டிராயரைத் திறந்து பார்த்தேன். பூட்டியிருந்தது. டெலிபோனை எடுத்து கவனித்தேன். உயிர் இருந்தது. உள்ளே ஒரு பெண் வந்தாள். அவளை நான் எங்கே பார்த்திருக்கிறேன் என்று ஞாபகத்தில் தேடினேன்.

''ஞாபகமில்லை? பாலா, பாலாமணி. அன்னிக்கு பார்ட்டில பார்த்தமே?''

''ஓ ஸாரி! இப்ப ஞாபகம் வந்து விட்டது. நீங்க இங்கதான்....''



''இல்லை, அர்ஜுனைப் பார்க்க வந்தேன்.''

''பம்பாய் போயிருக்கார்.''

''பம்பாயா? இல்லையே? நேற்று அவரை சோளாவில் பார்த்தேனே?''

''இல்லையே! பம்பாய் போயிருக்கிறார். ரெண்டு நாளாச்சு!''

''திஸ் இஸ் ஃபன்னி'' என்றாள் அவள் தனக்குள் எதோ எண்ணிக் கொண்டு. அந்த டாபிக்கைத் தொடரவில்லை.

''ரேகா நான் உங்க கூட கொஞ்சம் பேசணும். டயம் இருக்குமா?''

''ஆபீஸ் விஷயம்னா எனக்கு எதும் தெரியாது. பேர்தான் போட்டிருக்கே ஒழிய நான் இன்னும் எதும் செய்ய ஆரம்பிக்கலை.

''ஆபீஸ் விஷயமா இல்லை'' என்று அன்றைய தினத்தின் மூன்றாவது பெரிய ஆச்சரியத்தைத் தந்தாள்.

''நான் ஒரு க்ரெடிட் கார்டு கம்பெனிக்கு வேலை செய்யறேன். அர்ஜுனைப் பார்த்து பேசிட்டு வரச்சொன்னாங்க. நாலு மாதமா க்ரெடிட் கார்டு பில் பே பண்ணாம இருக்குது. அதை கொஞ்சம் அவர் கிட்ட சொல்லிட்டா நல்லது. நாங்க கலபமா ஸ்டாப் பேமெண்ட் போட்டு கார்டை கான்ஸல் பண்ணிடலாம். ஆனா அது ரசாபாசமா ஆயிடும். அர்ஜுன் மாதிரி ஸ்பெஷல் கஸ்டமர்களை அவங்க இழக்க விரும்பலை. நிச்சயம் எதோ கவனக் குறைவாலதான் இந்தத் தவறு நிகழ்ந்திருக்கணும். நீங்க வைஸ் ப்ரெஸிடெண்ட் பொறுப்பேற்றதினாலே இதை உங்க கிட்ட சொல்ல வேண்டியிருக்கு. எப்படியாவது அர்ஜுன் கிட்ட சொல்லி மூணு பில்லை கிளியர் பண்ணச் சொல்லுங்க'' என்றாள்.

நான் அவள் சென்றதும் அந்த பில்களைப் பார்த்தேன். க்ரெடிட் கார்டு என்றால் என்ன என்று சரியாகத் தெரியாத எனக்கு அந்த ஸ்டேட்மெண்டின் பகுதி மட்டுமே புரிந்தது.

மீனா ஜுவல்லர்ஸ் என்று ஐயாயிரத்து நானூறு. அஜந்தா சில்க்ஸ், அதன் பின் பார்க் ஷெராட்டனிலிருந்து பில் ஆயிரத்து ஐநூறு. இவ்வாறு மொத்தம் எட்டு அயிட்டம்கள். கூட்டிப் பார்த்தால் இருபத்தையாயிரம் ரூபாய் பாக்கி என்று தெரிந்தது. மூன்றாவது ரிமைண்டர் அனுப்பியும் அர்ஜுன் பணம் அனுப்பவில்லை என்று தெரிந்தது.

நான் அர்ஜுன் வந்ததும் கேட்கலாம் என்று அதை மனதில் தள்ளிப் போட்டாலும் எனக்குத் தெரியாமல் ஜுவல்லரியும் புடைவையும் வாங்கியிருக்கிறாரா என்று ஆச்சரியமாக இருந்தது. கீதாவைக் கூப்பிட்டுக் கேட்டேன். அவள் பில்களைப் பார்த்து ஆச்சரியப்பட்டு ''எதோ மிஸ்டேக் நடந்திருக்கிறது. அர்ஜுன் இந்த மாதிரி கடைகளுக்கெல்லாம் போகவே மாட்டார். சொந்தப் பெண்டாட்டிக்கே புடைவை நகையெல்லாம் வாங்க ஆபீஸில் யாரையாவதுதான் அனுப்புவார். இங்கெல்லாம் போவதற்கு அவருக்கு எங்கே சமயம்? நான் எதற்கும் இதைத் தீர விசாரிக்கிறேனே'' என்றாள்.

''க்ரெடிட் கார்டுன்னா என்ன?''

''இந்த கார்ட்டை வச்சுக்கிட்டு பல கடைகளில் பொருள் வாங்கலாம். அவங்க பணம் கொடுக்க, பாங்கிலிருந்து பில் வரும், மாசா மாசம்.''

''எதாவது பார்ட்டி வெச்சாரா ஷெராட்டன்லே?''

''இல்லையே?''

''பின்ன இந்த பில் என்னது?''

''அதான் எனக்கும் புரியலை. எதுக்கும் எங்கிட்ட விட்டுரு இதை. எதோ குழப்பம் நேர்ந்திருக்கிறது. நான் இதை கவனித்துக் கொள்கிறேன். இப்ப காப்பி எதாவது வேணுமா உனக்கு?''

''வேண்டாம்.''

திருவாரூர் வாசகர் வட்டம்!

இனிய திருவாரூர் வாசகர்களே! கல்கி வாசகர் வட்டக் கூட்டம், உங்கள் ஊரில் 5.6.94 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, வடபாதிமங்கலம் சோமசுந்தர முதலியார் ஆண்கள் மேநிலைப்பள்ளி - சென்ட்ரல் ஹாலில் நடைபெறவுள்ளது. தவறாமல் வரவும். நண்பர்களையும் (அக்கம் பக்கத்து ஊர்க்காரர்களையும்) அழைத்து வாருங்கள்!

- ஆசிரியர்.

அதன்பின் அதை மறந்து விட்டேன். அர்ஜுன் பம்பாயில் இருந்து அடுத்த புதன் கிழமை வந்ததும் அவரைக் கேட்டேன். ''நீங்க பம்பாய் போகலை, சோளாவில பார்த்தேன்னு யாரோ சொன்னாங்களே.''

''யாரோ என்ன, பாலாமணி தான் சொல்லிருப்பா! அந்த பொண்ணுக்கு பகல்லயே கண் தெரியாது, கிட்டப்பார்வை.''

''கண்ணாடி போட்டுக்கலையே?''

''காண்டாக்ட் லென்ஸ்! அதான் ப்ராப்ளம்! தூரத்ல எல்லாமே பஜ்ஜுனு தெரியும்.''

இதோ உங்ககிட்ட க்ரெடிட் கார்டு பில்லைக் காட்டினாளா?

''காட்டினா, மேட்டரை செட்டில் பண்ணிட்டேன்.''

''நீங்க எங்க நகைக் கடைக்கும், புடைவைக் கடைக்கும் போனிங்க?''

அர்ஜுன் சிரித்து, ''என்னைப் பார்த்தா நகை கடை போறவனா தெரியுதா?''

நான் மௌனமாக இருக்க,

''எனக்கு இதுக்கெல்லாம் எங்கே சமயம் டார்லிங்?''

''பின்ன இந்த பில் எப்படி வந்தது?''

''இதோ அதை விசாரிச்சிருக்கா. எங்கயோ கம்ப்யூட்டர்ல தப்பு ஏற்பட்டிருக்கணும்!''

நான் குழப்பமாக இருப்பதைப் பார்த்து சட்டென்று என்னை இடுப்பில் கட்டி வளைத்துக் கொண்டு, ''உனக்கு சம்பிரதாயமான தமிழ் சினிமா சந்தேகங்கள் எல்லாம் வருது இல்லையா? உன் புருஷன் வேற சிநேகிதம் வெச்சிருக்காப்பலயும் அதுக்குப் போய் நெறைய செலவழிக்கறாப்பலயும். அப்படித்தானே?''

அப்படித்தான் என்று சொல்லத் தயக்கமாக இருந்தது.

''அந்த க்ரெடிட் கார்டு கம்பெனிகிட்டருந்தே லெட்டர் வாங்கி காட்டினா சமாதானமாய்டுமா உனக்கு?''

''எனக்கு அதெல்லாம் தேவையில்லை. உங்க மனச்சாட்சிக்கு உண்மையா இருந்தாப்போதும்'' என்றேன்.

''என் மனச் சாட்சி எப்பவுமே சுத்தமானதுதான். டிடெர்ஜெண்ட் விளம்பரத்துக்கு கூப்ட்டிருக்காங்க. அதான் உடனே அதைக் காட்ட முடியலை.'' என்று ஆரவாரமாகச் சிரித்தார்.

''நீங்க எப்ப சீரியஸா இருப்பீங்க?''

''எப்பவுமே'' என்றார்.

அதன் பின் அந்த விவகாரத்தை ஏறக்குறைய மறந்து போய் விட, தற்செயலாக ஒரு சம்பவத்தினால் அர்ஜுன் மேல் நான் வைத்திருந்த நம்பிக்கை எனும் கோட்டை ஒரு நிமிஷத்தில் கலைந்து விழுந்தது, சீட்டு மாளிகை போல. அப்பாவுக்குக் கடிதம் எழுத அவர் ஆபீஸ் புறப்படுமுன் பென்சில் தேடிக் கொண்டிருக்கும் போது கிடைக்காமல், அவருடைய ப்ரீஃப்கேஸைத் திறந்து பார்த்தேன். அதில் பால் பாயிண்ட் பேனாவை எடுத்துக் கொள்ளுமுன் அந்தக் கடிதத்தைப் பார்த்தேன்.

''அன்புள்ள ஐயா, தங்கள் க்ரெடிட் கார்டு எண்ணிக்கை...ல் சென்ற மாதம் நாங்கள் அனுப்பிய பில்களை செட்டில் செய்ததற்கு வந்தனம். உங்கள் கார்டின் மேல் உள்ள தடை இத்தோடு நீக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் இந்த மாதத்துக்கான பில் தொகைக்கான வவுச்சர்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கூடிய விரைவில் இதை நீங்கள் தீர்த்துவைத்தால் மகிழ்வோம். இப்படிக்கு...''

உடன் இணைத்திருந்த பில்லில் மேலும் ஓட்டல்களுக்கும் நகைக்கடைக்கும் பெண்களுக்கான பொந்திக், ஒரு ஹெல்த் கிளப் இவைகளின் பில் விவரங்கள் இணைத்திருந்தன. நான் அனைத்தையும் மறுபடி பெட்டியில் வைத்துவிட்டு மூடிவேன்.

அர்ஜுன் பாத்ரூமிலிருந்து வெளியே வந்ததும் என்னைப் பார்த்து திட்டுக்கிட்டு ''என்ன இங்கே நிக்கறே?'' என்றார்.

''கடிதம் எழுத பேனா வேணும்'' என்றேன்.

''இந்த பெட்டியைத் திறந்தியா?''

''இல்லை.''

அதன் தாளில் பூட்டின் எண்ணிக்கைகளை மாற்றினார்.

''ம்ஹூம் திறக்கலை'' என்றேன்.

இந்த முறை அர்ஜுனுக்குத் தெரியாமல் விசாரிப்பது என்று தீர்மானித்து விட்டேன்.

(தொடரும்)

MNEY

OPENING UP NEW OPPORTUNITIES

While you work at sharpening your business skills, planning strategies and negotiating new deals , you need a trusted ally to stand by you and take care of your financial problems.

We at **Annamallai Finance** have the ways and means to make it all better for you by putting your hard earned money to work in the best possible ways. Opening up the doorways to numerous opportunities. In utmost safety. And there is the **FA+ rating from CRISIL** to vouch for us.

To know more about how we can help you reach all your financial goals, write in today.

Awarded FA + by CRISIL

ANNAMALLAI FINANCE LTD

Regd. Office: 252, Mettupalayam Road, Coimbatore - 641 043

Your Prosperity is our Concern

* This is in continuation to the Statutory Advertisement released in The Hindu on 5.8.93

Contact Telephone Nos: ● **Bombay**: 243602 ● **Bangalore**: 2227365 ● **Coimbatore**: 231797 ● **Delhi**: 5752417 ●**Ernakulam**: 360425 ● **Erode**: 79800 ● **Gobichettipalayam**: 2924 ● **Kallakurichi**: 396 ● **Karaikudi**: 3029 ● **Kozhikode**: 58837 ● **Madurai**: 24450 ● **Madras**:Spencer Plaza Branch: 8522538 Mount Road Branch: 8262430 Anna Nagar Branch: 6263447 T.Nagar Branch: 440248 Mylapore Branch: 4992993 ● **Pondicherry**: 38507 ● **Pollachi**: 4595 ● **Pune**: 667178

Special Deposit Mobilisation Period till June '94

SASI / 501 / 94

ஓம் என்று சொல்லுவோம் :

* கமலாலயம்



அரசர்க்கரசன் அருத்தின் தந்தை!

மூகூர்த்தம் முடிந்த கல்யாண வீடுபோல் திருவாரூர் தேர் ஆய்ந்து, ஓய்ந்து கீழகோபுர வாசலில் நிற்கிறது. தொம்பைகள் இலேசாகக் காற்றில் ஆடிக் கொண்டிருக்கின்றன. வடக் கயிறு, கடமை முடிந்த ஆயாசத்தில் வீதியில் நீண்டு கிடக்கிறது.... இத் தேரின் வரலாறு சுவையானது : தொன்று தொட்டு நடந்து வந்த தேர்த்திருவிழாவுக்கு 1925 இல் இடையூறு வந்தது. அதிர்வேட்டிலிருந்து கிளம்பிய தீப்பொறி பட்டு, தேர் கருகியது. அச்சமயம் தியாகராஜ சுவாமியைத் தேரிலிருந்து இறக்கி, கோயிலுக்குள் பத்திரமாக எடுத்துச் சென்றவர்கள் பிச்சக் குருக்கள், மாங்குடி நடேச கொத்தனார், சாயவேட்டி சாமிநாத பிள்ளை ஆகியோர்.


குறைந்த பட்சம் இருபது பேர்களின் தோள் வலு இன்றி இடம் பெயராத தியாகராஜ சுவாமி, அன்று அந்த மூவரின் மன வலுவுக்குக் கட்டுண்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பின் புதிய தேர் கட்டும் முயற்சிகளை இழுத்துப் போட்டு மேற்கொண்டவர் எழுலூர் சுப்பராய வாத்தியார். புதுத் தேருக்கு



* முத்துஸ்வாமி தீக்ஷிதர்


முதல் நன்கொடையாக சங்கர மடத்திலிருந்து 100 ரூபாய் கொடுத்து ஆசி வழங்கினார் காஞ்சி பரமாச்சார்யார். ஆறே மாதங்களில் மாவட்டம் முழுதும் சுற்றி லட்சம் ரூபாய் சேர்த்து விட்டார் சுப்பராய வாத்தியார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இரவு பகலாக நூற்றுக்கணக்கான தொழில் கலைஞர்கள் உழைக்க, தியாகேசருக்குப் புதிய தேர் உருவானது.

தேரின் அருகே சென்று மர வேலைப்பாடுகளைக் கவனிக்கிறோம். அணு அணுவாய் ரசிக்கக்கூடிய அற்புதக் கலைத் திறன்....



● தேர் : முகூர்த்தம் முடிந்த கல்யாண வீடு போல்.....

'தேரையே பார்த்தது போதும்; தியாகேசரைக் காண வாருங்கள்' என்பது போல் கோயில் உள்ளேயிருந்து மாலை நேரப் பூஜைக்கான வாத்திய முழக்கம் கேட்கிறது. தியாகராஜ சுவாமி கொலுவிருக்கும் மண்டபத்துக்கு விரைகிறோம். ராஜ கம்பீர அலங்காரத்துடன், அம்பாள் அருகே பொலிவு சேர்க்க அமர்ந்திருக்கிறார் மன்னர் மன்னன். நைவேத்தியம் முடிந்து உபசாரங்கள் ஆரம்பிக்கின்றன. இரு புறமும் சாமரம் வீசியபடி இருவர் நிற்க, சிவாசாரியார் குடை, கொடி, செங்கோல் என மன்னர்க்குரியனவற்றைச் சமர்ப்பிக்கிறார். ஸ்தல விருட்சமான பாதிரி மரத்தின் இலையால் நீர் முகர்ந்து சுத்திகள் செய்கிறார். விதவிதமான தீபங்களின் ஆராதனை தொடர்கிறது. நிறுத்தி, நிதானமாக, கலை நயத்துடன் தீபங்கள் சுழற்றப்படுகின்றன. அடுக்கு தீபத்தின் ஒளி பெருமானின் ஆபரணங்களில் பட்டுச் சிதற, தியாகராஜசுவாமி ஒளிப் பிழம்பைப் போலவே ஜொலிக்கிறார்... 'குபேராயவை ச்ரவணாய.... மஹாராஜாய நம:' என முடியும் தீபாராதனை மந்திரத்தின்



● அருள்மிகு தியாகராஜர் ஆலயம்

பொருத்தத்தை முற்றிலும் உணரச் செய்யும் அலங்காரம்!

பூஜை முடிந்ததும் பதிகங்கள் பாடப் படுகின்றன. தொடர்ந்து, பக்தர்கள் பங் கேற்கும் ஓம்கார வழிபாடு. 'ஓம் நம சிவாய' என சிவாலயங்களில் தினமும் ஒத வேண்டும் என்பது தமிழக முதல்வரின் யோசனையாம்.

நீலோத்பலாம்பாள் என்ற நவீனமான பெயருடைய தேவியின் உற்சவ மூர்த்தங்கள் இரண்டு, ஓம்கார நாதத்தைச் செவி யுற்று, மனம் குவிந்து, சற்று ஒதுங்கி நிற்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழையதெனக் கொள்ளக்கூடிய ஒரு விக்கிரகம்; சமீபத்திய வடிவமைப்பு ஒன்று. பழைய மூர்த்தத்தின்

கமலமஹாராஜன்

காலடியில் தோழிப் பெண் ஒருத்தி முருகனைத் தோளில் தாங்கி நிற்கிறாள். குழந்தைக் குமரன் தாயாரை நோக்கி விரல் சுட்ட, அம்பாள் சமாதான பாவத்தில் தமது கரத்தைக் குமரனை நோக்கி நீட்டியபடி இருக்கிறார். மூல விக்கிரக அமைப்பும் இப்படியே இருக்கிறது. இதன் காரணமாகவே திருவாரூருக்கு உமாஸ்கந்தபுரம் என்ற பழைய பெயர் விளங்கியதாகச் சொல்கிறார்கள்.

இக் கோயிலின் மூலவர் ஸ்ரீ வன்மீக நாதர். இவர் சந்நிதியிலேயே ஒரு காலை மடக்கியும் மறுகாலைத் தொங்க விட்டும் அமர்ந்துள்ள ஸோமகுலாம்பாள் சிலை அபூர்வமான ஒயிலுடன் விளங்குகிறது. வன்மீக நாதரைக் காட்டிலும் தியாகேசரே பிரசித்தர். மஹாவிஷ்ணு தமது மார்பில் வைத்துப் பூஜித்து வந்த இந்த சோமாஸ்கந்தரை இந்திரன் தவமிருந்து பெற்றான். போரில் இந்திரனுக்கு உதவிய முசுகுந்த சக்கரவர்த்தி பிரதியுபகாரமாக அந்த சோமாஸ்கந்தரைத் தரும்படி கேட்க, இந்திரன் ஒரே தோற்றமுடைய ஏழு பிம்பங்களைக் காட்டி முசுகுந்தனைச் சோதித்தான். முசுகுந்தன் தான் கேட்ட வடிவத்தை மிகச் சரியாக அடையாளம் காட்டியதால் எல்லா வடிவங்களையும் அவனுக்கே கொடுத்து விட்டான் இந்திரன். அவற்றை ஏழு ஸ்தலங்களில் (சப்த விடங்க ஸ்தலங்கள்) ஸ்தாபித்தான் முசுகுந்தன். தான் விரும்பிக் கேட்ட சோமாஸ்கந்தரை திருவாரூரில் தியாகராஜராகப் பிரதிஷ்டை செய்தான்.

யோக நித்திரையிலிருந்தபோது மஹாவிஷ்ணுவின் மார்பு சீராக ஏறியிறங்க, அதற்கேற்ப சிவலிங்கமும் ஏறி - இறங்கிக் கொண்டிருக்கும். இன்றும் விசேஷ தினங்களில் தியாகராஜ சுவாமியைத் தோளில் தூக்கியபடி கோயில் சிப்பந்திகள் ஆடும் அஜபா நடனம், மஹாவிஷ்ணுவின் சுவாசத்தினால் விளைந்த அசைவுகளின் அடையாளம் என்கிறார்கள். படைப்புத் தொழிலின் குறியீடு என்று தத்துவார்த்த விளக்கம் சொல்கிறார்கள்.



• முகத்தை மட்டுமே தரிசிக்கலாம் தியாகராஜ சுவாமி

கமலாம்பாள் சந்நிதி வன்மீக நாதர் சந்நிதிக்கும் முந்தைய காலத்து சக்தி ஸ்தலம். தவக் கோலத்தில் காட்சியளிக்கும் அம்பாளைக் காணக் காண முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய கமலாம்பாள் கீர்த்தனைகளின் வரிகள் மனத்தில் ஓடுகிறது. பதினைந்து விநாயகர்கள் பேரிலும் தீக்ஷிதர் தனித்தனியே பாடல்கள் இயற்றியுள்ளதாகவும் கூறுகிறார்கள் - துல்லியமான வர்ணனைகள் அடங்கிய கீர்த்தனைகள் அவை.

பிரதான கோயிலைச் சுற்றிலும் சிறிதும் பெரிதுமாக ஏராளமான கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள் சோழ மண்டலத்து மன்னர் பரம்பரையினர். அவற்றுள் செம்பியன்மாதேவி கட்டியது அறநெறியப்பர் ஆலயம். இந்தக் கோயிலே பின்னர் தஞ்சை பெரிய கோயிலைக் கட்டுவதற்கான அடிப்படையாக அமைந்ததாம். தோற்றத்திலும் அமைப்பிலும் பெரிய கோயிலின் சாயல் தெரிகிறது.

அறநெறியப்பரைச் சித்ரா பௌர்ணமியன்று வழிபடுவது மிகவும் சிறப்பு என்று காஞ்சி முனிவர் திருவாரூர் வந்தபோது கூறினாராம். நாம் சென்ற தினம் சித்ரா பௌர்ணமியாக அமைந்ததில் மனம் நிறைகிறது. லிங்க வடிவினரான அறநெறியப்பருக்கு அர்ச்சனையும் தீப ஆராதனையும் செய்து பிரசாதம் அளிக்கிறார் குருக்கள்.

'அறந்தழைக்க எவ்வளவு பிரார்த்தனைகள் செய்தாலும் போதாத ஒரு சூழ்நிலை இன்று நாட்டில் நிலவுகிறதே' என்ற வருத்தம் மனத்தில் எழுகிறது. அறநெறியப்பர் சந்நிதிக்கு அருகிலேயே காணப்படும் காலிமது பாட்டில் நம் வருத்தத்தை வலியாக வளர்க்கிறது.

மேலை கோபுர வாசல் வழியே வெளியேறி கமலாலயத்தின் அழகைப் பார்த்து மனத்தைத் தேற்றிக் கொள்கிறோம். சுற்றியுள்ள மின் விளக்குகளின் ஒளியைப் பிரதிபலித்தபடி, குளம் சிற்றலைகள் எழுப்பிக் கொண்டிருக்கிறது. படிகளில் அமர்ந்து திருவாரூருடன் தொடர்புடைய பல புராணங்களை, வரலாறுகளை எண்ணிப் பார்க்கிறோம். மனுநீதி சோழன், சுந்தரர், முத்துஸ்வாமி தீக்ஷிதர் என்று பலர் இவ்வூருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். எனினும், தில்லை நடராஜருக்கும் காஞ்சி வரதராஜருக்கும் தஞ்சை பங்காரு காமாட்சிக்கும் படையெடுப்புக் காலத்தில் இக் கோயில் அடைக்கலம் அளித்தது என்ற புதிய தகவல் தனித்து நிற்கிறது... காரணம் : இன்று தமிழ்நாட்டின் பிரபல கோயில்களின் பொக்கிஷமான உத்ஸவ மூர்த்தங்கள் அனைத்துக்கும் காப்பகம் இதே கோயிலில் இருக்கிறதே!

திருவிழாக் காலங்களில் அந்தந்த ஊர்க்காரர்கள் இவ்விடம் வந்து முறைப்படி தங்கள் ஊர் தெய்வங்களை 'அழைத்து'ச் செல்வார்களாம். 'திருவாரூரில் பிறந்தால் முக்தி' என்ற முதுமொழிக்கு வலு சேர்க்கிறது இந்த நவீன ஏற்பாடு! திருவாரூர்க்காரர்கள் இருந்த இடத்திலிருந்தபடியே பல ஊர்களின் தெய்வங்களைத் தரிசித்துவிட முடிகிறது அல்லவா!


(திருவாரூர் வாசகர்கள் அனைவருமே தியாகராஜசுவாமி கோயில் பற்றிய செய்திகளை எழுதியிருப்பதால் அனைத்துப் பெயர்களையும் பட்டியலிடவில்லை. தேர் தொடர்பான சில தகவல்கள் அளித்தவர்கள் : ஜானகி மணாளன், அடியார்க்கு நல்லான்.)

"அட்மிஷன் டெஸ்டெல்லாம் நல்லாத்தான் எழுதியிருக்கே, தமிழ் மட்டும் ரொம்ப மோசமாயிருக்கே, வீட்ல பேசறது தமிழ்தானே?"

"நான் பாக்கறேன் மெட்ரோ சானல் தமிழ் நாடகம். நான் சொல்றேன் மறந்து போயிடும், தமிழ் எனக்கு இன்னும் கொஞ்ச நாள்லே....!"

- கார்த்திக் ராஜா





"சரியான சில்லறையா வச்சிருக்கிறவங்க எல்லாரும் கீழே இறங்குங்கன்னு கண்டக்டர் சொல்றாரே, ஏன்?"

"மீதிக்காசை அப்புறம் தரதாச் சொல்லி டபாய்க்க முடியாதேன்னு தான்!"

- சீர்காழி வி. ரேவதி

"பத்திரிகைக்கு ஜோக் எழுதி அனுப்பியதுக்கா அந்த போலீஸ்காரர் தன் மகனைப் போட்டு அடிச்சார்?"

"மாமூல்மைந்தன்கற புனைப் பெயர்ல ஜோக் எழுதி அனுப்புறானாம்!"

- எஸ். முகம்மது யூசுப்



7

பாலேகரின் அறைக் கதவினைத் தள்ளித் திறந்து கொண்டு நுழைந்த பிரகாஷ், அந்த ஏ.சி.குளிரிலும் வியர்த்தான். காக்கி சீருடைகள் இவ்வளவு வேகமாகத் தன்னை நெருங்கும் என அவன் எண்ணியிருக்கவில்லை.

''பிரகாஷ்... அந்தேரியில் இன்று காலை ஒரு கொலை நடந்திருக்கு. இறந்து போனது உங்களோட 'மெடிகல் ரெப்' பிரகாஷ்'னு சொன்னாங்க. எனக்கு சிரிக்கிறதா அழுறதா புரியலை. அதான் உன்னை வரவழைச்சேன்!'' என்று கூறி அவன் பதற்றத்தைக் குறைக்க முயன்றார் பாலேகர்.

பிரகாஷ் எதுவும் பேசக் கூடிய நிலைமையில் இல்லை.

''உட்காருங்க பிரகாஷ்!'' என்றார் இன்ஸ்பெக்டர். அமர்ந்தான்.

''நீங்க கடப்பட்டதாக் கூறிய பிரகாஷ் இதோ உயிரோடு இருக்கிறானே சார்...'' என்றார் பாலேகர் சிரிப்போடு.

இன்ஸ்பெக்டர் ஹனுமந்த் குமார் தம்முடைய கொஞ்சமான மீசையை நொடியளவு தடவிவிட்டுக் கொண்டார். பிரகாஷைக் கொடூரமாகப் பார்த்தார். அவன் இலேசாக நடுங்குவதைப் புரிந்து கொண்டார். தமது பேண்ட் பாக்கெட்டிலிருந்து பர்ஸ் எடுத்தார்.


''பிரகாஷ்! இது உங்களோட பர்ஸ் தானே?''

''ஆமா சார்...''

''என்னோட கைக்கு எப்படி வந்தது?''

'தெரியலை சார்..''

''இன்னொரு வழியில் வர்றேன். உங்களோட பர்ஸ் எப்போ காணாமல்



பெனிட்டோ குமார்

போனது தெரியுமா?''

''காலையில்...''

''எங்கே தவற விட்டீங்க?''

''தெரியலை ஸார்!''

''கடைசியா எப்போ உங்க பாக்கட்ல பர்ஸ் இருந்தது, பார்த்தீங்க?''

''அந்தேரி ஸ்டேஷன்ல இறங்கும்போது இருந்தது!''

''பர்ஸ் காணாமல் போனதை எப்போ கண்டுபிடிச்சீங்க?''

''மூன்று மணி இருக்கும்.''

''அது மட்டும் பர்ஸ் உங்களுக்குத் தேவைப்படலை?''

''ஆமா...''

இன்ஸ்பெக்டர் தம்முடைய கேள்விகளின் தொடர் ஜவ்வுபோல் இழுபட்டு எங்கோ போய் நிற்பதைக் கவனித்தார். சப்-இன்ஸ்பெக்டர் விஷ்ணுவின் கண்களைப் பார்த்தார். விஷ்ணு இளமையான துடிப்பில் இருந்தார். தம்மிடம் ஏகப்பட்ட கேள்விக் கணைகள் படுத்துக் கிடப்பது போன்ற பாவனையில்.

பிரகாஷுக்கு இப்போது சின்ன சிந்தனை உதித்தது. கோகுலை நான் கொல்லவில்லை. கட்டாயமாக நான் கொலையாளி இல்லை. ஆனால், கொலை நடந்தபோது ஸ்தலத்தில் நான் இருந்தேன். அந்தக் கணநேர அவசர இயக்கத்தில் பர்ஸ் தவறிவிட்டது. இந்த உண்மையை அப்படியே உரைத்துவிட்டால் என்ன?

இன்ஸ்பெக்டர் ஹனுமந்த்குமாருக்கு சப் இன்ஸ்பெக்டரிடம் விசாரணையை ஒப்படைக்க மனசில்லை. தாமே தொடர்ந்தார்:

''பிரகாஷ்... உண்மையைச் சொன்னால் உங்களுக்கும் நல்லது. எல்லாருக்குமே நல்லது. காலையில் பதினோரு மணிக்கு நீங்க அந்தேரி ஸ்டேஷன் ஈஸ்ட்ல இருந்தீங்க... இல்லையா?

''ஆமாம்!''

''அங்கே நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்...''

''என்ன தெரியும்?''

''சார்.... என்மேலே எந்தத் தவறும் இல்லை. உண்மைகளை நான் சொல்றேன்.''

''சொல்லுங்க!''

''சூட்டிங் நடந்தப்போ அந்த இடத்துல நானும் இருந்தேன்.''

''பிரகாஷ்... எங்கிட்ட இதைச் சொல்லவேயில்லையே!''என்று இடைமறித்தார் பாலேகர்.

''அவரை கை ஜாடையாய் அடக்கிவிட்டு, ''நீங்க சொல்லுங்க...'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஸ்டேஷன் விட்டு வெளியே வந்து டாக்ஸிக்காக காத்துக்கிட்டிருந்தேன். அப்போ... சுடப்பட்ட அந்த நபரும் என் அருகிலேயே நின்னுகிட்டிருந்தான். துப்பாக்கிச் சப்தம் கேட்டது. என் அருகாமையில் அந்த நபர் சாய்வதைப் பார்த்தேன். அந்த நேரம்... மேம்பாலத்தில் ஒரு நபர் துப்பாக்கியை மறைப்பதையும், ஓடுவதையும் கண்டேன். கீழே விழுந்த இந்த நபரைக் குனிந்து தூக்கினேன். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் பாக்கெட்டிலிருந்து என்னோட பர்ஸ் நழுவிட்டுதுனு நினைக்கிறேன்.''

''உடனே போலீஸ்கிட்டே சொல்லாமல் எங்கே போனீங்க?''

''ஹோட்டல் பானு போனேன். அங்கே பாலேகர் ஸாஹிப் காத்துக்கிட்டிருந்தாங்க.''

''என்ன மிஸ்டர் பாலேகர்?''

''சார்.. உண்மைதான். பிரகாஷ் என்னை ஹோட்டல் பானுவில் வந்து மீட் பண்ணினான். ஆனால், இடையில் நடந்த இவ்வளவு விஷயத்தையும் சொல்லலை.''

''பிரகாஷ்... நடந்ததைப் போலீஸில் சொல்லாமல் போனது தப்புன்னு நீங்க கருதலையா?''

''அப்படி நினைக்கலை சார்.''

''காரணம்?''

''என்னைப்போல நிறைப்பேர் பார்த்தாங்க. நிறையப் பேர் கூடினாங்க. அவங்கள்ள பலபேர் சொல்வாங்கன்னு போய்ட்டேன்.''

''கொலை செய்யப்பட்ட அந்த ஆசாமி... ஏற்கெனவே உங்களுக்கு அறிமுக

நரகமான நகரம்

மானவனா?''

''இல்லை சார்...'' மீண்டும் பொய் சொன்னான்.

''மறைக்காதீங்க. நீங்க இனிகூறும் ஒவ்வொரு பதிலும் உங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட வாய்ப்பிருக்கு!''

''அவன் யார்னு எனக்குத் தெரியாது சார்...''

''சாகும்போது உங்ககிட்டே என்னவாவது பேசினானா?''

''எதுவுமே பேசலை சார்...''

''பொய் வேண்டாம் பிரகாஷ்! நீங்க அவனோட பேசிட்டிருந்ததற்கு நிறைய சாட்சியங்கள் இருக்கு.''

''யார்?''

''பான் கடைக்காரன்.''

''என் அருகிலேயே ரொம்ப நேரம் அவன் நின்றான். அதனால் பான்கடைக்காரனுக்கு அப்படி தோன்றியிருக்கலாம்.''

''சுட்டவன் முகம் உங்களுக்கு ஞாபகம் இருக்குதா?''

''இருக்கு.''

''இன்னொரு சமயம் பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும்தானே?''

''கட்டாயம்...''

''தாங்க்ஸ்...நாளைக்குக் காலை, அந்தேரி ஸ்டேஷன் வந்துடுங்க. சின்னதா ஸ்டேட்மென்ட் எழுதி கொடுத்துடுங்க...''

''வர்றேன் சார்...''

இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் போன பிற்பாடு பாலேகர் அவனைக் கொஞ்சம் கோபமாகப் பார்த்தார்.

''பிரகாஷ்! செத்துப் போன நபருக்கும் உனக்கும் எந்த வகையிலும் தொடர்பு இல்லைதானே?''

''நான் ஏற்கனவே சொல்லிட்டேன் சார்... திரும்பத் திரும்ப ஏன் கேக்கறீங்க? எனக்கு விளங்கலை.''

''விளங்க வைக்கிறேன். பிரகாஷ், நீ ஏற்கெனவே என்னிடம் சொன்ன விஷயங்களை நமது திட்டப்படி நான் போலீஸ் கிட்டே மறைச்சிருந்தேன். நீ உளறிவிட்டாய். போலீஸ் உன்னையும் இந்த நிறுவனத்தையும் சந்தேகப்படுகிற துரதிஷ்டவசமான நிலைமையில் கொண்டு வந்து வைத்து விட்டாய். உன்னோட பர்ஸை அங்கே தவறவிட்டதுதான் பெரிய தப்பு. இப்போ கூட மோசம் போயிடலை. உள்ளதைச் சொன்னால் உத்தமம். நாம் எச்சரிக்கையாய் வியூகம் அமைத்துக் கொள்ளலாம்.''

''சார்... நீங்க என்மேல முழுமையான நம்பிக்கை வைக்கலை...''

''பயப்படறேன். பிரகாஷ்... நான் பயப்படறேன். இந்தக் கொலை நம்மையும் தொடப் பார்க்குது. இறந்தவன் உன்னிடம் பேச முயற்சியாவது பண்ணினானா?''

''நிச்சயமா இல்லை சார்...''

''அப்போ நாளைக்கு ஸ்டேஷனில் இதுக்கு மேல எதுவும் சொல்ல மாட்டாய் தானே?''

''எப்படிச் சொல்ல முடியும்?''

''பிரகாஷ்! விளையாடாதே! நம்ம கம்பெனியோட நல்ல பெயர் பாழாகாம பார்த்துக்கிடணும்.''

அலுவலகம் விட்டுத் திரும்பும்போது பாலேகரின் கேள்விகளை எண்ணி எண்ணிக் குழம்பினான். அவருக்கு ஏன் இத்தனை கவலை? பதற்றம்!

காலையில் நிஷா பிரகாஷைத் தேடி வந்திருந்தாள். பிரகாஷ் வீட்டில் தனிமையில் இருந்தான். அம்மாவும் அப்பாவும் அதிகாலை மெயிலில் பூனா போயிருந்தார்கள். அலுவலக நண்பர் ஒருவரின் கல்யாண சம்பந்தமாக. பெற்றவர்களிடம், நேற்றைய கொலை சம்பவத்தையும், அதன் தொடர்ச்சியாக இன்று விசாரணைக்கு அழைத்துள்ளார்கள் என்பதையும் கூறியிருந்தான் பிரகாஷ். 'தேவை ஏற்பட்டால், நிஷாவின் அப்பாவுடைய உதவியை நாடு' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள். நிஷாவிடம் அனைத்தையும், ஒன்றுவிடாமல் கூறினான்.

''கவலைப்பட்டாள். ஒரு சின்ன பொய்யிலிருந்து வரிசையாய் எத்தனை பொய் பார்.. என்னைக் கேட்டால், அந்த ஷில்பா கம்பெனி சம்பந்தமாய் இதுவரை உன்னிடம் மறைவா உள்ள உண்மை அத்தனையையும் வெளியே சொல்லிடறதுதான் உசிதம் பிரகாஷ்!''

''எங்கிட்ட என்ன உண்மை மறைவா உள்ளது?''

''இருக்குது! வி. டி. ஸ்டேஷனில் ஷ்யாம் சுந்தரை சந்தித்தது. அவன் கோகுலை உனக்கு அறிமுகம் செய்தது. அவர்கள் சரக்கு மாற்றுத் திட்டம் சொன்னது. நீ அதை ஏற்காதது. சுடப்பட்ட கோகுல், உன்னை ஷ்யாம் சுந்தர் கூப்பிடுவதாகச் சொல்லி அழைச்சது. இத்தனையையும் ஷில்பா கம்பெனியில் உன்னோட சீனியருக்கு நீ சொல்லலை. போலீஸ்கிட்டேயும் சொல்லலை!''

''வேறே என்ன சார் கொண்டு வரட்டும்...?''

''போதும்பா... வயிறு முட்டச் சாப்பிட்டுட்டா, பிறகு மாவாட்ட கஷ்டமா இருக்கும்!''

– சீர்காழி வி. ரேவதி



"இத்தனையையும் நான் வெளியே சொல்லியிருந்தால்... நான் இதற்குள் கைதாகியிருப்பேன் நிஷா!"

"அதான் உன்னோட தப்பான அபிப்பிராயம். இவற்றை மறைக்கப் போய்தான் நீ இப்போ அகப்பட்டுக்கப் போறே!"

"நிஷா! நான் எந்தவித தப்பும் பண்ணலையே... ஏன் பயப்படணும்!"

"அப்ப எதுக்கு மறைக்கணும்?"

"வேலையில் சேரப்போய் இப்படி ஆகும்னு நான் எதிர்பார்க்கவே இல்லை. ஏற்கனவே...ஒரு ஃபைல் பத்தின புதிர் வேறே கலையாமல் இருக்குது."

"அந்த ட்ரக்-யூசர் ஹைட்ரோக்னோரைடு விவகாரம்தானே?"

"ஆமாம்..."

"பிரகாஷ்! அது இப்போ நமக்குத் தேவை இல்லாதது. இந்தச் சிக்கலுக்கும் அதுக்கும் கடுகளவு கூடத் தொடர்பு இல்லை. அதை மறந்துடுவோம்."

"அப்போ..ஷ்யாம் சுந்தர் விவகாரத்தை மட்டும் போலீஸில் சொல்லிடுவோம்."

இவர்கள் அந்தேரி போலீஸ் ஸ்டேஷனை அடைவதற்கு முன்னதாகவே கேஸ் ஏகப்பட்ட படிகள் படுவேகமாக நகர்ந்து விட்டது.

ஒன்பது மணியளவில் சப்-இன்ஸ்பெக்டர் விஷ்ணு நார்கோட்டிக் ஸெல்லிலிருந்து (போதைப் பொருள் கடத்தல் தடுப்பு இலாகா) வந்திருந்த தேடப்படும் நபர்களின் ஆல்பத்தினை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவருடைய கண்கள் திடீரென ஒரு போட்டோவைப் பார்த்துவிட்டு நமர மறுத்தன.

இவன் நேற்று கடப்பட்டவன் போல் அல்லவா இருக்கிறான்? அவனேதான்! போட்டோவிற்கு அடியில் நோக்கினார்.

"கோகுல்."

ஆல்பத்தை எடுத்துக் கொண்டு இன்ஸ்பெக்டரிடம் சின்னக் குழந்தை போல் ஓடினார்.

"சார்.. இந்த போட்டோவைப் பாருங்க..."

"பார்த்தவர் அதிர்ந்தார். விஷ்ணு! இந்த ஆல்பம்...?"

"கமிஷனர் ஆபிஸிலிருந்து வந்தது! நார்கோட்டிக் ஸெல்லிலிருந்து!"

"அப்போ கடப்பட்டவன் நார்கோட்டிக் ஸெல்லுக்குத் தேவைப்படறான்."

"நாம் உடனே டி.வி.பி.க்கு இன்பார்ம் பண்ணிடறது நல்லது."

"போன் போடுங்க. பேசறேன்."

டி.வி.பி.ராஜேந்திரவர்மா உற்சாகத் தொனியில், "உடனே புறப்பட்டு வருகிறேன்" என்றார்.

அவருக்காகக் காத்திருந்தார்கள். இருவருக்குமே, 'நார்கோட்டிக் ஸெல் ஆசாமி



"உங்க பத்திரிகையிலே வெளியான 'டின்னர்' கதையைப் படித்து ஜீரணிக்கவே முடியவில்லை..."

"அதுக்குத்தான் அடுத்த பக்கத்திலேயே 'சோடா'ன்னு ஒரு கட்டுரை பிரசுரித்திருக்கிறோமே, கவனிக்கவில்லையா?"

- சீர்காழி ஜே. பலராமன்

களிடம் கேஸைக் கொடுத்துவிட்டால் தொந்தரவில்லாமல் ஒதுங்கிக் கொள்ளலாம்' என்ற அற்ப ஆசை.

ராஜேந்திரவர்மாவுக்கு அளவுக்கு மீறின மரியாதை செலுத்தினார்கள். இன்ஸ்பெக்டர் எழுந்து ஆல்பம் காட்டினார். பிரேதப் பரிசோதனை ரிப்போர்ட்டைக் காட்டினார். சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பான் கடைக்காரன், பிரகாஷ் உள்ளிட்ட விவரங்களையும் தெளிவாகச் சொன்னார்.

"ஹனுமந்த் குமார்... இந்த கோகுல் ஒரு பொம்மைதான். இவனுக்குப் பின்னாடி நிறைய ஆசாமிகள் இருக்காங்க."

"கேஸை மாத்திடலாமா சார்?"

"நோ! நோ! ஹனுமந்த் குமார், கொலைகாரனைக் கண்டுபிடிக்க வேண்டியது உங்களோட பொறுப்பு. எனக்கு இது ஒரு துருப்புச் சீட்டு. இதன்மூலம் வேறு பல கடத்தல் மன்னர்களையும் கண்டு பிடிக்க வாய்ப்பிருக்கும்."

"நாங்களும் ரொம்பத் தீவிரமாயிருக்கோம் ஸார்" என்றார் ஹனுமந்த் குமார். "இப்பக் கூட பிரகாஷை விசாரணைக்காக வரச்சொல்லியிருக்கோம்!"

"வெரிகுட்"

நிஷா அந்தேரி போலீஸ் ஸ்டேஷன் முன்பு காரை அமைதியாக்கிவிட்டு இறங்கினாள். பிரகாஷ் ஏராளமாய்ப் பயந்து போயிருந்தான். வெகு கஷ்டப்பட்டுக் காரிலிருந்து இறங்கினான்.

நிஷா அவனைக் கண்டிப்புக் காட்டி உள்ளே தள்ள, இன்ஸ்பெக்டரைப் பார்த்தவுடன் பழகின புன்னகை காட்டினாள்.

"இதான் பிரகாஷ் சார்.." என்றார் இன்ஸ்பெக்டர். அவருடைய கண்கள் போன பக்கம் பிரகாஷும் திரும்பினான்.

ராஜதோரணையில், சிங்கம் போல் அமர்ந்திருந்தார். டி. வி. பி. ராஜேந்திரவர்மா. அவருடைய கண்கள் பளபளத்தன. மீசை இல்லாத மேல் உதடு துடித்தது.

"உட்கார் பிரகாஷ்! கோகுல் உனக்கு எவ்வளவு நாளாகப் பழக்கம்? உண்மை சொன்னால் உத்தமம்" என்றார் டி.வி.பி.


பிரகாஷ் நிஷாவைப் பார்த்தான்.

(தொடரும்)

காந்தி மண்டபமா? காதல் மண்டபமா?

சென்னை நகரக் காதலர்களுக்கு மெரினா பீச்சும், பனகல் பார்க்கும், ப்ளூ டயமண்ட் தியேட்டரும், வள்ளுவர் கோட்ட வாசற்படிகளும் அலுத்துப் போய் விட்டன போலும். சமீப காலமாக, காந்தி மண்டபத்தை ஹோல்ஸேல் குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். மந்தை மந்தையாகக் காதல் ஜோடிகள், காந்திக்கு இலவச ஒளியும் ஒலியும் காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். மரத்தடி முதல், மண்டப உள் வாயில் வரை மூலைக்கு மூலை வண்ணக் கனவுகள் காணும் சிட்டுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர்.

உணவு இடைவேளைகளிலும் இதர ஓய்வு வகுப்புப் பொழுதுகளிலும் அமைதியாகப் படிப்பதற்கென காந்தி மண்டபத்தை நாடும் அண்ணா யூனிவர்ஸிட்டி மற்றும் ஏ.ஸி. காலேஜ், ஐ.ஐ.டி., ஸி.பி.டி. மாணவர்கள் இன்று அந்தப் பக்கம் தலைவைத்துப் படுப்பதற்கே அஞ்சுகிறார்கள்.



அந்தக் காலத்து சினிமாக் காதலர்கள் மாதிரி தூர தூர(அல்லது கொஞ்சம் நெருங்கி) உட்கார்ந்து (வெறுமனே) பேசிப் போகும் காதலர்களாக இல்லாமல், நமது தற்கால மாண்புமிகு கதாநாயக, நாயகியர் பாதிப்பில் ஒரு முழு நீள சினிமாவே காட்டும் இத்தகைய ஜோடிகளால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள் தாம். நிஜ காதலர்கள் தவிர, 'வாடகை'க் காதலி(?)களைக் கூட்டி வரும் சிலரும் (பலரும்!) இவ்விடத்தில் அதிகம் காணக் கிடைப்பதால் - சென்னை நகரின் மிக முக்கிய சுற்றுலாத் தலங்களுள் ஒன்றான இங்கே யாரும் வரத் தயங்குகிறார்கள்.

காந்தி மண்டப வளாகத்தில் அற்புதமான நூலகம் ஒன்றிருப்பது அநேகமாகப் பலருக்குத் தெரிந்திருக்காது. தெரிந்து, ஞாயிறுகளில் வரும் ஒருசில நூல் ஆர்வலர்களும் மேற்படி 'கலாசாரப் புரட்சி'யால் கதிகலங்கிப் போய், 'புஸ்தகமாச்சு; ஒண்ணாச்சு' என்று ஒதுங்கி விட்டார்கள். காரணம் - ரெய்டு என்ற பெயரில் அவ்வப்போது உள்ளே நுழையும் சில காக்கிச் சட்டைக்காரர்களுக்கு பதில் சொல்லியாக வேண்டிய தர்மசங்கடம். ஆனால், ''ரெய்டெல்லாம் சும்மா பிலிம் காட்டுவதற்குத்தான். ஹீரோ- ஹீரோயின்களிடம் மாமூல் வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள்!'' என்று குண்டைத் தூக்கிப் போடுகிறார், மண்டபத்தில் வேர்க்கடலை விற்கும் ஒருவர்.

விழாக்கள், மாநாடுகள் நடத்த மண்டபத்தை வாடகைக்குத் தருகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் கலந்து கொள்ள வரும் முக்கியஸ்தர்கள், இங்கு நடக்கும் லீலைகளைப் பார்த்து முகம் சுளித்து, ''இனிமேல் வேறு இடம் பாருங்கள்'' என்று அமைப்பாளர்களுக்குக் கட்டளை இடுகிறார்களாம். வேர்க்கடலை வண்டிக்குள் போதை மருந்து சப்ளை ஜோரும் சிறப்புமாக நடைபெறுகிறது. பீடி வலித்துக் கொண்டு ஆறு வித்தியாசம் பார்த்துக் கொண்டிருக்கும் வாட்ச்மேன்கள் இதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருதுவதேயில்லை.

''உங்க வேலையப் பார்த்துக்கிட்டு போங்க சார்.''

காந்தி மண்டப பாதுகாப்பு நிர்வாகத்தின் தூக்கம் கலைய வேண்டியது மிக அவசியம். அல்லது அரசாங்கமே 'போதை'யில் ஆழ்ந்து போயிருப்பதாகத்தான் முடிவு கட்ட வேண்டியிருக்கும்.

- ஔரங்கசீப்



பந்தா இல்லாத எம். எல். ஏக் களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஒரு விரல், திருவாரூர் தொகுதி எம். எல். ஏ. தம்புசாமிக்கு. அடிப்படையில் விவசாயி. கம்யூனிஸ சித்தாந்தப் பிடிப்பாளர். திருவாரூர் மக்கள் சார்பாக இந்த ஊர் எழுத்தாளர்கள் (ஒன்றா? இரண்டா? தலைகளை எண்ணிப் பாருங்கள்!) எம். எல். ஏவுக்குச் சில கேள்விகளைத் தந்திருக் கிறார்கள். பதில் வாங்கி, தொகுத்திருப்பது மட்டுமே நமது பணி!

வெள்ளச் சேதத்தால் திருவாரூர் - சுற்றுவட்டாரப் பகுதிகளில் இவ்வாண்டு சாகுபடி முற்றிலும் சேதமடைந்துவிட்ட நிலையில், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் செய்திருக்கிறீர்கள்?

இப்பகுதி விவசாயிகளுக்கு (இவ்வாண்டு மட்டும்) நிலவரி முற்றிலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட

எழுத்தாளர்களின் கேள்விகளுக்கு எம்.எல்.ஏ. பதில்.

இதர பகுதிகளோடு ஒப்பிடுகையில் இது சந்தோஷப்பட வேண்டிய விஷயம். ஏனெனில், இதர பகுதிகளில் தள்ளுபடியை விடுங்கள்; 'ஒத்திவைப்பு' கூடச் செய்யவில்லை. அரசைப் பெரிதும் வற்புறுத்தியே இதைச் செய்ய முடிந்தது.



திருவாரூரைச் சுற்றியுள்ள மரங்கள் அடர்ந்த பல கிராமங்களில் இன்றுஏராளமான மரங்கள் கொள்ளை போகின்றனவே. தடுப்பு நடவடிக்கைக்கு முயற்சி செய்கிறீர்களா?

இது, நான் கேள்விப்படாத, புதிய தகவலாக இருக்கிறது. இதுகுறித்துப் புகார் ஏதும் வந்ததாகத் தெரியவில்லை. விசாரிக்கிறேன்.

திருவாரூர் விவசாயிகள் பெரிதும் நம்பியிருக்கும் ஓடம்போக்கி ஆறு, கற்றாழை மண்டிக் கிடக்கிறது. அதை அகற்றி நீரைத் தூய்மைப்படுத்த முயற்சி செய்யக் கூடாதா?

ஓடம்போக்கி நதி துப்புரவுப் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு பகுதியாக புல்டோசர் மூலம் கற்றாழையை நீக்கி வருகிறார்கள். இப்பணி, கடல்புறத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருப்பதால், நகர் மையத்துக்கு வர, சற்று காலம்

* தம்புசாமி




பிடிக்கும். கூடிய விரைவில் முடிந்துவிடும்.

திருவாரூர் முழுக்க இன்று ரவுடிகள் ராஜ்ஜியமாகி விட்டது. கட்டைப் பஞ்சாயத்து முறைதான் எங்கும் நிலவுகிறது. காவல் துறையின் கவனத்திற்கு நீங்கள் இதை எடுத்துச் செல்லக் கூடாதா?

சில பெரிய மனிதர்கள், தம் சொந்தக் காரியங்களுக்காகக் கூலிகளை ஏவி விடுவதென்பது எங்கும் இருக்கிற விஷயம் தான். திருவாரூரைப் பொறுத்த வரையில்





- இங்கும் சிலர் அப்படி இருக்கக் கூடும். ஆனால் பிற பல இடங்களோடு ஒப்பிட்டால் அப்படி ஒன்றும் குறிப்பிடும்படியான மோசமான நிலைமை இல்லை.


தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபோது - நியாயமாக இந்தப் பகுதிக்குத் தலைநகராகிற தகுதியும், சிறப்பும் பெற்றது திருவாரூர்தான். நாகப்பட்டினத்திற்கு அதை தாரை வார்த்தது எந்த வகையில் நியாயம்?

இப்போது கேட்டு என்ன பிரயோஜனம்? அன்று தலைநகர் பரிசீலனையில் இருந்த போது எத்தனை கேட்டுப் பார்த்தேன்? ஒருத்தராவது ஒத்துழைப்புத் தர முன் வந்தார்களா? வர்த்தகர்களெல்லாம் - இந்த விஷயத்திலும் - 'வியாபார' நோக்கில் செயல்பட்டார்கள். மக்களுக்குப் பொறுப்பில்லை. ஒத்துழைக்கும் மனோபாவம் இல்லை. கலைஞர் ஆட்சியில் இருந்த போது செய்திருக்க முடியாதா என்ன? இவர்களுக்கு ஆர்வமில்லாதபோது வேறு யார் என்ன செய்ய முடியும்?

“மக்களுக்கு அக்கறை இல்லை!”

விவசாயக் கல்லூரி, பெண்கள் கல்லூரி இல்லாமை, நகரெங்கும் திறந்த வெளிச் சாக்கடைகள், ஒழுங்கில்லாத பஸ் சர்வீஸ்... இதற்கெல்லாம் நீங்கள் தலையிட்டு ஏதும் தீர்வு காணக் கூடாதா?

நானே எத்தனையோ நாட்களாக, விவசாயக் கல்லூரியின் அவசியம் பற்றி, அரசிடம் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். பல கோடி ரூபாய் செலவாகும் என்று தயங்குகிறது அரசு.



பாதாள சாக்கடை, ஒரு நகரில் அமைக்கப்படவேண்டும் என்றால், அதற்கென ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகை இருந்தாக வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். திருவாரூரைப் பொறுத்தவரை அந்த அளவு இன்னும் வந்தபாடில்லை. ஆனாலும் தஞ்சை - கும்பகோணம் பகுதியில், யானைக்கால் வியாதி பரவுவது போல, இங்கும் கழிவுநீர் வசதி ஒழுங்காக இல்லையென்றால் - பரவும் அபாயம் இருக்கிறது என்பதைப் பிரதானமாக முன்வைத்து, அரசிடம் பாதாளச் சாக்கடைக்காகப் போராடி வருகிறேன்.

அப்புறம் பஸ் பிரச்னை. 100% உண்மை. பஸ்கள் சரியாகப் பராமரிக்கப் படுவதில்லை; சரியான நேரத்திற்கு வருவதில்லை... இன்னும் பல குறைகளும் உண்டு. அரசு, கார்ப்பரேஷன்களைக் கவனிக்க வேண்டும் என்பதையே சுத்தமாக மறந்துவிட்டது.

சமீப காலமாக, கம்யூனிஸ்ட் இயக்க ஆதிக்கத்தால், இப்பகுதியில் கூலித் தொழிலாளர் தட்டுப்பாடு இருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து? ஆட்கள் கிடைத்தாலும் அதிக கூலி கேட்டு வேலை செய்ய மறுக்கிறார்கள் என்கிறார்களே?

இதனை நான் கடுமையாக மறுக்கிறேன். ஒரு சில நபர்களால் பிரசாரம் செய்யப்படும் தவறான கருத்து இது! விவசாயிகளின் ஒவ்வொரு சிறு பிரச்னைக்கும் அவர்களோடு தோள்நின்று முதல் குரல் கொடுப்பவர்கள் நாங்கள்தான்! இதை நீங்கள் எங்கள் பகுதி விவசாயிகளிடமே நேரில் கேட்கலாம்.

சில விவசாயிகளே இப்படிச் சொல்கிறார்களே?

அறியாமைதான் காரணம். சிறு விவசாயிகளுக்கு,



தங்கள் வாழ்க்கை முறையே புரியவில்லை. உரத்துக்கும், விதைக்கும், இதர விஷயங்களுக்கும் அரசு எத்தனை விலை ஏற்றினாலும் கண்ணை மூடிக் கொண்டு கொடுத்துவிட்டு வாங்கி வரவில்லை? அந்தச் செலவை ஒப்புநோக்க, கூலி உயர்வு என்பது மிகச் சொற்பம்! கூலி உயர்ந்து போனதற்குக் காரணம் - விலைவாசி உயர்வு. தவிர, ONGC இல் ஒரு நாளைக்கு 45 - 60 ரூபாய் வரை கூலி தருகிறார்கள். எனவே பெரும்பாலானோர் அங்கு போய் விடுகிறார்கள். அங்கே அதிகக் கூலி வாங்கிப் பழக்கப்பட்டவர்கள், இங்கும் அதே அளவு கேட்கிறார்கள். கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இதில், கம்யூனிஸ ஆதிக்கம் எங்கு வந்தது? இதெல்லாம் வீண் பேச்சு.

கிடாரங்கொண்டான் கிராமத்துக்கு நீர் வரச் செய்யும் வாய்க்காலின் நடுவே ஒரு ரெகுலேட்டரும், ஒட்டலும் கட்டியிருக்கிறார்களே, இப்போது கிராமத்துக்கு நீர் வரத்து சுத்தமாக நின்றுபோய்விட்டதே?

இப்போது கேட்டு என்ன பிரயோஜனம்? அந்தக் கட்டடங்கள், பிளான் அளவில் இருக்கும்போதே ஒரே குரலில் எதிர்த்துப் போராடியிருக்க வேண்டாமா? இவர்களுக்கு அக்கறையில்லை. எல்லாம் முடிந்தபின் ஆதங்கப்பட்டு என்ன பயன்?

அவ்வூர் விவசாயிகள், உடைந்து போன பெட்டாமைச் (அணையிலிருந்து வரும் நீரின் வேகத்தை மட்டுப்படுத்தி, சீராகப் பாயச் செய்வதற்காகக் கால்வாய்களின் நடுவே சற்று மேடாக்கி, நிறுவப்படும் காங்கிரீட் தளம் - 'பெட்டாம்') சீர்செய்து, உயர்த்திக் கொடுத்தால் தண்ணீர் கிடைக்கும் என்கிறார்கள். அடியக்கமங்கலம் வாய்க்கால் தண்ணீரைத் தங்களுக்குக் கிடைக்கச் செய்யும்படி கேட்கிறார்கள்...

அந்தப் பணிகளும் கவனிக்கப்பட்டு நடந்துள்ளன. வாய்க்கால் ஓரத்தில் சிமெண்டு கவர் கட்டும் வேலை இன்னும் இருக்கிறது. அதையும் செய்து தருவதாக அரசுத் தரப்பில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

புராணச் சிறப்பு வாய்ந்த இந்தகரை, சுற்றுலாத்தலமாக்க முயற்சி மேற்கொள்ளலாமே?

முயற்சியெல்லாம் செய்யாமல் இல்லை. ஆனால் அரசுக்கு நாகப்பட்டினம்தான் கண்ணில் படுகிறது. காரணம் கேட்டால் நாகூர் - வேளாங்கண்ணி அருகில் உள்ளன. எனவே நாகையைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து விரிவாக்கி, வசதிகள் செய்தால் அதிக லாபம் என்று கருதுகிறார்கள்.

தொகுப்பு : பியார்

"யாரா இருந்தா என்னய்யா?"

ராஜீவ் காந்திக்கு வேகமாகக் கார் ஓட்டுவதில் இருந்த ஆர்வம் உலகப் பிரசித்தம். ஒருமுறை அவர் ஒரு கூட்டத்தில் பேச, ஜீப்பில் சென்று கொண்டிருந்தார். ஜீப்பின் வேகம் அவருக்குச் சரிப்படவில்லை. இரண்டு மூன்று முறை டிரைவரிடம் சொல்லியும் ஜீப்பென்னவோ நிதானமாகவே சென்று கொண்டிருந்தது. ராஜீவ், பொறுக்க முடியாமல் டிரைவரைப் பின்னால் உட்காரச் சொல்லி விட்டுத் தாமே ஜீப் ஓட்ட ஆரம்பித்தார். வண்டி, 60-70-80 கி.மீ வேகத்தில் பறக்க ஆரம்பித்தது.



வழியில் ஒரு போலீஸ் அதிகாரி பார்த்துவிட்டு ஒயர்லெஸ்ஸில் கான்ஸ்டபிளிடம், "ஜீப் கண்மண் தெரியாத ஸ்பீடில் வருது பார், நிறுத்தி கேஸ் புக் பண்ணு" என்று சொன்னார்.

சற்று நேரத்தில் அந்த கான்ஸ்டபிள், "ஸ... ஸ... ஸார்... ஜீப்பில் வி...வி... வி.ஐ.பி. ஸார்..." என்று குழறினார்.

அதிகாரிக்குக் கடுப்பேறியது. "யாரா இருந்தா என்னய்யா, சட்டம் எல்லாருக்கும் ஒண்ணுதான்" என்று உறுமினார். "அதுசரி, யார் அந்த வி.ஐ.பி...?"

கான்ஸ்டபிள் சொன்னார் : "அது எனக்கும் தெரியலை சார்... ஆனா, அவரோட ஜீப் டிரைவர் யார் தெரியுமா? ராஜீவ் காந்தி!"

- அனன்யா

சந்தனக் கடத்தல்தான் சப்ஜெக்ட். வீரப்பன் பைனான்ஸ் செய்தாரா என்று கேட்கும் அளவுக்குக் கடத்தலை நியாயப்படுத்துகிறார்கள்!

(''நாங்கள் காலங்காலமாய் சந்தன மரம் வெட்டியே வாழ்கிறோம். பின் வெட்டக் கூடாது என்றபோது, மாற்றுவேலை கேட்டோம். பதிலில்லை.'')

உயிர் கொடுத்திருப்பவர் நாசர். ஊருக்கு உழைப்பாளி. இயல்பான மிடுக்கு. தம்பியாக வருபவர் முரளி. வீரத்துக்கும் இவருக்கும் ஸ்நானப்பிராப்திகூட இல்லை. ஆனால் கடவுளே, எத்தனை சண்டை?

சரி, படமாவது வேகமாகப் போகுமா என்றால், மூச்! விறுவிறுப்புக்கு வடிவேலு தவிர்த்து ஆளில்லை. சண்டைகள் எல்லாம் கேஸட் உருவல். உதைப்பதற்குக் கூடவா, தமிழ் உதை இல்லை?

வஞ்சனையில்லாமல் காதலிக்க, ரஞ்சிதா. அப்புறம் ஒரு அம்மா, சென்ட்டிமென்ட்டுக்காக.

காமிராவுக்கு வீரவணக்கம். காட்டின் வனப்பை ஒழுங்காய்ப்



அதர்மம்

பிடித்துப் போட்டிருக்கிறது.

டைரக்டர் ரொம்ப தைரியசாலி. மக்கள் வந்து, இடம் பிடித்து உட்காரும்வரை, பாட்டு போட்டு நேரம் ஓட்டுகிறார். வில்லன் செத்தவுடன் பொன்மொழி உதிர்த்து படத்தை முடிக்காமல் தன் கருத்தைச் சொல்லி முடிக்கும்வரை பிடிவாதமாய் ரீல் சுத்துகிறார். படத்தில் காணப்படும் 'டிஷ்யூம்' வீரத்தை விட டைரக்டரின் இந்தத் துணிச்சல்தான் ஆச்சர்யப்பட வைக்கிறது!

- துளசி



''தலைவர் மகா மட்டமான ஆளுய்யா!''

''என்ன விஷயம்?''

''பேரணியைத் தலைமை ஏற்று நடத்தினதுக்கு அவருக்கும் ஒரு நாள் கூலி வேணுமாம்!''

- அம்பை தேவா

''கள்ள வோட்டு ஆசாமிங்க நிறையப் பேரை வெளி மாநிலத்திலேர்ந்து நம்ம தலைவர் ஏற்பாடு செய்திருக்கார்னு நினைக்கிறேன்!''

''எப்படிச் சொல்றே?''

''லாரி ஸ்டிரைக் எதுவும் வரலைன்னா நிச்சயமா தேர்தலில் நாம தான் ஜெயிப்போம்ங்கிறாரே!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



80. விபீஷணன்



சபையில் ராவணனுடைய தம்பி கும்பகர்ணன் எழுந்து பேசினான் :

''மகாராஜனே! நீதி சாஸ்திரம் அறியாதவனைப் போல் நடந்து கொண்டபடியால் பெரும் அபாயத்தைத் தருவித்துக் கொண்டிருக்கிறீர். ராம லக்ஷ்மணர்கள் பேரில் உமக்கு விரோதம் இருந்தால் முந்தி அவர்களை எதிர்த்து அவர்களைத் தோற்கடித்து வதம் செய்துவிட்டு, பிறகு அல்லவோ சீதையைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தீரானால் சீதையும் உம்மை விரும்பியே ஒப்புக் கொண்டிருப்பாள். மலையைத் தொடர்ந்து தழுவி நதி ஓடுவது போல் வெற்றி பெற்ற வீரனை அவள் தொடர்ந்திருப்பாள். அப்படி நீர் செய்யவில்லை. யாரையும் யோசனை கேட்காமல் பாப காரியம் செய்து விட்டு விரோதம் சம்பாதித்துக் கொண்டு, இப்போது காலம் தாண்டிய பின் ஆலோசனை சொல்லும்படிக் கேட்கிறீர். இது அரசனுக்குரிய உத்தம வழியல்ல. ஏன், மத்தியம வழியுமல்ல.''

இவ்வளவும் தைரியமாகச் சொல்லிவிட்டு கும்பகர்ணன் அண்ணன் முகத்தைப் பார்த்தான். தான் சொன்ன கடினமான மொழிகளைக் கேட்ட ராவணன் முகம் வாடியதைப் பார்த்து அவனால் பொறுக்க முடியவில்லை. சூரன் கும்பகர்ணனுக்கும் ராவணனுக்கும் அளவு கடந்த அன்பு. நடந்தது நடந்து போயிற்று. இனி அதைப் பற்றிப் பேசிப் பயனில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

ராமன் நிகரற்ற வில்லாளி என்பது கும்பகர்ணனுக்குத் தெரியும். ராவணன் பெற்றிருக்கும் வரங்களின் வரம்பும், குறையும் கும்பகர்ணன் அறிவான். ஆயினும் இப்போது ராவணனைக் கைவிடுவதற்கு இல்லை. அதைரியப்படுத்துவதில் பயனில்லை என்று எண்ணி கும்பகர்ணனும் மந்திராலோசனை சபையில் மற்றவர்கள் பேசியது போலவே தைரியம் பேச ஆரம்பித்தான் :

''நீர் செய்தது தவறு. கையாள்கிற முறையும் தவறு. முன்னால் செய்ய வேண்டியதைப் பின்னால் செய்கிறீர். பின்னால் செய்ய வேண்டியதை முன்னால் செய்துவிட்டீர். ஆயினும் இந்த ராமனை நான் வதம் செய்வேன். பயப்பட வேண்டாம். அவன் பாணங்கள் ஒன்றிரண்டு என்மேல் படும். ஆயினும் அவனைக் கொன்று அவன் ரத்தத்தைக் குடித்துவிட்டு உமக்கு நான் வெற்றி சம்பாதித்துத் தருவேன். அண்ணா! கவலையற்றுச் செய்ய வேண்டியதைச் செய்வீர்'' என்றான்.

கும்பகர்ணன் ஏதோ முன்னுக்கும்

ராஜாஜி



சக்கரவர்த்தித் திருமகன்

பின்னுக்கும் முரணாகப் பேசினான் என்றும், அதற்குக் காரணம் அவனுடைய மந்த புத்தி என்றும் சிலர் வியாக்கியானம் செய்வது உண்டு. சாபத்தால் ஆறு மாதம் தூங்கினாலும் விழித்த போது அவன் அறிவுக்குக் குறைவில்லை. முதலில் உண்மையை பயப்படாமல் பேசினான். பிறகு ராவணனுடைய நிலையைப் பார்த்து அன்பு மேலிட்டுப் பேசினான். குடும்பக் காப்புக்கு வேண்டிய நற்குணங்களை நன்றாகப் பெற்ற வீரன்.

ராவணனுடைய பிரதான ஆலோசனைக்காரன் பிரஹஸ்தன். இவன் ராவணனுடைய பலத்தை எடுத்துக் காட்டி, அவனை யாராலும் வெல்ல முடியாது என்றும் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் சொல்லி ராவணனைச் சந்தோஷப்படுத்தினான்.

ராவணனும் உற்சாகமடைந்து பேசினான். ''குபேரனை ஜெயித்தவன் அல்லவா நான்? அவனை விரட்டியடித்து இந்த லங்கையைப் பற்றிக் கொண்ட என்னை யார் இங்கே வந்து எதிர்ப்பார்கள், பார்க்கலாம்!'' என்றான். சபை ஆரவாரித்தது.

இந்த ஆரவாரத்தில் சபையிலிருந்த விபீஷணன் சேரவில்லை. அரசனும் தமயனுமான ராவணன் எவ்வளவு கோபமாக இருந்தாலும் அபாயத்தை எடுத்துக் காட்டி அவன் போகும் தவறான வழியிலிருந்து அவனை மீட்டு ராஜ்யத்தையும் ராக்ஷச குலத்தையும் காப்பாற்ற வேண்டியது தன்னுடைய கடமை என்று உணர்ந்து மற்றவர்கள் பேசியதை ஒப்புக் கொள்ளாமல் எழுந்து நின்று பேசினான்.

''சீதை ஒரு கொல்லும் விஷப் பாம்பு. அவளை ஏன் எடுத்து வந்தீர்? இப்போது உம்முடைய முதல் கடமை அவளைத் திருப்பி ராமனிடம் சமர்ப்பித்து விடுவதுதான். இதைச் செய்யாவிட்டால் எல்லாரும் அழிந்து நாசமாகப் போவோம். இது நிச்சயம்'' என்றான்.

ராமனுடைய சாமர்த்தியம், பலம், ஆயுதப் பயிற்சி எல்லாவற்றையும் எடுத்து மறைக்காமல் தைரியமாகச் சொன்னான்.

''ராமனை எதிர்த்தால் தோல்வி நிச்சயம். நம்முடைய அதிர்ஷ்டம் க்ஷீணித்து வருகிறது. சீதையைத் திருப்பிக் கொடுத்து ராமனிடம் சரணம் புகுந்து சுகமாக ராஜ்யம், சம்பத்து,

மானம், எல்லாம் காப்பாற்றிக் கொள்வோம்'' என்றான்.


இப்படி விபீஷணன் விடாமல் மன்றாடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த இந்திரஜித்து பொறுமையிழந்தான்.

''சிற்றப்பர் பேசும் பேச்சுக்களைக் கேட்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. நம்முடைய குலம் என்ன? நம்முடைய சக்தி என்ன? பௌலஸ்திய குலத்தில் பிறந்த ஒருவர் இப்படிப் பேசுவதும், சபையோர் அதைச் சாவதானமாகக் கேட்டுக் கொண்டிருப்பதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. சிறுமை குணத்தைக் காட்டி விட்டார் சிற்றப்பனார். அவருடைய பேச்சை ஒரு நாளும் நாம் அங்கீகரிக்க முடியாது. இரண்டு மானிடர்களைக் கண்டு யாராவது இப்படிப் பயப்படுவார்களா? இந்திரனையும் அவன் தேவ கணங்களையும் அடித்துத் தள்ளி நான் வெற்றி பெறவில்லையா? நம்மைக் கண்டு உலகம் இப்போதும் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? விபீஷணர் இந்த யோசனை சொல்லுகிறார். இது நமக்கு அவமானமாக இருக்கிறது'' என்றான்.

இதைக் கேட்டு விபீஷணன், ''பாலனே! உனக்கு அனுபவம் போதாது. இப்படித்தான் பேசுவாய். நீ அரசனுக்கு மகனாகவிருந்தாலும் அவனைக் கெடுக்க வந்த சத்துரு என்றே நான் நினைக்கிறேன். அரசனுக்கு ஹிதம் சொல்லுவதற்கென்று இருக்கும் மந்திரிகளே! அரசனுக்கு அழிவைத் தரும் யோசனை சொல்லுகிறீர்கள். லங்கேசனே! நான் சொல்லுவதைப் புறக்கணிக்க வேண்டாம். ஜானகியைக் கவுரவமாகத் திருப்பி ராமனிடம் கொண்டு சேர்த்து விட்டு, நடந்துபோன குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி பிரார்த்தித்துக் கொள்வீர். இதுவே வழி, வேறில்லை. இல்லாவிடில் அனைவரும் அழிந்து போவோம்'' என்றான்.

ராவணனுடைய கோபம் கரை புரண்டு போயிற்று.

''தம்பியாயிற்றே என்று நீ சொன்னதையெல்லாம் இதுவரையில் பொறுத்து வந்தேன். இல்லாவிடில் இங்கேயே உன் உயிர் மாய்ந்திருக்கும்.



அடுத்த இதழில்....

● ஒரே குரலில் பேசும் இருவர்!

- என்.டி.ஆர். - புது மனைவி பிரத்தியேக பேட்டி!



ஒருவனைக் கெடுப்பதற்கு உடன் பிறந்த சத்துருவைப் போல் வேறொருவருமில்லை. பொறாமைப்பட்ட தம்பிகளும் தாயாதிகளுமே சூரர்களுக்கு அவமானமும் தோல்வியும் தருபவர்கள் என்பது உலகமறிந்த உண்மை. அவர்கள் தங்களுடைய எண்ணத்தை மறைத்து வைத்துக் கொண்டு சமயத்தில் துரோகம் செய்வார்கள். கதையில் காட்டு யானைகள் சொல்ல வில்லையா? 'நெருப்பையும் நாம் கண்டு பயப்படவில்லை. வேடர்களுடைய ஈட்டியையும் நாம் பொருட்படுத்தவில்லை. சுருக்குப் போட்டு இழுக்கும் கயிறும் சங்கிலியும் நம்மை ஒன்றும் செய்ய இயலாது. இந்தப் பாவி தாயாதி யானைகள் வேடர்களோடு சேர்ந்து கொண்டு நம்மைத் துன்புறுத்துகின்றனவே, அவை தாம் நம்முடைய பெரும் பயம்! யானைகள் கதையில் சொன்னது எவ்வளவு உண்மை! சுகமாக இருக்கும் வரையில் தம்பி சிரித்து சந்தோஷமாக இருப்பான். அபாயம் வந்த போது கைவிடுவான். பூவிலிருக்கும் தேனைக் குடித்து விட்ட பிறகு தேனீ அந்தப் பூவில் தங்காது. வேறு பூவைத் தேடிப் போய்விடும். அவ்வளவுதான் தாயாதிகள் சங்கதியும். எனக்குக் கஷ்டம் வந்த காலத்தில் நீ உதவவில்லை. வேறு யாராவது உன்னைப் போல் பேசியிருந்தால் இங்கேயே அவனை வதம் செய்து விட்டிருப்பேன். நீசனே! குலத்தை அவமானப்படுத்தப் பிறந்தவனே!'' என்று ராவணன் சீறி அதட்டித் திட்டினான்.


இப்படி அவமானப் படுத்தியதைப் பொறுக்க முடியாமல் விபீஷணன் எழுந்து, ''அண்ணா! நீர் எதை வேணுமானாலும் சொல்லலாம்! தருமத்தினின்று தவறிய நீர் எனக்கு அண்ணன் ஆவீர். சபையில் எனக்கு நீர் செய்த அவமானத்தை என்னால் பொறுக்க முடியவில்லை. கால பாசத்தால் தூண்டப்பட்டு விநாசம் தரும் வழியில் போகிறீர். நான் சொன்ன ஹிதம் உமக்குப் பிடிக்கவில்லை. காதுக்கு இனிமையாகப் பேசுவது சுலபம். உம்முடைய மந்திரிகள் அதைச் செய்து வருகிறார்கள். உம்முடைய க்ஷேமத்தைக் கோரியே நான் சொன்னேன். அது உமக்குப் பிடிக்கவில்லை. உமக்கு கோபத்தை உண்டாக்கிற்று. ராமனுடைய பாணங்கள் உம்மை எரிப்பதை நான் விரும்பவில்லை; அதனால் அல்லவோ நான் சொன்னது

''என்னை நீர் பகைவன் என்கிறீர். நீர் க்ஷேமமாக இருப்பீராக! நகரத்தையும் உம் உயிரையும் காப்பாற்றிக் கொள்வீராக, மங்களம்! நான் போகிறேன். சுகமாக இருப்பீராக! ஆபத்துக்கு உதவலாம் என்று பார்த்தேன். முடியவில்லை. உம்முடைய பெருமையைக் கண்டு பொறாமைப் படுகிறேன் என்று எண்ணுகிறீர். அழிந்து போக வேண்டிய காலத்தில் நல்ல யோசனை விஷமாகத் தோன்றும்.''

இவ்வாறு சொல்லி விட்டு, ராவணனுடைய தம்பி விபீஷணன் இனி லங்கையில் தனக்கு இடமில்லை என்று தீர்மானித்து, எல்லாவற்றையும் துறந்து அங்கிருந்து அப்போதே ஆகாயத்தில் கிளம்பி ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடம் நோக்கிச் சென்றான். அவனுடன் நான்கு ராக்ஷச நண்பர்களும் கூடச் சென்றார்கள்.

(தொடரும்)

தரம் பார்ப்பீர்!



'தரம் பார்ப்பீர், தலை முறை காப்பீர்!'
- திருவாரூரில் ஒரு கடையில் காணப்படும் வாசகம் இது.
மருந்துக்கடையோ, மளிகைக் கடையோ அல்ல! ஒரு ஒயின் ஷாப்! (பாலாஜி ஒயின்ஸ்).
இதுதாண்டா கலிகாலம்!

- சி. ராமநாதன்

"மன்னிச்சுடும்மா. அப்படி நான் பேசி இருக்கக் கூடாதும்மா."

நாகராஜன் சொல்லிவிட்டு கொல்லைப்புறம் நடந்தார்.

அவரின் வார்த்தைகள் ஏற்படுத்திய அதிர்ச்சியில் வீடு நிசப்தமானது.

வீட்டின் தலைவர், கூட்டுக் குடும்பத் தேரை ஓட்டும் சாரதி, அறுபது வயதைக் கடந்தவர், அவர் பார்வையைக் கண்டாலே வீட்டின் செல்ல நாய்கூட பயப்படும் அளவு குடும்பத்தைக் கட்டுக் கோப்பாய் வைத்திருப்பவர், தன்னைவிட வயது குறைந்த, வீட்டுக்கு மருமகளாய் வந்தவளிடம் மன்



னிப்பு கேட்டு விட்டார்.

வீட்டிலுள்ள மற்றவர்களால் அதை ஜீரணிக்க முடியவில்லை. அவர்கள் அனைவர் பார்வையும் லலிதாவைக் குற்றம் சாட்டும் விதமாய்ப் பார்த்தது.

லலிதா கூட இதை எதிர்பார்க்கவில்லைதான். இத்தனை நேரம் கோபத்தில் கத்தியவள் வாயடைத்துப் போய் நின்றாள்.

லலிதா அந்த வீட்டின் இரண்டாவது மருமகள். இரண்டு மகன், இரண்டு மகள், பேரன், பேத்திகள் கொண்ட பெரிய குடும்பம் அது.

லலிதா திருமணமாகி அங்கு வந்து இரண்டு வருடம் ஒன்பது மாதமாகிறது. ஒரு மகளும் பிறந்து விட்டாள்.

வீட்டின் சட்டதிட்டங்களை வகுப்பது மாமனார் என்றும், நிர்வாகத்தைக் கையாள்வது மாமியார் என்பதும் வந்ததுமே தெரிந்து போனது.

வந்த புதிதில் அவளுக்கும் ஒற்றுமையான சூழல் பிடித்துத்தான் இருந்தது. லலிதா சும்மா இருந்தாலும் அவள் அம்மா சும்மா இருக்க விடவில்லை.

"பெரிய குடும்பம். பாவம் நீ. இப்படி ஓடா உழைக்கத் தேய வேண்டியிருக்கு!"

"தெரிஞ்சுதானேம்மா என்னை இங்கு கல்யாணம் செஞ்சு கொடுத்தாய்?"

ஆனாலும் எத்தனை நாள்? கரைப்பார் கரைத்ததில் லலிதாவின் மனமும் கரையலாயிற்று.

இன்று காலை லலிதாவின் பெற்றோர் மகளையும், பேத்தியையும் பார்க்க வந்திருந்தனர்.

வாசலில் பால் வாங்கக் காத்திருந்த சாக்கில் லலிதாவிடம் அக்கம் பக்கம் பார்த்தடி பேசக் கொடுத்தாள் அவள் அம்மா.

"என்னமோ போ. எனக்குப் பிடிக்கலே."

"என்னம்மா?"

"உன் வீட்டுக்கு வருகிற மாதிரி ஒரு உரிமையே இருக்க மாட்டேங்குது இங்கே வந்

தால். அந்நியர் வீட்டுக்கு விருந்தாளியாய் வந்த மாதிரிதான் இருக்கு.''

'ஏன்?''

''உனக்கு மட்டும்னு ஆசையாய் எதுவும் செஞ்சு கொண்டு வர முடியலே. உன்னோட தனியாய் ஏதும் பேச முடியலே. என் பேத்திக்குக் கூட தனியாய் எதுவும் செய்ய முடியலே.''

''என்னம்மா பண்றது? வாழ்க்கைப் பட்டாச்சு இங்கே. இனிமே நினைச்சு என்ன பிரயோஜனம்?''

''நான்தான் அந்தக் காலத்துல பத்து பேருக்கு பொங்கி, வேலை செஞ்சு கஷ்டப் பட்டேன்! உனக்கு எதுக்கு இது? அழகாய் ராணியாட்டம் தனியாய் குடித்தனம் பண்ணலாமே? உன் புருஷனும் தனியாய்த் தானே சம்பாதிக்கறான்?''

யதேச்சையாய் வாசல்புறம் வந்த நாகராஜன் காதில் இது விழ, ஆத்திரமானார்.

பளிச்சென்று அவர்கள் முன் தோன்றினார்.

''நல்லாயிருக்கு சம்பந்தியம்மா உங்க பேச்சு. இப்படியா குடும்பத்தைப் பிரிக்கத் தூண்டுவீங்க? நீங்க என்ன சகுனியா? கூனியா?'' நாகராஜன் உச்சகதியில் கத்தவும், நிலைமை மாறிவிட்டது.

லலிதாவின் பெற்றோர் கோபத்துடன் வெளியேறினர். தன் பெற்றோரின் கோபம் லலிதாவைத் தொற்றிக் கொண்டது.

''எங்கம்மாவுக்கு அவமானம்னா எனக்கும் அவமானம்தான். உங்கப்பா எப்படி அப்படிப் பேசலாம்? இப்படியா குழாயடி முனியம்மா மாதிரி நாகரீகம் இல்லாமல் திட்டறது? நான் இனி இங்கே இருக்க மாட்டேன். அவர் மன்னிப்பு கேட்டே ஆகணும். இல்லைன்னா, தனிக் குடித்தனம் தான்'' என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சரியாக அடித்தாள் கணவனிடம்.

பரதன் விழித்தான் செய்வதறியாமல்.

நடுக்கூடத்தில் நின்று கத்தும் மருமகளை உற்றுப் பார்த்தார் நாகராஜன். கையைப் பிசைந்தபடி நிற்கும் மகனையும், அழத்துடிக்கும் பேத்தியையும் கவனித்தார்.

''மன்னிச்சுடும்மா.''

அவரின் ஒரே வார்த்தையில் ஸ்விட்ச் போட்டதுபோல் அனைத்து சப்தங்களும் நின்று விட்டன.

கொல்லைப்புறம் நோக்கி நடந்த கணவனைப் பின் தொடர்ந்தாள் பார்வதி.

''என்னங்க...'' என்றவளை ஆதரவுடன் கை பிடித்தார்.

''நீங்க போய்... நேத்து வந்த அந்த சின்னப் பெண்ணிடம்...'' என்று தழுதழுத்தவளை முதுகில் தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்தினார்.

''நான் பேசியதும் தவறுதானே பாரு. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்!''

அங்கு ஹாலில் லலிதா குழம்பிப் போய் நின்றாள். சண்டை போட்டு தனிக் குடித்தனம் போய்விடலாம் என்ற நினைப்பில் மாமனாருடைய மன்னிப்பு தடை போட்டு விட்டது.

இதுவும் ஒரு வழியோ? மன்னிப்பை ஆயுதமாய்ப் பயன்படுத்தி தங்களை இங்கேயே இருத்திட எண்ணமோ?

கொல்லைப் பக்கம் உள்ளே ரேழியில் மறைவாய் நின்று அவர்கள் பேச்சைக் கவனித்தாள்.

மாமனார், 'தான் பேசியது தவறுதான்' என்று சொல்வது காதில் விழ, முனைப்பாய் கேட்டாள்.

''நீங்க இப்படிப் பேசியதுக்குக் காரணம் சம்பந்தியம்மா நடந்துக்கிட்ட முறையினாலேதானே. நம்ம பையன் கூட லலிதாவை அதட்டாம வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னானே. ச்சே!'' என்று பார்வதி குறைப்பட்டாள்.

''பரதனை குற்றம் சொல்லாதே பாரு.''

''ஏன்? அவன் நடுவில் புகுந்து அடக்கியிருந்தா லலிதா அப்படி பேசியிருப்பாளா?''

''ஆம்பளைங்க குழப்பமே இதுதான்!''


''என்ன சொல்றீங்க?''

''வெளியிலே ஆயிரம் பேரை சமாளிப்பான்; ஆயிரம் பிரச்னையை ஊதி சரியாக்குவான். ஏன்னா, அது எங்க உலகம். ஆனால் வீடு என்பது ஆண்களைப் பொறுத்தவரை அந்நியம்தான்.''

''என்ன இப்படி சொல்றீங்க?''

''உண்மை பாரு. பகலெல்லாம் வெளி

கிருஷ்ணா



''மாம்பழம் விக்கறீங்களா சார்...?''
''எங்க வீட்ல மாமரமே கிடையாது.''
''பக்கத்து வீட்லேருந்து ஒரு பெரிய கிளை உங்க வீட்டுப் பக்கம் வந்திருக்கேன்னு கேட்டேன்!''

- வி. ரேவதி

யிலே உழைச்சுட்டு ராத்திரி புத்தியும், மனசும் களைச்சுப்போய் வீடு திரும்பற ஆண்களுக்கு, வீடுங்கறது இராத்தங்கற இடம்தான். மனைவியோட அன்பு, குழந்தைங்களோட பிரியம் இதெல்லாம் இருக்கற சத்திரம். யோசிச்சுப்பாரு, உனக்கே புரியும்''

''அதுக்காக? அவன் வீடுங்கறது இல்லாமப் போயிடுமா?''

''அவன் வீடுதான். ஆனால் வீட்டுப் பிரச்னையை சமாளிக்கத் தெரியாது ஆண்களுக்கு. 'பணம் வேணுமா, கேளு. தரேன். இந்த வீட்டுக் குழப்பத்துல என்னை இழுக்காதே' என்று கைதூக்கிடுவாங்க மனைவியிடம். வெளியிலே பலருக்கு மத்யஸ்தம் செய்யறவனுக்கு, வீட்டுல அம்மா, மனைவி இடையே உள்ள சண்டையை சரி பண்றது கஷ்டம்தான்.''

''அடப் போங்க!''

''நிஜம் பாரு. அப்படியே மத்யஸ்தம் செய்ய ஒரிரு முறை முயலும்போது படற அடி கண்டு வாயை மூடிக்கிறான். இப்ப நடந்ததையே எடுத்துக்க. சம்பந்தியம்மா பேசினதைக் கேட்டதும் நேரே உன்னிடம் வந்து சொல்லியிருந்தால் இப்படி பிரச்னை பெரிசாயிருக்காதே?''

''தனிக் குடித்தனம் போகணும்னு லலிதா மனசுலேயும் ஆசை வந்துடுச்சு. விட்டுட வேண்டியதுதானே? எதுக்கு நீங்க மன்னிப்புக் கேட்டு அதைத் தடுக்கணும்...?

''புரியாமப் பேசாதே பாரு. அவங்க தனிக்குடித்தனம் போனால் நமக்கு மனக் கஷ்டம்தான். ஆனால் கொஞ்ச நாளில் சரியாயிடும். ஆனால் அவங்க நிலைமை வேற மாதிரி.''

''புரியலியே!''

''பரதன் வாங்கற சம்பளம் எவ்வளவு?''

''ஆயிரத்து இருநூறு கொண்டுவரான், பிடித்தம் எல்லாம் போக.''

''குடும்பம் நடத்த இது போதுமா. வாடகை, மளிகை, அடுத்த வருடம் நம்ம பேத்தி ஸ்கூலில் வேறு சேர்த்துடுவா. இங்கே கூட்டுக் குடும்பங்கறதுனாலே வசதியாய் வாழ்ந்து பழகிட்டு, திடீர்னு பணக் கஷ்டம் வந்தா என்னாகும்?''

''என்னாகும்?''

''பணம் இல்லேன்னா ஆம்பளை மனசுல ஒரு தாழ்வுணர்ச்சி வரும். அது கோபமாய் லலிதா மேலே பாயும். அவ உடனே ஆத்திரமாகி பேத்திமேலே கொட்டுவா. தனிக்குடித்தன ஜோர் முதல்ல கொஞ்ச நாளைக்கு நல்லாயிருக்கும். பிறகு? நல்ல ஸ்கூலில் படிக்க வேண்டிய நம்ம பேத்தி சாதாரண பள்ளியில் சேர நேரிடும். பரதனோட சந்தோஷமான தாம்பத்யம் கெட நேரிடும்.''

''அதை லலிதா நினைச்சுப் பார்க்கலியே. நீங்க ஏன் கவலைப் படறீங்க?''

''அப்புறம் நமக்கும் அவங்களுக்கும் என்ன வித்தியாசம்? நாம இங்கே நெய்யும், பாலும், ஸ்வீட்டுமாய் சாப்பிடறப்ப, நம்ம மகனோ, மருமகளோ, பேத்தியோ கஷ்டப் பட்டால் நமக்கு சாப்பாடு உள்ளே இறங்குமா? லலிதா நல்ல பொண்ணுதான். சீக்கிரமே புரிஞ்சுப்பா இதையெல்லாம். இள வயசு ரத்தம். யோசிக்க விடாம துடிக்குது. பெரியவங்க நாமதான் அணை போடணும். எல்லாம் அவங்க நன்மைக்குத்தானே!'

மாமனாரின் பேச்சு முழுவதும்மாய்க் காதில் விழ, திகைத்துப் போய் நின்றாள் லலிதா.

அவள் கண்ணில் நீர் பெருக்கெடுத்தது. அது அவள் உள்ளக் கரைசலின் ஊற்று.



''நேற்று இரவு பஞ்சு மிட்டாய் தின்பது போலக் கனவு கண்டேன். விழித்து எழுந்து பார்த்தால்...''
''என்னடா ஆச்சு?''
''தலைகாணியைக் காணோம்!''

- லலிதா செல்லப்பா

பரிசு ரூ.250/-



கவிஞரைக் கண்டுபிடியுங்கள்!

ரொம்ப சுலபம். இதோ ஆறு பிரசித்தமான கவிதை வரிகள் கொடுத்திருக்கிறோம். நீங்கள் செய்ய வேண்டியது, எந்த வரி, யாருடையது என்று வரிசைப்படி கூப்பனில் எழுதியனுப்ப வேண்டியதுதான்.

முடிவு தேதி: 1.6.94

சரியான விடை எழுதுவோருக்கு, பரிசு ரூ.250. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதியிருந்தால் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். ஏராளமானோர் சரியாக எழுதிவிட்டால் குலுக்கல் முறையில் 10 பேருக்கு. ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உறை மீது ''பிரசித்த வரிகள்'' என்று குறிப்பிடவும்.

1) பூவெல்லாம் தாலிகட்டி மணப்பதில்லை
என்றாலும் பூவுக்கென்ன மணமா
இல்லை?

2) காட்டில் விலங்கறியும்; கைக்குழந்தை
தானறியும்;
பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்
என்றுரைப்பார்.

3) இத்தனைக்கும் மேலே இனியொன்று -
ஐயா நான்
செத்ததற்குப் பின்னால் நிதிகள்
திரட்டாதீர்!

4) இளமையும் செல்வமும் யாக்கையும்
நிலையா
உளநாள் வரையாது நல்லுவது ஒழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை
தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்!

5) சண்டாளி
சூர்ப்பநகை
தாடகையைப்
போல் வடிவு
கொண்டாளைப் பெண்ணென்று
கொண்டாயே- தொண்டா
செருப்படிதான் உத்தன் செல்வமென்ன
செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர்!

6) முதுகிற் புண் படாதவன் தமிழன் -
போர் எனில்
மொசர் குழல் முத்தமென் றெண்ணுவான்
மதிப்போடு வாழ்பவன் தமிழன்
வாழ்வதற்கென்று வாழ்பவன் அல்லன்.

1. ....
2. ....
3. ....
4. ....
5. ....
6. ....

என் பெயர் : ....

விலாசம் : ....


....

....

நான் வரைந்த டைனசார்-போட்டி முடிவு

ரூ.250/- பரிசு பெறுபவர்:

எ.சாமுவேல் ராஜ்குமார்
4/454, சபரிதெரு,
அன்புநகர்,
மதுரை - 625 020



கோவையின் நாஸ்டர்டாம்



உலகம் முழுவதும் உள்ள மனித குலத்திற்கு அடிமனத்தில் ஒரு சிறு ஆசை உண்டு. அதுதான் எதிர்காலத்தில் தன் வாழ்க்கை எப்படி அமையும் என்பது. இதனை ஒருவரால் அறிந்து சொல்ல இயலுமா? என்றால் "முடியும்" என்று நம்பிக்கையோடு ஆதாரங்களை அள்ளி வீசி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார் கோவை பீளமேடு நெ. 34 எண், "ஆனந்த நிலையத்தில்" வசித்துவரும் திரு. கே. சுப்ரமணியம். எம்.எஸ்சி முதுகலைப் பட்டதாரியான இவர் நாடி ஜோதிடம் பார்க்க வந்தது எப்படி? "பிரம்மரிஷி விசுவாமித்திரரின்" நாடிச்சுவடி என சுமார் இரண்டரை லட்சம் பனை ஓலைகள் இவரது குடும்பச் சொத்து. தாத்தா திரு. பரமசிவம் செட்டியாரிடம் "நாகரி" மொழியில் உள்ளதனை முறையாகப் படிக்க, பலன் சொல்லப் பயின்றவர்.

நாடி ஜோதிடம் மூலம் முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை அதிபர் திரு. பிரேமதாசா மரணத்தை முன்கூட்டியே சொன்னவர். இன்றைய பாரதப் பிரதமர் திரு. நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். வெளிநாடுகளில் இராக் அதிபர் சதாம் உசேன், லிபிய அதிபர் கட்டாபி, சவுத் ஆப்பிரிக்க எதிர்க்கட்சித் தலைவர் டி-கிளார்க், பாகிஸ்தானின் நவாஸ் ஷெரீப் மற்றும் பிலிப்பைன்ஸ், இஸ்ரேல், சீன அதிபர்கள் இவரது பட்டியலில் அடங்கும் வி.ஐ.பிக்கள். இவரது வீட்டு வாசலில் கூடி நிற்கும் பல்வேறு மாநில வி.ஐ.பி. கும்பலே இதற்குச் சான்று.

ஒருவருக்கு நாடி ஜோதிடம் எப்படிப் பார்க்கப்படுகிறது? பாரம்பரியமிக்க இந்திய புராதனக் கலைகளில் ஒன்றான இதன் புதிர் இன்னும் விடுபடாமல்தான் இருக்கிறது. வலதுகை பெருவிரல் ரேகையை மட்டும் கொடுக்கும் ஒருவர் எம்மதத்தைச் சார்ந்தவராயினும், எந்நாட்டைச் சேர்ந்தவராயினும் தேடி எடுக்கப்படும் ஓலையிலிருந்து அவரது பெயர், பிறந்த தேதி, நேரம், பெற்றோர் கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றிப் படித்து பொருள் கூறுகிறார் பன்மொழி வித்தகர் திரு. சுப்ரமணியம். நல்லவைகள் மட்டுமல்லாது நாடிச் சுவடியில் என்ன எழுதியிருக்கிறதோ அதனை அப்படியே படித்துக் கூறிவிடுகிறார். மனித வாழ்க்கையின் பல்வேறு பகுதிகள் நாடிச்சுவடியில் 12 காண்டங்களாக பாடலில் அமைந்துள்ளது.

நேரில் ஒருவரைப் பார்க்காமலேயே அவரது வாழக்கையைப் படம் பிடித்துக் காட்டும் இக்கலை கலியுகத்தின் அற்புதந்தான்.

- ADVT



* கட்டெறும்பான கதை...



* பெருந்தன்மையா?

● என். சண்முகம், திருவண்ணாமலை.

? ஆசியாவிலேயே ஒலி இரைச்சல் அதிகமான நகரங்களில் சென்னைக்கு இரண்டாவது இடம் கிடைத்துள்ளதே?

! கணக்கெடுத்தவர்கள், மார்கழி மாதத்திலும், தேர்தல் சமயத்திலும் வரத் தவறிவிருப்பார்கள். வந்திருந்தால் நிச்சயம் முதலிடமே தந்திருப்பார்கள்.

● தென்றல் கார்த்தி, நாட்டரசன்கோட்டை.

? மயிலை, பெருந்துறை தேர்தல்களில் தி.மு.க.வை ஆதரிக்கப் போவதாக பண்ருட்டியார் கூறியுள்ளாரே?

! கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக இவர் பா.ம.க.விலிருந்து பிரிந்து, இவரிடமிருந்து நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி பிரிந்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள ''அரசியல் கட்சி அல்ல'' என்றும் அறிவித்த பிறகு, இவர் ஆதரித்தால் என்ன, ஆதரிக்காவிட்டால்தான் என்ன?

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? வேலூர் அருகே நடந்த இரு பஸ் விபத்துக்கள் பற்றி...?

! எந்த விபத்துமே நமது அனுதாபத்தையும், கவலையையும் பெறுகிறது. ஆனால் விபத்துத் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் அளவுக்கு அரசின் கவனத்தைப் பெறுவதில்லை என்பது வெட்கக்கேடு. அதே சமயம் பத்திரிகைகள் கவனத்தை அளவுக்கு அதிகமாகவே பெற்று, பக்கம் பக்கமாகக் கைவேறு கால்வேறான சடலங்களின் படங்கள் பிரசுரிக்கப்படுவது அருவருப்பு.

● சாத்தன், கடலூர்.

? ''புல்லுக்கு நீர் வேண்டும் என்பதற்காக நெல்லுக்கு நீர் இறைக்கப்படுகிறது'' என்று கவிதை எழுதியுள்ளாரே, ஒரு ஐ.ஏ.எஸ்.அதிகாரி?

! ஹய்யா! மனச்சாட்சிக்கு அஞ்சுகிற, ஆட்சியாளருக்கு அஞ்சாத ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியைக் கண்டுபிடித்து விட்டோம்!

● ஜோ.ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை

? உண்மைக்குப் புறம்பாகத் தகவல்தரும் விளம்பரங்கள் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசு முடிவு கட்டியுள்ளதே?

கட்அவுட் அரசுக்கு கெட்அவுட் சொல்வார்களா?



* பிடிக்காதது?



* கை விடும்!



* இசை வாய்மிளார்!



★ காசு பண்ணாதவர்!



★ உடமையைத் திருடியது?



★ கெட் அவுட் சொன்னவர்!

! 'சோடா' என்றும் 'கிரேப் ஜூஸ்' என்றும் மாய்மாலம் காட்டி மது விளம்பரங்கள் செய்யப்படுவதைக் கண்டிப்பாகத் தடுத்தே ஆக வேண்டும். அல்லது காந்தியைத் தேசத் தந்தை என்று அழைப்பதை விட்டுவிட வேண்டும்.

● வைத்யா, திருவெண்ணெய்நல்லூர்.

? தொலைபேசித் துறை, தனியார் மயமாவது வரவேற்கத்தக்கதா?

! கேட்டவுடன் ஃபோன் இணைப்பு கிடைக்கும்; தெ. போட்டவுடன் லைன் கிடைக்குமா? சந்தேகம்தான்! பாதிக் கிணறு தாண்டினால் போதாது.

● ஏ.எஸ். மாரியப்பா, புதுக்கோட்டை.

? பாதிக்கப்பட்ட விமானப் பணிப் பெண்களிடம் மன்னிப்புக் கோரியது மன்மோகன்சிங்கின் பெருந்தன்மைதானே?

! 'மன்னிப்புக் கேட்கவில்லை; வருத்தம்தான் தெரிவித்தார்' என்று பின்னர் வந்த அறிக்கையில் பெருந்தன்மை பூஜ்யமாகி விட்டது.

● எஸ்.குமார், காரைக்குடி

? வை. கோ கறுப்பு சிவப்பை விட மாட்டேன் என்கிறாரே?

! கறுப்பு சிவப்பு அவரைக் கைவிட்டு விடும்.

● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? சோவிடம் உங்களுக்குப் பிடித்தது எது? பிடிக்காதது எது?

! பிடித்தது: நகைச்சுவை. பிடிக்காதது: அது அவரிடம் தற்போது குறைந்து வருவது.

● அ. அப்துல் காதர், சிங்கப் பெருமாள் கோயில்.

? மறைந்த முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா பற்றி?

! பகுத்தறிவு பாசறையிலும் இறையுணர்வோடு இருக்கலாம் என்று நிரூபித்தவர். கடமையே கண்ணாயிருந்தவர். அரசியலில் காசு பண்ணி அறியாதவர். கடைசி வரை வாடகை வீடுதான்! அண்ணாவிடம் கொண்ட ஈடுபாட்டினால் வசதியான வழக்கறிஞர் தொழிலை விட்டு வந்து கடைசி வரை கட்சிக்கு விசுவாசமாக இருந்தார். அமைச்சராகவும், கட்சியில் பொருளாளராகவும் அரும்பணியாற்றிய நேர்மையாளர். வாயில்லா ஜீவன்களிடமும் அன்பும் பாசமும் காட்டிய நல்லிதயம். அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்த நண்பர் அதிர்ச்சியில் இறந்ததும், வை.கோ. குழுவினருக்கு அவருக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு மறுக்கப்பட்டதும் சோகத்தில் பிறந்த சோக நிகழ்ச்சிகள்.

❑ ரூ.25 பரிசு பெறுபவர்.
தி.ரங்கசாமி,
கலாமன்றம், வேலாண்டிபாளையம்,
கோவை. 641 025.

● தி.ரங்கசாமி, கோவை. ❑

? தென் ஆப்பிரிக்காவில் உள்ளது போல் நம் நாட்டிலும் விகிதாசார அடிப்படையில் தேர்தல் நடக்க சட்டத்தைத் திருத்தினால் என்ன? மக்களுக்கு நன்மைதானே?

! நிச்சயமாக. ஆனால் தேர்தல் சீர்திருத்தம் என்றால் பிரதம தேர்தல் கமிஷனரின் அதிகாரங்களைக் குறைப்பதுதான் என்று அர்த்தம் பண்ணிக் கொண்டு செயல்படும் மத்திய அரசு இருக்கும் வரை... ஹூம்... சுயநல அரசியல்வாதிகளுக்குத்தான் கொண்டாட்டம்.

● லல்லி பாலகிருஷ்ணன், மதுரை.

? அதிர்ஷ்டம், உழைப்பு எது நிலையான உயர்வைத் தரும்?

! இரண்டுமில்லை; நேர்மைதான் அனைத்திலும் முக்கியம் என்பது இம்ரான்கான் விஷயத்தில் நிரூபணமாகி விட்டது பாருங்கள். அதிர்ஷ்டமும் உழைப்பும் அவரை எத்தனை உன்னத நிலைக்கு உயர்த்தின! கடைசியில் சோடாபாட்டில் மூடி சுரண்டலும், வாஸ்லேன் தடவலும் அம்பலமாகி அதலபாதாளத்துக்குக் கொண்டுபோய் விட்டதே!

● கே.ஆர்.ரவிக்குமார், கும்பகோணம்.

? இடைத் தேர்தலில் கட் அவுட் அரசுக்கு கெட் அவுட் சொல்வார்களா?

! அது தெரியாது; ஆனால் கட் அவுட்டுக்கு மட்டும் கெட் அவுட் சொல்லி விட்டார் சேஷன், 'அதிக பட்சம் ஐம்பதாயிரம் ரூபாய் செலவு சட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்துவேன்' என்று அறிவித்ததன் மூலம்!

● ரா.நாச்சிமுத்து, போடிநாயக்கனூர்.

? பெருந்துறை தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக டி.ராஜேந்தர் பிரசாரம் பண்ணப் போகிறாராமே?

! தோழமைக் கட்சிகளிடையே தர்ம சங்கடத்தை ஏற்படுத்த விரும்ப வில்லை என்று கூறி 'ஜகா' வாங்கிவிட்டாரே!

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.


உயர் வரிசைகளிலே!

பாம்பே டையிங் பள்ளிச் சீருடைத்துணிகள் அவர்களது எதிர்காலம் போலவே ஒளிமிகுந்தவை.

ஒயிலான உமது சின்னஞ்சிறு ''நிபுணர்களுக்கு'' மிகச்சிறந்ததே தேவை. எனவே, முன்னைவிடச்சிறந்த பள்ளிச்சீருடைத் துணிவகைகளைத் தருகிறது பாம்பே டையிங்.

- பாலியெஸ்டர் ப்ளெண்டெட் - சுருக்கம் விழாது. குறைந்த பட்ச இஸ்திரியே போதும்.
- நீடிப்பவை - நீடித்துழைக்கும், நிறம் மங்காது
- கடுமையான தினத்திற்கு மென்மையாக, வசதியாக இருக்கும்.
- எளிதில் துவைக்கலாம்.

உங்களுக்குத் தேவையான அதே நிறத்தில் கிடைக்கும்





பாம்பே டையிங் பள்ளிச் சீருடை அணிவரிசைக்கு உட்பட்டவை:

துணிகள்

தூய பருத்தி மற்றும் பாலியெஸ்டர் ப்ளெண்டுகளில் சூட்டிங்ஸ் மற்றும் ஷர்ட்டிங்ஸ்

ரெடிமேட்கள்

ரெடிமேட் பள்ளிச் சீருடை ஷர்ட்ஸ் மற்றும் டிரௌஸர்ஸ், டைஸ், ஸாக்ஸ் மற்றும் பள்ளி பைகள்

பாம்பே டையிங்

ஸ்தாபிதம் 1879

SEASONS/BD/114/TAM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka